# புராண மதங்கள்



அண்ணாதுரை

ன்னன்

# புராண மதங்கள்

## அண்ணாதுரை

வள்ளுவர் பண்ணை
சென்னை-1.

முதற்பதிப்பு 1952

உரிமை உடையது

75772

விலை ரூபாய் ஒன்று

விற்பனை உரிமை:—

எம். எஸ். ராமுலு கம்பெனி
286, தைரு பஜார், சென்னை-1

# பயன்கொள்க!

அறிஞர் அண்ணாவின் பல அரிய கருத்துக்களை திரட்டித் தொகுத்து தமிழகத்தின் முன் படைத்துள்ளோம். அதை ஏற்று பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதும் தெரிந்தோம். ஆகவே தாழ்ந்தும், தேய்ந்து கிடக்கும் தமிழகம் புராண – மதங்களில் எப்படி அழுந்தி கிடக்கிறது என்பதை விளக்கவும் அறியாமையைப் போக்கவும், **"புராண மதங்கள்"** என்ற தலைப்பில் அண்ணாவின் கருத்தினை இப்போது நாட்டுக்குப் படைக்கின்றோம். புராண-மதங்கள் பற்றி அவர் தம் ஆராய்ச்சிக் கருத்துக்கள் அரும்பாடு பட்டு தொகுத்து வெளியிட்டுள்ளோம். இதை நல்ல முறையில் தொகுத்து உதவிய நண்பர் **"ஊடுருவி"** அவர்களை நாங்கள் மறக்க முடியாது. தமிழகமும் அவர் உழைப்பினை போற்றியே ஏற்கும் என்பதும் நாங்கள் அறிவோம். எனவே இதை உங்கள் முன் வைக்கின்றோம் ஏற்றுப் பயன் கொள்க!

**வணக்கம்**

**பண்ணையாளர்**

# நோக்கம்

இந்த நாட்டு மக்களின் அறிவை வளர விடாமல் தடுத்து வரும் சிலவற்றில் புராண - மதங்களும் சேர்ந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது. புராணம் - புண்ணியக் கதை - மதம் - மனிதனின் உயிர்நாடி என்று கூறிக்கொண்டு அதனையே கட்டியழும் ஒரு சில வைதிகர்களுக்கும், புராண - மதங்களில் இருப்பது என்ன என்று தெரிந்துகொள்ள விழையும் சீர்திருத்த நோக்கம் படைத்த ஆராய்ச்சியாளருக்கும் இந்நூல் பெரிதும் துணை புரியும், என்பதே இதைத் திரட்டியதின் நோக்கமாகும்.

மதம்-மக்களுக்கு அபின்; புராணம்-போதை தரும் லேகியம். என்று கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். இருந்தபோதிலும்; திராவிடரின் தனிப் பெருந் தலைவர்-சொல் அரசர், பேனு வீரர்—பகுத்தறிவு போதகர்—அறிஞர் அண்ணாதுரை அவர்கள் புராண மதங்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதை தமிழ் மக்களுக்கு விளக்கவே இதை அவர் எழுதிய, பேசியவைகளில் இருந்து தொகுத்து நூலாக்கப்படுகிறது. இதை அறிவுக் கண்ணாடி போட்டு படிப்பவர்களுடைய, மத — மயக்கம நீங்கும், புராணப் போதை தெளியும் என்பது என் துணிவான எண்ணம்.

புராண மதங்களைப்பற்றி அவர் என்ன கூறுகிறார் என்பதை அடுத்த பக்கத்திலிருந்து விளக்கப்பட்டுள்ளது. ஆகவே படியுங்கள் - தெளியுங்கள் - பிறருக்கு - தெளிவு படுத்துங்கள் நீங்கள் விரும்பினால்!

வணக்கம்

ஊ டு ரு வி

# புராண-மதங்கள்

பெரிய புராணத்தைப் பற்றிய நமது கட்டுரைகள், தமிழ் நாட்டுச் சைவமெய்யன்பர் கூட்டத் தலைவர்கட்கும், முத்தமிழ் கற்ற வித்தகர்கட்கும் அனுப்பப் பட்டதாம், கோபங்கொண்ட நண்பரொருவரால்! நல்ல காரியம் நடைபெற்றது. இதுபோன்ற கோபம், இலாபமே! அந்தத் "தலைவர்கள்" நமது கண்டனத்தைப் படித்துவிட்டு, என்ன எண்ணுவார்கள்? கழுவேற்றுகிற காலமாக இல்லையே! கடமபா! என்று வருந்துவர்; வேறென்ன செய்வர். சபிக்கத் தெரிந்தவர்கள் அதிலே ஈடுபடுவர்; ஆனால், நமது வாதத்திலே இன்ன இடம் ஒடிசல் என்று எடுத்துக் காட்டத் துணியார். பல "அன்பர்களுக்கு" நமது கண்டனச் சுருள் அனுப்பப் பட்டது கேட்ட நாம், மேலும் அவர்களுக்கு விருந்தளிக்க, பெரிய புராணத்தைப் பற்றிய விளக்கத்தை விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம். இளைஞர் உலகம் இன்று, எதெது தேவை என்று எண்ணுகிறதோ, அவைகள் யாவுமோ அல்லது அவைகளிலே பெரும் பகுதியோ, புராண இதிகாசங்களிலே உண்டு என்று கூறுவதன் மூலம், மேலும் சில நாட்களாவது, அவைகளுக்கு உயிர்தர முடியுமா என்ற முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளவாகள், பெரிய புராணத்திலே, சீர்திருத்தக் கருத்து இருப்பதாகவே பேசுகின்றனர். இதனால், அந்தப் புராணங்களிலே, சீர்திருத்தக் கருத்துகள் உள்ளனவா இல்லையா என்று ஆராயப் புகுமுன், ஒரு உண்மை தெளிவாகிறது. அதாவது, சீர்திருத்தம் அவசியம் என்பதை இவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள், அதற்கான வேலையில் பலர் ஈடுபட்டுள்ளதை உணருகிறார்கள். வேறு விஷயங்களிலே மக்கள் கொண்டுள்ள அக்

கரையைவிடச் சற்று அதிகமாகவே சீர்திருத்தத் துறையிலே அக்கரை செலுத்தவேண்டு மென்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அறிவாளிகள் என்ற பட்டிக்குத் தம் பெயர் பொறிக்கப்பட வேண்டுமானால் தமக்கும் சீர்திருத்தத்திலே ஆர்வம் இருப்பதாகவும், அதற்கான பணியிலே தாம் ஈடுபட் டிருப்பதாகவும், மற்றவர்கள் சீர்திருத்தத்துக்காக எங்கெங்கோ தேடி அலைகிறார்களே, பாவம், இதோ நாம் கண்டு பிடித்திருக்கிறோமே, இதனைக் கூறவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பதாகவும், காட்டித் தீரவேண்டிய அளவுக்கு நாட்டு மக்களின் நினைப்பின் நிலைமை இன்று இருப்பதும், தெளிவாகத் தெரிகிறது. இனாகுலேஷன் சரியான முறை என்று சிலரும், அது தேவையில்லை என்று சிலரும் பேசிக்கொள்கிறார்கள் என்றால், இரு கருத்துகளிலே, எது தக்கது என்று ஆராய்வதற்கு முன்பே, ஊரிலே, பிளேக்—காலரா போன்ற கொடிய வியாதி பரவி இருக்கிறது என்பது ஏற்பட்டு விடுகிறது கருத்து வேற்றுமைக்கு இடமின்றி. அது போலத்தான் இன்று, புராணங்களிலே சீர்திருத்தக் கருத்துக்கள் உண்டா இல்லையா, என்பதிலே உள்ள கருத்து வேற்றுமை கருத்து வேற்றுமைக்கே இடமில்லாத ஒரு கருத்து நாட்டிலே இருப்பதைக் காட்டுகிறது; அதாவது **சீர்திருத்தம் தேவை** என்பது. இது வரவேற்கப்பட வேண்டிய நிலைமை.

* * *

**சீர்திருத்தம் தேவை** என்பதை அனைவரும், 'செக்கு மாட்டுச் சுபாவக்காரர்' நீங்கலாக மற்றவ ரனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்; ஒப்புக்கொள்பவர்களில் சிலர், என்ன செய்வதென்று சிந்திக்காமல் இருக்கிறார்கள். சிலர் சிந்திக்கிறார்கள், தெளிவு பிறக்காமல் குழம்புகிறார்கள். சிலர் சிந்தித்து வழி தெரிந்து, வழி, படுகுழிகளும், பாறை கோரைகளும் நிரம்பிக் கிடப்பது கண்டு பயந்துவிடுகின்றனர். சிலர் பாதிப்பாதை போகின்ற

னர். பிறகு முன்னேறிய வேகத்தைவிட, அதிக வேகமாக, மிரண்டோடுகிறார்கள் பின்னோக்கி. மற்றும் சிலரோ, பாதை எப்படி இருப்பினும் சரி, அவ்வழி சென்றே தீருவது என்று துணிந்து செல்கின்றனர். அங்ஙனம் அஞ்சா நெஞ்சுடன் செல்பவர்களைத்தான், 'தம்பி நில்!' என்று கனிவுடன் அழைத்துச் சீர்திருத்தத்துக்கான செம்மையான கருத்துக்கள் இங்கே உள்ளன, என்று கூறி, செல்லுக்குத் தப்பிய சில ஏடுகளைக் காட்டுகின்றனர். செந்தமிழ் கற்ற அன்பர்கள். அவர்கள் காட்டும் ஏடுகளிலே, அவர்கள் கூறுவதுபோலச் சீர்திருத்தக் கருத்துக்கள் உள்ளனவா என்று ஆராயப் புகுமுன்பு, நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்குக் காரணம், அவர்களும் சீர்திருத்தத்தை வரவேற்கிறார்களே என்பதுதான். அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டத்தானே வேண்டும்! ஆனால் இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், தென்னை மரத்தின்மேல் ஏறிய கள்ளனை விரட்டும்போது, 'காய் திருடச் செல்லவில்லை, மாட்டுக்குப் புல் எடுக்க ஏறினேன்' என்று சொன்னதாக உள்ள கதை இருக்கிறதே, அந்த 'ரகமாக' இருக்கிறது இவர்களின் வாதமும். 'தென்னையில் ஏதடா தம்பி புல்?' என்று கேட்டவருக்கு, 'இல்லை என்று தெரிந்ததால்தான் இறங்கி விடுகிறேன்' என்று சொன்னானாமே கள்ளன், அதுபோலவே, புராணத்திலே போய் சீர்திருத்தக் கருத்தைத் தேடுகிறாயே இருக்குமோ என்று கேட்கத் தொடங்கினால், 'இல்லை என்பதைக் கண்டு சொல்லத்தான் இத்தனை ஏடுகளையும் ஆராய்ந்தேன்' என்று பேசுகிறார்கள்.

* *

புராணங்கள், பக்தி மார்க்கத்துக்கான ஏடுகள், இலக்கியச் சுவையுடன் இருப்பினும் சரி, இல்லாது போயினும் சரி, அந்த ஏடுகளைப் படித்து, 'ஐயனின்' பெருமையை, 'அம்மை'யின் அருமையை, 'அடியவர்' சிறப்பை உணரலாம் என்று கூறமுடியுமே தவிர,

அவைகளின் மூலம், சீர்திருத்த கருத்துக்களைப் பெறலாம் என்று எண்ணுவது பயனற்ற நினைப்பு. முதலில், இதனை "மெய்யன்பர்கள்" தைரியமாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதை ஒப்புக்கொள்ளாமல், "இது வெறும் புராணமல்ல! இதிலே உள்ள புதை பொருள் அமோகம். இதிலே சரிதம், பூகோளம், விஞ்ஞானம், தத்துவம், கணிதம், சீர்திருத்தம் போன்ற இன்ன பிற உண்டு" என்று பேசுவது, ஆராய்ச்சி மனப்பான்மைக்கு அத்தாட்சி என்று சிலர் எண்ணுகிறார்கள்; உண்மை அது அல்ல. பல இருப்பதாகச் சொன்னால் 'சிலராவது' தேறுதா என்ற சபலம், நீண்ட பட்டியைத் தந்தால், யாருக்கு எதெதில் பிரியமோ, அதற்காக வென்று, புராணத்தை நாடுவர் என்ற ஆசை இல்லை என்றால், திட்டமாகத் தெளிவாக வரையறுத்துக் கொண்டு பேசுவர். மதபோதனையை, எளிதாக்கவும், பாமரர் மனமும் பரவச மடையவும், சிக்கலான தத்துவங்கள் பயன்படாது என்று கண்டவர்கள், எந்த மதத்துறையிலே தங்களுக்கு அக்கரை இருந்ததோ, அதனைப் பரவச் செய்வதற்குக் கண்டுபிடித்த சாமர்த்தியமான வழி புராணம், அவர்களின் எண்ணம், அந்தக் காலத்தின் கூறு. எனவே அத்தகைய புராண போதகர்கள், பழிக்கப்பட வேண்டியவர்க ளல்ல; அவர்கள் அந்தக் காலத்தில், தங்களுக்கு யுக்தமானது என்று எதை நம்பிச் செய்தார்களோ, அதனை, விடாப்பிடியாக இன்று கட்டி அழுகிறவர்களும் மக்களின் இன்றைய அறிவுத் தாகத்தைத் தீர்க்க, அந்தப் புராணமே போதும் என்று நம்புகிறவர்களும், உலகில் தோன்றியுள்ள எந்தப் புதுக்கருத்தும், புராணத்திலே உண்டு என்று மயக்க மொழி பேசுவோரும் . ஆகிய திருக்கூட்டம் இருக்கிறதே, அதுவே, இன்று கண்டனத்துக்கு ஆளாகிறது. "இதோ அஞ்சு கண்ணன் வருகிறான், சாப்பிட்டு விடு" என்று மிரட்டி, அன்பையும் அன்னத்தையும் கலந்து குழந்தைக்கு ஊட்டும் தாயிடமல்ல கோபம்

நமக்கு, குழந்தைப் பருவம் கடந்து குமரனான பிறகு' 'ஐஞ்சு கண்ணனே' நம்பு என்று கூறும் மூதாட்டியிட மும், இவ்வளவு வயதுதான அம்மையார், உண்மை அனு பவமின்றி இதனை உரைத்திடுவரோ என்று எண்ணுங் கால், ஐஞ்சு கண்ணன் என்று ஒருவகையினர், இருக்க வுங் கூடும் என்றே எனக்குத் தோன்றுகிறது என்று பேசுபவர்களிடமும், ஐஞ்சு கண்ணன் என்று நமது ஔவையார்கள் கூறுங்காலே, ஐயகோ! ஈதென்ன சிறு மதி எனறு சீறும் சீர்திருத்தவாதிகாள் கேண்மின்! ஐஞ்சுகண் என்றால், ஐந்து கண்கள் என்பதல்ல பொருள், அஞ்சு கண் என்றால் என்ன? கண்டவரை அஞ்சச் செய்யும் கண்! இதனையே தான் தாய் மொழிகி றாள் நந்தாய் மொழியினைப் பழிக்கலாமே? என்று பேசும் சொல்லில் செப்படி வித்தை செய்து காட்டு பவர்களிடமுமே, அறிவு உலகம் கோபிக்கிறது—அவர் களின் போக்கையேதான் கண்டிக்கிறது. புராணத்தில் மதபோதனை, ருசிகரமான கதைகள் மூலம் அமைக் கப்பட்டுள்ளன. அவைகளிலே, வேறு துறைகளுக்குத் தேவையான கருத்துக்களைத் தேடுவது வீண்வேலை— அல்லது பிறரை ஏய்க்கும் வேலை. 'தென் இந்திய ரயில்வே கயிடைப்' புரட்டிப் பார்க்கும் ஒருவன், டில்லிக்கும் அரித்துவாரத்துக்கும் இரயில் புறப்படும் நேரத்தைக் கூற எங்ஙனம் இயலும்! ஒரே பாதையின் 'கயிடாக' இருந்தாலுங்கூடப், பழைய கயிடைப் புரட் டிப் பயனிராதே. ஏன், இந்தச் சாதாரண விஷயத்தைப் புரிந்துகொள்ள, பசுபதி பாசம் என்பன போன்ற பிர மாதமான கொள்கைகளைப் பற்றிய சிக்குகளை அறுக் கும் பெருமதியினர், சிரமப்படுகின்றனர். புராணத்தை, மதபோதனை ஏடு என்று ஒப்புக்கொண்டு, அதற்காகத் தான் அவை பயன்படும் என்பதைத் தைரியமாக ஒப் புக்கொள்ளவேண்டும். மலச்சிக்கல் முதற்கொண்டு மார்வலி வரையிலே உள்ள 124 வியாதிகளைக் கண்டிக் கும் சூரணம், நோய் இல்லாவிட்டாலும் சாப்பிடலாம்,

தேக ஆரோக்கியத்துக்கு; அதுமட்டுமில்லை, பித்தளைப் பாத்திரங்களை. இந்தச் சூரணத்தை கொண்டு துலக்கினல், அசல் தங்கம்போல் பிரகாசிக்கும், என்றுவகையுள்ள எந்த வைத்தியராவது, தமது மருந்துபற்றிக் கூறுவாரா? அனுபவமும் திறமையும் உள்ளவைத்தியர் ஒரே மருந்தையே கூட, இன்ன விதமான தேகமுள்ளவர் தேனிலும், இன்ன விதமுள்ளவர் பாலிலும் கலந்து சாப்பிட வேண்டும் என்று சொல்வார்களே! பிறவிப் பிணியைப் போக்கும் மருத்துவ முறையாம் மார்க்கம்! அதற்காக ரசாயனம், சர்பத்து, லேகியம், கஷாயம், மாத்திரை போன்ற பல மருந்துவகைகள் உண்டு, அவைகளிலே, புராணம், போதை தரும் லேகியம், தத்துவம் கஷாயம், காவியச் சுவையுடன் கூடிய கதைகள் சர்பத்து போன்றவை எம்மிடம்உள்ள இம் மருந்து எப்பிணியும் போக்கும், பிணிபோக்கி மட்டும் மல்ல, பீடை நீக்கி, அது மட்டுமல்ல, பித்தளையைப் பொன்னு மாக்கும் என்று பெருமை பேசுவது, அழகா, நியாயமா, யூகமுள்ள செயலாகத்தான் அது மதிக்கப்படுமா?

* * *

கற்பனை லோகங்களைச் சித்தரித்த கவிவாணர்கள், கண்டனத்துக்கு உள்ளானதற்குக் காரணம் என்ன? அந்தக் கவிவாணர்களின் சித்திரங்களை, வெறும் கற்பனைகள் என்று ஏற்றுக்கொண்டு பேசாமல், அந்தக் கவிவாணர்களைத் தாங்கிக்கொண் டிருப்பதாகக் கருதும் கலாவாணர்கள், புலவர்கள் குழு, அவை கற்பனையல்ல, அவைகளிலே வரலாறு மிளிருகிறது. சீர்திருத்தக் கருத்துக்கள் பூத்துக் கிடக்கின்றன, என்று பேசுகிற போக்குதான். சில்லறை அதிகாரியின் சீற்றமும் சிறு செயலும், எங்ஙனம் ஆட்சியையே மக்கள் அலட்சியப் படுத்தவும் கண்டிக்கவும் தூண்டுகின்றதோ, அது போலவே, இந்தப் 'புலவர்' என்போரின் போக்கே, கவிவாணர்களைக் கண்டனத்துக் குரியவர்க ளாக்கிவிட்

டது! கவிவாணர்களுக்கு முதல்தரமான கேடு செய்ப வர்கள், கவிதா மண்டலத்துள் உறைபவர், கவிதாமணி களைக் காக்கக் கடமைப்பட்டவர், என்று கனத்த குரல் எழுப்பி, நண்பரென நடிப்பவர்தாம்.) குளத்து நீர் குடிக்க உதவும் என்பது பொது உண்மை. ஆனல் எல்லாக் குளமுமா? இல்லை! சில குளிக்க மட்டுமே உதவும்! சில மாடு குளிப்பாட்ட மட்டுமே உதவும்! அதுமட்டுமில்லையே! குடிககும் நீர் உடைய குளமே கூட வெப்பம் அதிகமாகி, வறண்டு கிடக்கும்போது, சேறு மேலிட்ட நிலையில் இருக்குமானல், குடிக்கப் பயன்படாது. குளம்தானே, குடி தண்ணீர்தான் இது, என்று கூறுபவர் யார்? அதுபோலப் புராணங்கள் சேறு நிரம்பிப்போன குட்டைகளாகவும், (மட்ட அறி வுக்கு மட்டுமே பயன்படக் கூடிய விதத்திலே) மாடு புரளும் மடுவாகவும், பலப்பல விதத்திலே உள்ளன, ஊற்று நீர் காண உலகு துடிக்கிறது, இங்கோ, இவர் கள் குழம்பிய குட்டை, தூர்ந்துபோன திருக்குளம், துவர்ப்பு நீர்ப்பள்ளம், இவைகளிலே புகுந்து நீராடு கிறார்கள், போதாக்குறைக்கு, வாலிபர்களையும் அழைக் கிறார்கள். "வாரீர் நீராட!" என்று. வருவாரா? நல்ல முறையில் நடத்தப்படும் நகராட்சியிலே, தீரமான ஆணையாளர் இருந்தால், அவர், நாற்றமடிக்கும் குட் டைகளைத் தூர்த்துவிடச் சொல்வார், இல்லையேல், அங்கே எவரேனும் குளித்தோ, அந்நீரைக் குடித்தோ, நோய் கண்டு இறந்து படுவரோ, அதன் பயனய் ஊரி லேயே கூட நோய் பரவக் கூடுமே, என்று எண்ணி, அதுபோலவே, தன்னுட்சியிருந்து, அது தகுதியானவர் களிடமும் இருக்குமானல், அறிவுத் தாகத்தைத் தீர்க்க முடியாத இந்த ஆபாசபள்ளங்களை மூடிவிட்டு, புதிய ஊற்றுகளைக் கண்டு பிடிப்பர். நீர் நிலையங்களையும் அமைப்பர், இன்று குட்டையைப் புரட்டும் நாற்ற மடிக்கும் குளத்துக்குக் காவல் புரிவதைப் பெரியதோர் சேவை யென்று கருதுபவர்கள், அந்த நீர் நிலையங்களிலே

வேலை பெறலாம், இன்பம் உறலாம். ஏன், அவர்கள் இதற்குத் தங்களைத் தயார் செய்துகொள்ளக்கூடாது. இன்றளவுவரை, இடிந்த கோட்டைகள், சரிந்த மதில்கள், தூர்ந்துபோன அகழிகள் ஆகியவற்றைக் காட்டி, ஆங்காங்கே சிலர்" இது துரோபதை மஞ்சள் அரைச்ச இடம்," "இது பீமராஜாவின் பாதம் பட்டதால் ஏற்பட்ட பள்ளம்." "இது ஏகலைவன் கட்டைவிரலிலிருந்து ஒழுகிய இரத்தத்தின் கறை" என்று காட்டிப் பணம் கேட்டுப் பிழைக்கும், "வழிகாட்டுவோர்" போலிருக்க வேண்டும்? எவ்வளவு அறிவு இந்தச் சத்தற்ற காரியத்திலே பாழாக்கப்படுகிறது, என்பதை எண்ணி வருந்தி; இவர்களைக் கண்டிக்கிறோமே தவிர வேறு என்ன!

* *

புராணங்களிலே,எதற்காகச்சீர்திருத்தக்கருத்தைப் புகுத்தப் போகிறார்கள். பசுவும் புலியும் ஒரே துறையில் நீர் குடித்தது, பரமசிவன் ரிஷபவாகனரூடராக வந்து சேர்ந்தார், வெட்டப்பட்ட தலை மீண்டும் ஒட்டிக் கொண்டது, என்ற அற்புதங்களைப் புராணங்களிலே புகுத்தி, இவை யாவும் ஈசனை நேசித்ததன் பலன் என்று முடித்து, இத்தகைய மேலான பலனை, ஆண்டவன் அருளைப் பெறவேண்டுமானல், நீங்களும் "பக்தி செய்து கொண்டிருங்கள்" என்ற உபதேசம் செய்ய இந்தப் புராணங்கள் எழுதப்பட்டன. இதிலே, சீர்திருத்தம் நுழைய என்ன அவசியம் இருக்க முடியும்? சீர்திருத்தம் என்றால் என்ன? இருப்பதைச் சீராகும்படி திருத்துவது. கெட்டுக்கிடக்கிறது, ஆனல். திருத்தக்கூடிய அளவிலே இருக்கிறது, திருத்தாவிட்டால் கேடுபோய், சீராகிவிடும் என்பதுதானே அதன் பொருள். அடியார்கள், எதைக் கெட்டுக் கிடக்கிறது என்றார்கள்? சமூகத்திலே ஜாதிபேதம் தலைவிரித்து ஆடுகிறது, அதை ஒளித்தாக வேண்டும், எல்லா மக்களையும் ஒன்றுபடுத்திடவேண்டும், ஏழை பணக்காரன் என்ற பேதத்தைப்

போக்க வேண்டும், சேரிகளைச் சீர்திருத்த வேண்டும், உழவனின் உழைப்புக்குத் தக்க ஊதியம் தரவேண்டும், என்ற இன்னோரன்ன பிற சீர்திருத்தங்கள் தேவை என்று செப்பினரா? அதற்காக, அவர்களிடம் அன்பு காட்டிய அரசர்களிடம் வாதாடினரா? பிரச்சாரம் புரிந்தனரா? இல்லையே! அவர்களுடைய கவலை எல்லாம், பக்தி பரவ வேண்டும், பரமனைத் தொழ வேண்டும், மூர்த்தி ஸ்தலம் தீர்த்த யாத்திரைகளின் பெருமை மக்கள் அறிதல் வேண்டும் என்பதிலே சென்றதே யொழிய, இன்று நாம், சீர்திருத்தம்'' என்று எண்ணு வதிலா அவர்கள் அக்கரை காட்டினர்? காட்டி யிருக்க முடியுமா?

ஒரு கட்டிடம் கலனுகி யிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அதைப் புதுப்பிக்க ஆரம்பிக்கிறோம், அதற்கான அதிகாரி திட்டம் தீட்டுகிருர். முதலில் அவர் கேட்பார் இந்தக் கட்டிடம் கட்டி எத்தனை வருடங்கள் ஆயிற்று என்று, இந்தக் கட்டிடம் தாது வருடப் பஞ்சத்திற்கு முன்பு கட்டப்பட்ட தென்று நம் தாத்தா கூறியதாகக் கூறிவோம். ஓ! அப்படியா! மிகப் பழைய கட்டிடம்; ஆகையால்தான் கலனுகி விட்டது என்று அவர் கூறுவார். பழைய கட்டிடமா யிருந்தாலும் கடைக்கால் எத்தனை அடி ஆழம் என்பார். 10, 15, அடி என்போம், மணல் எத்தனை வண்டிகள் கொட்டினார்கள் என்ருல் 40, 50 வண்டிகள் என்போம்; பாலாற்று மணலா வேகவதி ஆற்று மணலா என்ற கேள்வியும் பிறக்கும். வேகவதி ஆற்று மணல் தான் என்போம். அது உப்புமண் கலந்த மணல் அதனுல்தான் சீக்கிரம் உளுத்துப் போய் விட்டது. அதை அகற்றி உரமான மணலைப் போடவேண்டும் என்பார் அவர். அதுபோலத்தான் சமுதாயம் என்னும் கட்டிடமானது கலனுகிச் சரியும் நிலையிற் கிடக்கிறது. நம் சமுதாயத்தின் அடிப்படை சரியல்ல. அது உவர் மண்ணுல் உண்டாக்கப்பட்ட அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்

பட்டிருக்கிறது, எனவே, அது காலப் போக்கில் சரிகி றது. அதுவும நாம் காற்று வசதிக்காக மாடிமேல் மாடி கட்டிக்கொண்டே செல்லச் செல்ல சென்னையில் சரிந்த "பிருதிவி இன்ஷியூரன்ஸ்" கம்பெனி கட்டிடம்போல் விழுந்துகொண்டேதான் இருக்கிறது. சரிந்த கட்டிடத் தின் சாரலிலே நின்று கொண்டு நமது புலவர் பெருமக் கள் பெரிய புராணத்தையும் கம்ப இராமாயணத்தையும் ஓதிச் சரியாமல் செய்யப் பார்க்கிறார்கள். தேசியத் தோழர்களோ, தக்ளியையும் இராட்டினத்தையும் கொண்டு சரியும் கட்டிடத்தைத் தாங்கத் துடிக்கின்ற னர். வேதாந்திகளோ கீதையும், வேதமும், தத்துவ விசாரணையும் சரிவைச் சமாளிக்கும் என்று நம்புகின்ற னர். எல்லோரும் கட்டிடம் சரிவதைக் காண்கிறார் கள்; ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனல் சரிவதைத் திருத்துவது எப்படி? சரியாமல் அமைப்பது எப்படி? என்பதிலேதான் தகரார்.

தோழர்களே! நான் கூறுகிறேன், இந்தச் சமுதா யம் சரிகிறது, சரிந்துகொண் டிருக்கிறது, நெடு நாட்க ளாகவே சரிந்து கொண்டு வருகிறது. நாம் அப்படிப் பட்ட வீறுகெட்ட சமுதாயத்தில், சின்னபின்னமாக் கப் பட்டச் சமுதாயத்தில், சிதறிக் கிடக்கும் சமுதாயத் தில் வாழ்கிறோம். சமுதாயம் ஆட்டங்கொடுத்து ஆடு கிறது; இந்த நிலையிலே நாம் நம்மை உணர்ந்து, நம் தேவையைத் தெரிந்து, நம் சமுதாயத்தை மாற்றி அமைக்க முற்படா விட்டால் சமுதாயம் ஆடுவது தெரியாமலேயே நாம் அமிழ்த்தப்பட்டு விடுவோம். நான் கூறுவது வேடிக்கை பேச்சல்ல. நடக்காத, நடக் கக்கூடாத, நடக்கமுடியாத செயலும் இல்லை. அமெரிக் காவிலே வாழ்ந்திருந்ததாகச் சொல்லப்படும் சிவப்பு இந்தியர்கள் இன்று எங்கே? அவர்களது வரலாறு

எங்கே? நம் நாட்டு பழங் குடிகள் என்று கூறப்படும் தோதவர்கள் இன்று எங்கே? எப்படி வாழ்கிறார்கள்? எண்ணிப் பாருங்கள்.

* *

மதம் என்பது இந்த உலக வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அதன் கவனமெல்லாம் மறு உலகத்தைப் பற்றியதுதான். அதுதான் அப்படி என்றால் தற்கால சமுதாய ஸ்தாபனங்களோ மக்களின் சம தர்மத்தை அழித்து தீங்கு விளைவிப்பனவாக இருக்கின்றன. ஜாதிப் பிரிவு முறை, பாலிய விவாகம், கூட்டுக் குடும்ப நிர்வாக வழக்கம், தர்மத் திட்டம் முதலியவை யாவும் ஜனங்களின் சமுதாய முன்னேற்றத்திற்கும் தொழில் அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையாயிருந்து வருகின்றன.

ஜாதி முறை, சமுதாயப் பிற்போக்கிற்கும், தொழில் மந்தத்திற்கும் பிரதான காரணமாயிருக்கிறது. ஜாதி கொள்கையில் ஒருவித கேவலமான இறுமாப்பு இருக்கிறது. அதனால் சிலர் பயனற்ற கர்வங் கொள்கிறார்கள். பலர் சிறுமையையும் அதைரியமும் அடைகிறார்கள். ஆகவே இத்தகைய நிலைமையில் உழைப்புக்குள்ள உண்மை மதிப்புப் போய்விடுகிறது. அதனால் மக்கள் தொழிலைத் தேடி வேலையில் அமருவதற்கு அவசியமாகும் ஊக்கத்தை இழந்து விடுகிறார்கள். அது காரணமாக பிரதான தொழில்களில் பெரும்பாலானவை கீழ்த்தர வகுப்பார் எனப்படுவோரிடம் விடப்பட்டுப் போகின்றன. அவர்களுக்கு அத்தகைய தொழில்களை நடத்துவதற்குப் போதிய கல்வி இருப்பதில்லை. பொது ஜனங்களும் அப்படிப்பட்ட தொழில்களுக்கு ஆதரவளிப்பதில்லை' அவைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஆதலால் அநேக கைத்தொழில்கள் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு எந்த நிலையில் இருந்தனவோ அதே நிலையில்தான் இன்னமும் இருந்து வரு

கின்றன. மற்ற தேசங்களிலுள்ள அதே தொழில்கள் மிகச் சிறந்து அற்புத முறைகளில் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. பிற நாடுகளில் ரசாயனக்காரர்களும், சிற்பிகளும், வர்த்தகத் துறை விற்பனர்களும் தொழில்களை மேற்கொண்டு நடத்தி வருகிறார்கள், அவர்கள் நவீன விஞ்ஞான சாதனங்களாலும் அதி நூதன கலா முறைகளாலும் தொழில்களை வியக்கத்தக்க முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

இந்தியாவின் கைத்தொழில் தாழ்ச்சிக்குக் கூட்டுக் குடும்ப வாழ்க்கையும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. விவாகத்திற்குப் பிறகும் அநேகர் தங்கள் பெற்றோர்களுடனும் கூட்டாக ஒரே குடும்பத்தில இருந்து குடுமபப் பொதுச் செலவில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அதனல் ஏதோ நன்மை உண்டு என்ருலும், தற்கால சமுதாய நிலைமைகளில் அதன் தீமை அதிகப்படலாயிற்று. அதனல் கைத்தொழில் அபிவிருத்திக்குச் சேதம் உண்டாகிறது. கூட்டுக் குடும்பங்களில் சம்பாத்தியம் செய்கிறவர்களுக்கு பொருள் சேர்க்க வேண்டுமென்ற ஆசை மிகக் குறைந்து போகிறது. அவர்களைச் சார்ந்து காலம் தள்ளும் மற்றவர்களிடம் சோம்பலும் பிறர் சொல்வதைக் கேட்டு நடக்கும் சுதந்திரமற்ற தன்மையும் வளர்ந்து வருகின்றன. அவர்கள் எதையும் வழிகாட்டியாக முன்னின்று நடத்த விரும்புவதில்லை.

மத ஸ்தாபனங்களில் நடைபெற்று வரும் தர்ம கைங்கரிய முறைகளால் ஜனங்களில் அநேகரிடம் சோம்பல் வளருவதற்கு இடமேற்பட்டு விடுகிறது. அத்தகைய தர்ம ஸ்தாபனங்களும் சிறந்த நோக்கமும் பரோபகாரக் கொள்கையும பெரிதும் பாராட்டத் தக்கவைதான். ஜன சமூகமும் சர்க்காரும் அத்தகைய தர்ம நிர்வாகங்களை ஏற்றுக்கொள்ளும் வரையில் அவைகளால் நல்ல பலனேற்படும் என்பதில தடையில்லை. ஆனல் தற்கால தர்ம ஸ்தாபனங்கள் தப்பு வழிகளில் உபயோகிக்கப் படுகின்றன. மதத்தின் பெயரைச்

சொல்லித் திடகாத்திரமுள்ளவர்கள் இலாபமடைகிறார்கள். ஜனங்களின் மூட நம்பிக்கையாலும் ஏமாந்த தன்மையாலும் சோம்பலுள்ளவர்களே நன்மை யடைகிறார்கள். உண்மையில் தேவைப்பட்ட அநேகர் கவனிப்பாரற் றிருக்கிறார்கள்.

தற்காலத்தில் தொழிலின் திறமை மக்களின் மனோசக்தியைப் பொறுத் திருக்கிறது. தொழிலபிவிருத்தி மக்களின் தேர்ச்சி தந்திரம், நூதன யுக்தி ஆகியவைகளுக்கு ஏற்றவாறு சிறப்படைகிறது. பண்டைக் காலத்தில் இந்தியா தொழில் துறையில் மிகப் பெரிய பெயர் பெற்றிருந்தது. அக்காலத்தில் அக்ஷர கணிதம், க்ஷேத்திர கணிதம், வான சாஸ்திரம், அனுபவ விஞ்ஞானம் முதலியவைகளின் உதவியால் இந்திய தேசத்தில் கைத்தொழில் நல்ல நிலைமையில் இருந்து வந்தது. ஆனால் தேசத்திற்குப் பற்பல துன்பங்கள் நேரிட்டு வந்தன. பகைவர் படையெடுப்புகள், எதிரிகளின் வெற்றி, அந்நியர் ஆட்சி முதலியவைகளால் இந்தியர் அறிவின் பலத்தையும் ஒழுக்கத்தின் உயர்வையும் இழக்க நேர்ந்தது. கைத்தொழில்களில் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி அனுகூல மடைவதற்கான நல்ல நிலைமை இந்தியர்களுக்கு வெகு காலமாக இல்லையென்றே சொல்லலாம். இந்தியர்களின் தொழில் நிலை உயர்ந்த வேறெந்தத் தேசத்தோடும் வைத்து ஒத்துப் பார்க்க லாயக்கற்றதாக இருக்கிறது.

இந்தியாவின் தேவைக்கும் மூன்றில் ஒரு பாகம் குறைவாகவே ஆகாரப் பொருள் விளைகிறது. ஆதலால் இந்தியர்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை என்று விளங்குகிறது. ஆனால் ஒரு சராசரி அமெரிக்கனுக்கு வருஷம் ஒன்றுக்கு 2664-பவுண்டு நிறையுள்ள ஆகாரம் கிடைக்கிறது. தவிரவும் இந்தியர் உணவில் போஷணைசத்து மிகவும் குறைவு. இப்படிப்பட்ட வறுமை காரணங்களாலும் இந்தியக் கைத்தொழில் முன்னேற முடிய வில்லை.

பட்டினியைப் போலவே காலரா, அம்மை, விஷ ஜுரம், எலும்புருக்கி முதலிய நோய்களும் மக்களின் தேகமனோ பலத்தைக் குறைத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே ஆரோக்கியம் திடகாத்திரம் மிகுந்த பேரறிஞர்கள் கடும் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் தொழில் உலகில் உண்ண உணவின்றி பிணியாளராய் அறிவிழந்து மதங்களைப் பாதுகாத்து நிற்கும் ஒரு ஜன சமூகம் அத் தொழிற் துறையில் வெற்றி பெறுமெனா எதிர்பார்க்க முடியுமா?

* *

நாம், கடவுள்களை நிந்திக்கும் கயவர்கள், மதத்தைக் குறைகூறுகிறோம், கண்டிக்கிறோம், என்று உண்மையிலேயே உள்ளம் வருந்தும் அன்பர்கள் சில பேர் இருக்கிறார்கள்-வேறு பலர் உளர்-ஏதாவது சாக்குக் காட்டி நம்மைத் தூற்றுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள் அவர்களைக் குறித்தல்ல நாம் குறிப்பிடுவது, உண்மையாகவே மனம் வருந்துகிறார்களே அவர்களுக்குக் கூறுகிறோம்-நமது கடவுள்களைப் பற்றியும் மதத்தின் பேராலே கட்டப்பட்டுள்ள கற்பனைக் கதைகள், படித்துவிட்டு சற்றே சிந்திக்கும் எவருக்கும், அருவருப்பைத்தானே கிளறுவதாக இருக்கிறது—அறிவுக்குப் பொருந்தாத ஆபாசங்களை அல்லவா ஆண்டவனின் பெயருடன் இணைத்து இங்கே, மதத் தூள்களாக்கி விட்டனர், மக்களின் பொது அறிவு வளர்ந்து ஆராயும் திறன் வளரும்போது எப்படி அந்தக் கதைகளைப் பக்தியுடன் படிக்கவோ, நம்பவோ முடியும்!—இந் நிலையில், உலகமோ வேகமாக முன்னேறுகிறது நாம் இந்த நாளிலேயும், அந்தப் பழைய, நம்ப முடியாத, ஆபாசமான கதைகளை நம்பத்தான் வேண்டும்; அதுதான் மதவாதி என்பதற்கு இலட்சணம் என்று கூறினால் யாரால் எடுத்துக்கொள்ள முடியும்? சில எடுத்துக் காட்டுங்கள்- இவை, நம் பெரியவர்கள் உச்சிமேல் வைத்துப் போற்

றும் உயர்தரமான மத ஏடுகளிலே, கடவுள் திருவிளையாடல்களின் தொகுப்பாக உள்ள புராணங்களிலே காணப்படுபவை இவைகளை எப்படி நம்புவது? நம்ப முடியுமா? என்பதைக் கோபதாபமின்றி அன்பர்கள், கூற வேண்டும்.

1. சிங்காரச் சோலையில் சில முனிவர்கள் அனைத்தும் துறந்து ஆண்டவனை அடைய அல்லும் பகலும் தவம் செய்துகொண் டிருக்க, அங்கொரு பெண்மான் துள்ளி விளையாட, அதைக் கண்ட முனிவர்கள் அதன் மேல் ஆசைகொள்ள, அது உடனே கருவுயிர்த்து ஒரு பெண் குழந்தையை வள்ளிக் கிடங்கில் ஈன்று விட்டுச் சென்று விட்டது.

2. ஐந்நூறு யோசனை அகன்று நூறு யோசனை உயர்ந்த மரத்தைப் பிடுங்கி அவுணர்கள் மேல் வீசி எறிந்தார் வீராவாகு.

3. ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கை கால்களையுமுடைய சிங்கமுகாசூரன் எதிரிகளைக் கையில் எடுத்து விழுங்கினுன்.

4. வாளுக்கிரையான சூரபன்மன் அண்டமுகட்டைத் தொடும்படியாக உயர்ந்து பூமி உருக்கொண்டு எங்கும் நிறைந்து நின்றுன். முருகன் ஏழு பாணங்களை எய்ய அவை ஏழு கடல்களாகச் சென்று அழித்தன.

5. சிங்கமுகா சூரனுடைய வயிற்றை சுப்ரமணியரின், அம்பு துளைக்க அதன் வழியாக லக்ஷம் வீரர்கள் தோன்றினுர்கள்.

6. சூரபன்மன் வேலன் படைக்கஞ்சிக் கடலின் மத்தியில் அண்ட கூடமளவும் உயர்ந்து லக்ஷம்யோசனை அகன்ற மாமரமாக நின்றுன்.

7. தாரகன் லட்சம் வீரர்களைப் புழைக்கையால் பிடித்துக் கட்டிக் கடலில் எறிந்தான்.

8. வீரவாகு கந்த மாதன பர்வதத்தின்மேல் ஏறி நிற்க, அது அவரைத் தாங்காது பிளந்து பூமியில் ஆழ்ந்தது.

9. (அ) சூரபன்மனது தெற்குவாயில், வாயில் காப்போனுகிய கயமுகன் ஆயிரம் தலைகளேயும், இரண்டாயிரம் கைகால்களேயு முடையவன். (ஆ) கயமுகன் தன் மூவாயிரம் கைகளால் வீரவாகுவை எடுத்து விழுங்க எத்தனிக்க அவைகளைத் துண்டித்தார் வீரவாகு.

10. கயமுகன் ஆயிரம் குன்றுகளை எறிய அவைகள் வீரவாகுவின் மேல் பட்டவுடன் கல்லின்மேல் பட்ட பாண்ட மாகுதல்.

11. கயமுகன் மலையைப் பெயர்த்து வீரவாகுவின் மேல் எறிய, அதை வீரவாகு தோளில் தாங்க அவை மண்கட்டிப் போல் உதிர்தல்.

12. தேவர்களும், அவுணர்களும் அமுதம் கடையும்போது மகாவிஷ்ணு மோகினியாக வர, ஈஸ்வரன் சுந்தர புருஷனுக வர, மோகினி அவர் பேரில் ஆசை கொள்ள அக்கணமே ஐயனுர் தோன்றினுர்.

13. அஷ்டகுல பர்வதங்களை ஓரிடத்தில், கூட்டுவது, அவைகளைத் தலைகீழாய் நட்டுவைத்தல், கடல்களை ஒன்ருக்குதல், மேருமலையைச் சமுத்திரத்தில் ஆழ்த்துதல், பெருகி வரும் கங்கையை அடைத்தல், நாகங்களை நேராக உருட்டல், சூரிய சந்திர நக்ஷத்திரங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு மகிழ்தல், இவ்வளவும் பாலமுருகனது பால்ய லீலைகள்.

14. சூரபன்மன் தேவர்களையும், வருஷம், மாதம், நாழிகை, நக்ஷத்திரம், நாள், சூரிய சந்திரன் முதலியவர்களையும் சிறை செய்தான்.

15. உமாதேவி காற் சிலம்பில் ஒன்பது முத்துகள். உதிர, அவைகள் உமாவாக மாற உமா கண்டு கோபமடைந்து அவர்களைச் சபிக்க, சாபத்திற் கஞ்சிய அவர்களின் உடம்பில் வியர்வை உண்டாக, வியர்வையினின்றும் லக்ஷம் வீரர்கள் தோன்றினார்கள்.

16. ஷை நவ உருவங்களின் தொப்பிள் வழியாக வீரவாகு முதலிய நவ வீரர்கள் வாலிபப் பருவத்தினராய்த் தோன்றினார்கள்.

17. பானுகோபன், கூரையின் வழியாக சூரியகிரணம் பட்டமையால் சூரியனைப் பிடித்து வந்தான். பிறகு கட்டில் காலில் கட்டிவைத்தான்.

18. சிவனால் அளிக்கப்பட்ட அக்கினிப் பொறிகள் யாவரும் சிறிதும் அணுகா வண்ணம் வெப்பத்துடன் உலகெங்கும் வீசின. வாயுக்கள் உலர்ந்தன, கடல்கள் வறண்டன.

19. வாயு அக்கினிப் பொறிகளை தாங்கமுடியாமல் கங்கையில் போட, கங்கை சரவணப் பொய்கையில் போட்டுவிட்டாள்.

20. பார்வதிதேவி ஸ்நான அறைக்கு போகும் பொழுது அழுக்கைத்திரட்டி உருசெய்து, அவ்வுருவுக்கு உயிர் கொடுத்து வாயிலில் காவல்வைக்க, சிவன் அங்குவர, உட்செல்ல அனுமதிக்காததால் கோபமடைந்து அவ்வுருவை வாளால் வெட்டிவிட்டார். பிறகு விஷயமறிந்த பார்வதி புத்திரசோகத்தால் புலம்ப, சிவன் தேற்றி வெளியில் வந்து பார்க்க, அவ்வுருவின் தலையைக் காணவில்லை. மூன்று உலகில் தேடியும் அகப்படவில்லை. உடனே அங்கொரு யானையின் தலையை வெட்டிவைத்து உயிர் கொடுக்க யானைமுக விநாயகராயிற்று.

* *

மணி ஒலித்தது!

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

கருப்பண்ணசாமி அலறியபடி உள்ளே ஓடலானார், ஒளிந்துகொள்ள இடம் தேடினார்.

'களுக்'கென ஒரு சிரிப்பொலி கேட்டது. கருப்பண்ணசாமி, கோபம் கொண்டு, "வேதனைப்படுகிறேன் நான்—இந்த வேளையில் கேலி வேறு செய்கிறாயா?" என்று கேட்டார், சிரித்தபடி தன் எதிரே வந்த தேவியைப் பார்த்து.

"கருப்பண்ணா!—என்ன கலக்கம்! ஏன் ஓடுகிறாய், ஒளிக்கிறாய்"—என்று தேவி கேட்க, கருப்பண்ணசாமி "காதிலே விழவில்லையா. மணிச சப்தம்" என்று கேட்டார்.

"விழுந்தது—அது கேட்டு அச்சம் ஏன் வரவேண்டும்—ஆச்சரியமாக இருக்கிறதே" என்று தேவி கேட்டார்.

"உனக்கு ஒன்றும் புரிவதில்லை. யாரோ பக்தர்களல்லவா வருகிறார்கள்... ..!" என்று பயத்துடன் பேசினார் கருப்பண்ணர்.

"பைத்தியமே! பக்தர் வருகிறார் என்றால் பயம் ஏன் வரவேண்டும்? உன்னைத்தொழ, கூடம் கொளுத்த, சோட சோபசாரம் செய்ய, படையல் போட வருகிறார்கள் பக்தர்கள். இதற்கு ஏன் பயப்பட வேண்டும்..... ஓஹோ! இவ்வளவு பூஜையையும் ஏற்றுக்கொண்டு எங்கள் கஷ்டத்தைப் போக்காமல் இருக்கிறாயே கருப்பண்ணசாமி!—என்று அந்த பக்தர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயமா? என்றார் தேவி.

கருப்பண்ணர், "போதும் தேவி உன் தொல்லை. வரம் தந்து அவர்களின் குறையைப் போக்கவில்லை என்பதற்காக என்மீது சீறுவார்கள் என்ற பயம்

எனக்கு இல்லை-நானென்ன தேவாலய அரசு செலுத்தி அனுபவமில்லாதவனா... .. ..இங்கு இல்லாவிட்டாலும், மேலுலகில் என்னைப் பூஜித்த பயன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக் கொள்வார்கள். இங்கே அவர்களுக்குள்ள குறையைத் தீர்த்து வைக்காததற்காக என்மீது சீறமாட்டார்கள் என்ற சித்தாந்தம் எனக்குத் தெரியும். நான் பயப்பட்டது அதனால் அல்ல'' என்று பெருமூச்சு வருமளவு வேகமாகப் பேசினார் கருப்பண்ணசாமி.

தேவியார் வேகமாகச் சென்று, வாயிலில் பார்த்து விட்டுவந்து, 'கருப்பண்ணா! பக்தர் யாருமல்ல, காற்று பலமாக அடித்ததால் மணி ஓசை கேட்டது. பயப்படாதே. சரி, பக்தர்கள் வருகிறார்கள் என்றால் ஏன் பயம் உண்டாகிறது உனக்கு—அதைச் சொல்லு'' என்று கேட்டார்கள். பக்தர் யாரும் வரவில்லை என்று தெரிந்ததால் தைரியம் பெற்று, தன் பீடத்தில் அமர்ந்து, எதிரே ஒரு பீடத்தில் அமர்ந்த தேவியிடம் கருப்பண்ணசாமி, விளக்கம் கூறலானார்.

"தேவி! பக்தர்களால் எனகçு ஏற்பட்ட ஆபத்தும் சங்கடமும் உனக்கென்ன தெரியும்! வரவர இந்த 'வேலை'யிலேயே எனக்கு வெறுப்பு வளர்ந்துகொண்டு வருகிறது. தான் செய்த மோசத்தை அரைப்பலம் கற்பூர புகையிலே மறைத்து விடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு நான் உடந்தையாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறான். இவனுடைய பேராசைக்கு , நான் துணைசெய்ய வேண்டும் என்று எண்ணுகிறான்—காரணம் கேட்டால் பெரிய படைய விட்டிருக்கிறேன் என்று கூறுகிறான்."

தேவி குறுக்கிட்டு, "இதென்ன புது விஷயமா கருப்பண்ணரே! இப்படிப்பட்ட பக்தர்களை நாம் நெடுங்காலமாகப் பார்த்து, பழகிதானே வந்திருக்கிறோம்'' என்று கூறி, கருப்பண்ணசாமி, மனக்கொதிப்

புடன், பக்தகர்கள் அந்த அளவோடு நின்று விடவில்லை. தேவி—கேவலப் படுத்துகிறார்கள், போலீசின் பாது காப்பிலே வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந் திருக்கிறார்கள் என்னை'' என்று கூறினார்.

“கேவலப் படுத்தினார்களா! யார்! என்று தேவி ஆச்சரியத்துடன் கேட்டார்.

அவரை கேலி செய்வதுபோல கருப்பண்ணர் “யார்!'' என்று ஒரு முறை கூறிவிட்டு, “நாஸ்திகர் கள் கேவலப்படுத்தினார்கள் என்று கருதுகிறீரா தேவி! அவர்க ளல்ல. அவர்கள் மனிதனுடன் பழகுவதும், மனிதர்களுடைய பிரச்னைகளைக் கவனிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள். என்னைக் கேவலப் படுத்தியது பக்தர்கள்!—கைகூப்பித் தொழுது கன்னத்தில் போட் டுக் கொள்கிறார்களே, கற்பூரம் கொளுத்துகிறார்களே அந்த பக்தர்கள்தான், என்னை, சேச்சே, இப்பொழுது எண்ணிக் கொண்டாலும் எனக்கே வெட்கமாக இருக் கிறது கேவலப் படுத்தினார்கள்—போலீசாரின் துணை யால் நான் மீட்கப் பட்டேன்,'' என்று கூறினார். தேவிக்கு ஆச்சரியம் தாங்க முடிய வில்லை.

“கருப்பண்ணரே! என்ன பேசுகிறீர் பக்தர்கள்-ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாத பேச்சாக இருக் கிறதே'' என்றார்.

“தேவீ, கேள் இந்த விஷயத்தை இந்த பக்தர்களை இன்னின்னது செய்யுங்கள் என் மனமகிழ்ச்சிக்காக, இன்னின்னது படையுங்கள் என்று நான் கேட்டது மில்லை—அவர்களாகவே வருகிறார்கள் — அவரவர்கள் மனதிற்குத் தோன்றியபடி ஏதேதோ செய்கிறார்கள். நான் சிவனே! என்று எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத் துக்கொண் டிருக்கிறேன். என் பொறுமை, பெருந் தன்மை இவைகளைக் கண்டு, இந்த பக்தர்கள், என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணித் கொண்டு... ..'' கருப்பண்ணரின் தொண்டை அடைத்

துக்கொண்டது துக்கத்தால். தேவியின் ஆச்சரியம் அதி கரித்தது, "துணிவு கொண்டு......சொல்லும் கருப் பண்ணரே! துணி கொண்டு...... என்று ஆவலை வார்த்தைகளாக்கினர் தேவி. ஆத்திரத்துடன் கூறினர் கருப்பண்ணசாமி, "ஒரு அலையிலே போட்டு பூட்டி விட்டார்கள்!',—என்ருர். தேவிக்கும் லேசாகத் திகில் ஏற்பட்டது.

"பூட்டிவிட்டார்களா? உன்னையா? பக்தர்களா?-" என்று திகைப்புடன் தேவி கேட்டார்கள்.

"கேட்பதற்கே இவ்வளவு திகில் பிறக்கிறதே தேவியாயாரே! என் மனம் என்ன பாடுபட்டிருக்கும். என்னை ஓர் அறையிலேல்பாட்டு பூட்டினபோது நான் என்ன கழனி வேலை செய்யும் கருப்பண்ணு, சாமி-சாமி- விட்டுவிடுங்க-என்று கதற நகஞ அவர்கள் கூப் பிட்டு வரங்கேக்கும் கருப்பண்ணயாமி! அவர்களோ என்னையே அறையிலே தள்ளி பூட்டுப் போட்டுவிட் டார்கள்; நான் என்ன செய்வது"—என்று கூறி ஆயாச மடைந்தார் கருப்பண்ணசாமி.

தேவி, உண்மையிலேயே அனுதாபப்படத் தொடங்கினள்.

"கேவலமான நிலைமைதான் இது. பக்தர்கள் உன்னைச் சிறையில் போடுவதுபோல அல்லவா செய்து விட்டிருக்கிறர்கள்" என்று பேசினர் சோகமாக.

"தேவீ! உன் காதிலே, அவர்கள் அப்போது போட்ட கூச்சல் விழுந்திருந்தால் தெரிந்திருக் கும், அவர்கள் போக்கும் குணமும். 'போட்டுப் பூட் டடா, என்ன நடந்துவிடுதுன்னு பார்க்கலாம்" என்று ஒருவன் கொக்கரிக்கிருன்

பெரிய பூட்டு கொண்டுவா" என்று கூவுகிருன் ஒருவன்.

"அலிகார் பூட்டு வேண்டுமா? என்று கேட்கிறான் இன்னொருவன். இவ்வளவு கூச்சல், துணிபு! பேட்டுப் பூட்டுங்க பார்க்கலாம், எவன் வந்து என்ன செய்து விடுகிறான்......." என்று கூவி, தேவீ! என்னை ஒரு பெரிய அறையிலே போட்டு பூட்டிவிட்டு போயேவிட்டார்கள்.

வெளியே சிரிக்கிறார்கள்-இனி பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று! நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன்...என்னைப் போட்டு பூட்டிய 'பாவிகள்' சிரிக்கிறார்கள்! நான் கேட்கலாமா அவர்களைப் பார்த்து, இதென்ன அக்ரமம்-திறந்து விடுங்கள் என்னை-உல்லையானால் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வரச்செயவேன், கைகால்களை முறித்துப் போடுவேன்"—என்று பேசலாமா! அவர்களோ பக்தர்கள்! நானோ அவர்களால் வணங்கபடும் சாமி! தேவீ! மனம் எவ்வளவு பதறி இருக்குமென்று யோகியுங்கள்"—என்றார் கருப்பண்ணர்.

"கருப்பண்ணரே! அது கிடக்கட்டும். ஏன் பூட்டினார்கள்......என்ன செய்தீர்" என்று கேட்டார் தேவியார். கருப்பண்ணர் சிரித்துவிட்டு, "நானா, என்ன செய்தேனா, அவர்கள் என் எதிரே இருந்துகொண்டு சொல்லி வந்த புளுகுகளையெல்லாம் கேட்டுச் சகித்துக் கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு. போதும் புளுகாதீர்கள் என்று ஒரு தடவையாவது ஒரு பக்தனையாவது கண்டித்திருந்தால, அவர்களுக்கு அன்று எவ்வளவு துணிவு வந்திருக்காது" என்றார் கருப்பண்ணர்.

"உன்னை ஒரு தனி இடத்தில் போட்டுப் பூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது?" என்று மீண்டும் கேட்டார் தேவியார்.

சலிப்பும் வெறுப்பும் கலந்த குரலிலே கருப்பண்ணர் சொன்னார், "என் பூட்டி வைத்தாகள் என்று

கேட்கிறீர், தேவீ! நான் அவர்களின் "சாமி" யாம், அதனாலே என்னை வேறே சில பக்தர்கள் கொண்டு போகாம லிருப்பதற்காக, என்னைப் போட்டு பூட்டி வைத்தார்கள். அவ்வளவு 'பக்தி' என்னிடம். வேறு எந்த பக்தனிடமும் நான் பேசிவிடக்கூடாது, அப்படி ஒரு எண்ணம்—" என்றார் கருப்பபண்ணர்.

"இதென்ன பைத்தியக்காரத் தனிமான எண்ணம்!"-என்று தேவி கேலியாகப் பேசினார்கள். "இவர்கள் கண்டதையும் கடியதையும், வேகாததையும் பழுக்காததையும் தின்று வயிற்றும் போக்கு ஏற்பட்டால், என்னை வந்து கேட்கிறார்களே. தேவி! கருப்பண்ண ஸ்வாமி! என்னைக் காப்பாற்றுன்னு, பைத்தியக்காரத் தனம்தானே அது! அதுபோல இதுவும் ஒரு பைத்தியக்காரத்தனம். உண்மையைச் சொல்லப்போனா, தேவீ! அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனத்தை நாம் வளரவிட்டது தவறு இல்லையா? என் விஷயத்தைக் கேள், தேவீ! இந்தப் பக்தர்களுக்கு, நான் தங்களுடைய "சாமி," வேறு யாரும் தங்களுடையதுன்னு 'பாத்தியதெ' கொண்டாடினாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்கிற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு தகுந்தபடியான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது, நான் நீ, என்று போட்டி போட்டுக்கொண்டு பக்தர்கள் கூட்டம் பெருகுவது கண்டு எனக்கும் பெருமையாகத் தான் இருந்தது. என் பொருத தேவீ, என் பக்த கோடிகள், இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து அவர்களுக்குள்ளே தீராத பகை ஏற்பட்டுவிட்டது. அவர்களுவடய பகை எனக்குப் பெரிய ஆபத்தாக வந்து சேரும் என்று நான் கண்டேனா-நான் என் வேலையைக் கவனித்துக்கொண்டு இருந்தேன். வழக்கமாக எனக்கு நடத்துகிற உற்சவத்தெ நடத்தினார்கள்—எனக்கு மகிழ்ச்சி—தேரும் திருவிழாவும் வீண் வேலை என்றும் ஊருக்குள் போய் சிலபேர் பேசிக்கொண் டிருக்கிறார்களே. அவர்கள் பேச்சிலே மயங்கி, எங்கே என் பக்தர்

கள் இந்த வருஷம் உற்சவத்தை நடத்தாமல் இருந்து விடுவார்களோ என்று எனக்கு இலேசாகப் பயம் அவர்கள் உற்சவத்தைத் வழக்கப்படி நடத்த முன்வரவே நான் மகிழ்ச்சி அடைந்தேன்—எவ்வளவு பிரச்சாரம் நடை பெற்றாலும் நமது செல்வாக்கும் போய்விடவில்லை. என்று எண்ணிப் பூரித்துப் போனேன். வருஷா வருஷம வைகாசி மாதம் உற்சவம் நடத்துவார்கள் எனக்கு கருப்ப உடையார் தலைவர், உற்சவம் நடத்திய பக்தர் குழாத்துக்கு-வழக்கப்படி ஊர்வலமாக என்னை அழைத்துச் சென்றார்கள். "பயல்களே! பகுத்தறிவு—சுயமரி தையா என்று கருதிக்கொண் டிருக்கிறீர்களே —பாருங்களடா, பக்தர்கள் எனக்கு உற்சவம் கொண்டாடு வதை!" என்று கூறிட எண்ணினேன்—ஆனால் அந்தப் பயல்கள் ஒருவன்கூட காணோம்—எங்காவது 'மஹாநாடு' போட்டிருப்பான்கள் போலிருக்கு. சந்தோஷமாகப் பவனி வந்தேன். எப்போதும்போல என்னைக் கொண்டுபோய் மண்டபத்தில் கொலுவிருக்கச் செய்தார்கள். பக்தாகள் என்னை வந்து தரிசிக்க அதுதானே நல்ல ஏற்பாடு. நானும் மண்டபத்தில் கெம்பீரமாக வீற்றிருந்தேன்.

பக்தகோடிகள் இரண்டு 'கோஷ்டி'யாகி இருந்தனர் என்று சொன்னேனல்லவா—உற்சவம் செய்தது ஒருகோஷ்டி,—கருப்ப உடையார் கோஷ்டி. மற்றொரு கோஷ்டி பிச்ச உடையார் நடத்தி வந்தார்—அந்தக் 'கோஷ்டி'யும் என் பக்கர்கள்தான். அந்த இரண்டு 'கோஷ்டி'க்கும் தான் பகை. இரண்டு கோஷ்டிக்கும் என்னிடம் பகை ஏற்படக் காரணமே கிடையாது.

மண்டபத்தில் இருந்த என்னை மீண்டும் கோயிலுக்கு அழைத்துப்போகக் கூடிற்று கருப்ப பக்தர் கோஷ்டி.

"தூங்காதே! எடுக்காதே!" என்று கூவிற்று பிச்ச பக்தர் கோஷ்டி.

"நீங்கள் யாரடா, தடுக்க—எங்க கருப்பண்ண சாமிக்கு நாங்கள் உற்சவம் நடத்துகிறேம்—உலா முடிந்தது, கொலு முடிந்தது—கொண்டு போகிறேம் கோயிலுக்கு—நீங்கள் யார் தடுக்க?" என்று கருப்ப பக்தர் கோஷ்டி பதில் கூறிற்று.

"தொடாதே!" — என்று அதட்டிப் பேசினர் பிச்சை பக்தர் கூட்டத்தினர்.

"தூக்கு! தூக்குடா!" என்று அதிகாரக் குரலில் பேசினர் கருப்ப பக்த் கோஷ்டியினர்.

"வெளியே கிளம்பினே-கொலே விழும்—ஆமாம்-"

"சூரப் புலிகளோ! தூக்குடா சாமியை!"

"வேண்டாம்—வீண் தொல்லேப் படாதீங்க."

"கருப்பண்ணசாமியை நாங்க எங்க இஷ்டப்படி தூக்கிக்கிட்டுப் போவோம்."

"கருப்பண்ணசாமி எங்க சாமிடா!"

"இல்லே, எங்க சாமிடா கருப்பண்ணசாமி"

"கையை வெட்டிவிடுவேன்."

"காலே ஒடித்து விடுவோம்."

தேவி! இரு பிரிவும் இப்படி கொக்கரித்தன—நான் மண்டபத்திலே கொலுவிருக்கிறேன்! என்னைக் கொண்டுபோய் பழையபடி கோயிலில் சேர்த்து விட வேண்டும் என்று ஒருபிரிவு முயற்சி செய்கிறது—இன்னெரு பிரிவு, கூடாது என்று கூறித் தடுக்கிறது. நான் என்ன செய்வது! இரு பிரிவினரும் என் பக்தர்கள்! நான் யார் பக்கம் சேரமுடியும்? இரண்டு பிரிவும் சண்டை போட்டுக் கொள்ளட்டும், நாம், கோயிலுக்குப் போய்த் தொலேப்போம்—இரு பிரிவின் தயவும் வேண்டாம், என்று எண்ணம் பிறந்தது—ஆனல் எப்படிக் கோயிலுக்குப் போவது! நான் திண்டாடிப் போனேன், தேவி! திகைத்துப் போனேன்.

பட்டிக் காடுகளிலே, கலியாணத் தகராறு கிளம்பி விட்டால், பெண்ணைக் கொண்டுவா என்று ஒரு கூட்டம் கூவ, பெண்ணைக் கொண்டு போகாதே என்று மற்றொரு கூட்டம் கூவ, இரண்டு கூட்டத்தின் சச்சரவிலே சிக்கிய பெண், புலம்புவது உண்டு. என் நிலை அது போலாகிவிட்டது. ஆனால் நான் புலம்பலாமா? நானோ சாமி! என்னை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கினவர்களோ என்னை பூஜிக்கும் பக்தர்கள்! என்ன செய்வது நான்!

“கோயிலிலே கொண்டுபோய் ஸ்வாமியைச் சேர்ப்பதுதான் நியாயம்” என்று கருப்ப பக்தர் குழாம் கூறியபடி இருந்தது. பிச்சை பக்தர் குழாமோ, “விவகாரத்தைத் தீர்த்துவிட்டு, சாமியைத் தொடு—விவகாரம் பைசல் ஆகாததற்கு முன்னே, தொட்டா, விடமாட்டோம்” என்று கூறுகிறது.

அட பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அதுக்காக சீரழிவு செய்கிறிங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தைப் பேசி, பைசல் செய்து கொள்ளக்கூடாதா? என்னை இப்படி அவமானப் படுத்துவது முறையா—என்று கேட்க விருப்பம்தான் — எப்படி கேட்க முடியும்!

ஊரிலே இதற்குள்ளே பேசப்பட்ட பேச்சோ, கேட்டுச் சகிக்க முடியல்லே.

“சாமி புறப்படலே இன்னும்?”

“இல்லே—சாமியை விடமாட்டேன்னு சொல்லுறாங்களாம்.”

“ஏனாம்—யாராம்—”

“அவுங்கதான் பிச்சய்யா”

“ஏனாம்”

"என்னமோ விவகாரம இருக்காம், கருப்பையா வோடே அந்த விவகாரத்தைப் பைசல் செய்து சாமி யைத் தொடு இல்லேன்னு விடமாட்டும்னு பேசறாங்க"

"சாமி, மண்டபத்திலேதான் இருக்கா?"

"ஆமாம் — பாவம் — மண்டபத்திலேயே தான் இருக்கு"

"இந்நேரம் கோயில் போய்ச் சேர்ந்திருக்குமே."

"ஆமாம், விட்டாத்தானே"

"இவர்களுக்குள்ளே சண்டைன்னு சாமி, என்ன பண்ணிச்சாம், பாவம், அதை மண்டபத்திலே காக்கப் போட்டு வைக்க வேணுமா!"

இப்படித் தாய்மார்கள் பேசுகிறார்கள்.

"சிறுவர்களோ, "டோய்! சாமி ஆப்பிட்டுக்கிச்சி, மண்டவத்திலே" என்று கூவித் தொலைகிறார்கள்.

தேவீ! கோயில் நிர்வாக சம்பந்தமாக, அந்த இரண்டு பிரிவுக்குள் ஏதோ தகறாராம்—அதற்காக என்னை இந்தக் கோலப் படுத்தினார்கள்.

கோயில் தகறாரு தீர்க்கப்பட்டாலொழிய, என்னை மண்டபத்தை விட்டு எடுத்துச் செல்லக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், "கணக்கு வழக்கு முடிந்தாலொழிய கருப்பண்ணசாமியைக் கோயிலுக் குக் கொண்டு போகவிடப் போவதில்லை" என்று தீர் மானமாகச் சொல்லிவிட்டு, தேவீ! என்னை மண்டபத் துக்குள்ளே விட்டுவிட்டு, கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்கள், பிச்ச பக்தக்கூட்டம். நான் உள்ளே அடைபட்டுக் கிடந்தேன்—மண்டபத் தைப் பூட்டிவிட்டார்கள். உற்சவத்துக்கு ஆசைப்படா மலிருந்தால் நிம்மதியாகக் கோயிலிலே இருந்திருக்க லாம்—இப்போது, மண்டபத்திலே போட்டு பூட்டி விட்டார்கள்.

"போய் சாமி, உள்ளே இருக்குடா—பூட்டிப்பூட்டான்க" என்று கூவிக் குதிக்கிறார்கள்.

"பாவம், கருப்பண்ணசாமியைப் போட்டு பூட்டிவிட்டான் என்று தாய்மார்கள் முகவாய்க்கட்டையில் கைவைத்தபடி பேசுகிறார்கள். நான் உள்ளே சிறை வைக்கப்பட்டேன் என்னை இந்த கதிக்கு ஆளாக்கிய கருப்ப பக்தர், என்னைச் சிறைமீட்க அரும்பாடு படலானார், "இந்துமத பரிபாலன போர்டார்" அவர்களிடம் முறையிட்டாராம்.

"சாமியை மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்—கோயிலிலே சாமி இல்லே—சாமியை வெளியே கொடுக்கவேணும்"னு கேட்டாராம். போர்டார் இதுக்கா இருக்காங்க! ஏதோ கணக்கு வழக்கு சரியா இருக்கா இல்லையான்னு பார்க்கத்தானே அந்தக் காரியத்தை ஒழுங்காச் செய்யவே அவர்களுக்கு நேரம் போதறதில்லே என்னைப் போட்டு பூட்டிவிட்டா, அதற்காக ஓடோடியா வருவாங்க! போப்பா! போயி, போலீசிலே சொல்லுன்னு யோசனை கூறிவிட்டாங்க. ஓடி இருக்கிறார் போலீசுக்கு. நான் உள்ளே அடைப்பட்டுக் கிடக்கிறேன். போலீசிலே என்னென்ன பேசினாங்களோ தெரியல்லே! என்ன பேசி யிருக்கபோறாங்க, கேலிதான்! கடைசியிலே லால்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு போலீஸ் படையோடு வந்து, பூட்டை உடைத்து, என்னை வெளியே விட்டார். அந்த நல்ல மனுஷன் இந்த உபகாரம் செய்ய வந்தாரே, அவரைச சும்மா விட்டாங்களா, "எப்படி பூட்டை உடைக்கலாம்—பார், என்ன செய்கிறோம் எங்க கருப்பண்ண சாமியை நாங்க பூட்டிவைக்கிறோம் மாட்டிவைக்கிறோம்—எங்க இஷ்டப்படி செய்கிறோம், நீ யார் கேட்க பூட்டை உடைக்கலாமா?" அப்படி இப்படின்னு, அவரைச் சூழ்ந்து கொண்டாங்க. அவர் என்ன என்னைப் போலவா, வாயை மூடிகிட்டு கிடப்பாரு மரியாதையா நடங்க ,சட்டப்படி நடக்கவேணும்னு சொல்லியிருக்

காரு கேட்கில்லே. போலீசாரைக் கூப்பிட்டாரு.போடுங் கடா பூஜைன்னு உத்தரவு போட்டாரு, தூக்கினுங்க தடியை. அடிச்சி விரட்டினுங்க. தேவி! அப்பத்தான் என் மனம் கொஞ்சம் நிம்மதியாச்சி. பக்தனுங்கன்னு பேர் வைத்துக்கொண்டு, என் எதிரே கன்னம் கன்னம்னு போட்டுக்கொண்டு, கற்பூரம் கொளுத்திக் காட்டிக்கிட்டு இருக்கிறவங்க. நீதி நியாயத்தைக் கவனிக்காமல் ஈவு இரக்கம் காட்டாமல், பழி பாவத்துக்கு அஞ்சாமல் சாமியை இந்த அலங்கோலப் படுத்தலாமான்னு, யோசிக்காமே, நெஞ்சழுத்தத்தோட, என்னைப் போட்டு பூட்டி விட்டாங்க கேவலப் படுத்திவிட்டாங்க. நான் என்ன செய்ய முடிந்தது? எந்தப் புண்யவான் வந்து வெளியே விடுவாரோ எத்தனை காலம் இங்கே அடை பட்டுக் கிடக்க வேணுமோ எவனெவன் கேலி செய்கிருனோ—ன்னு எண்ணி எண்ணி ஏக்கப் பட்டுக்கொண்டிருந்தேன் நல்ல வேளையா லால்குடிக்காரர், தங்கமான மனுஷன், அவர் புள்ளெ குட்டிக சுகமா இருக்க வேணும், என்னை வந்து வெளியே கொண்டு வந்து சேர்த்தாரு தேவி! இந்தப் பாடுபடுத்தி விட்டாங்க பக்தர்னு சொல்லிக் கொள்ளுகிறவங்க. அதனுலேதான் எனக்கு பயம் ஏற்பட்டு விட்டது. நிஜமாகச் சொல்கிறேன், இனி இந்த பக்தர்களை நம்பிப் பிரயோசன மில்லே ஏதோ பூஜை செய்கிருங்களேன்னு பூரிப்படையறதிலே அர்த்தமில்லே. இனி நமக்கு அவங்க தயவு வேண்டாம் சாகவாசமே கூடாதுன்னு தோணிவிட்டது'' என்று கருப்பண்ணசாமி, தங்கதையைக் கூறி முடித்தார். தேவியும் கதையைக் கேட்டுக் கலக்கமடைந்தார்கள்.

“ஆமாம்! இனி இந்தப் .பக்தர்களை நம்பக்கூடாது” என்று தேவியும் தீர்ப்பளித்தார்கள்.

“நாம் இரண்டு பேரும் மட்டும் தீர்மானித்தால் போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம்

நாம் சிக்கிச் சீரழிவு படக்கூடாது. பக்தர்கள் வேண்டாம்" என்று தீர்மானம் நிறைவேற்றினால் தானே நல்லது என்றார் கருப்பண்ணசாமி.

"ஆமாம். கருப்பண்ணரே! பக்தர்களால், நம்மவர்களுக்கு ஏற்பட்டு வரும் சீரழிவுகளையும், எத்தர்கள் ஏமாளிகளை ஏய்க்க நம்மைக் கருவியாகக் கொள்வதையும் விளக்கமாகக் கூறி, நமது நண்பர்களுக்கும் இனி இப்படிப்பட்ட இடைஞ்சல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும். நாம் இதற்காக ஒரு தனி மாநாடு கூட்டிவிட வேண்டியது தான். இனிப் பொறுக்க முடியாது. நான் வரவேற்புக் கழகத்துக்குத் தலைமை தாங்கி விடுகிறேன். திறப்பு விழா நீ நடத்தி விடு தலைமைக்கு யாரை அழைக்கலாம்—" என்று தேவியார், ஆர்வத்துடன் கேட்டார்கள்.

[லால்குடிச் சமீபத்தில் உள்ள புஞ்சை சாங்குடி என்ற கிராமத்தில், இரு கட்சிகள் ஏற்பட்டு, கருப்பண்ணசாமியை மண்டபத்தில் போட்டு பூட்டிவிட, போலீஸ் உதவியுடன் பூட்டு உடைக்கப் பட்டு, சாமி கோயிலில் கொண்டுபோய்ச் சேர்க்கப் பட்டார் என்ற செய்தி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், 51 ஆகஸ்ட் 22ல் வெளிவந்தது. அந்த உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு தீட்டப்பட்டது இந்தக் கற்பனை.]

* *

"மீனாட்சி! எதற்காக இப்படிக் கோபங் கொள்கிறாய்? காமாட்சி! நான் கொஞ்சுவது உன் காதிலே விழவில்லையா? நீலாயதாட்சி! நீ இப்படி இருந்தால் என் மனம் நிம்மதி யடையுமா? அகிலாண்டேஸ்வரி! நான் உனக்குத் தவறென்ன செய்தேன்! அம்பிகே! இப்படிப் பார். தியாகவல்லி! திரும்பிப் பார். திரிபுரசுந்தரி.... .." என்று சரசமாடும் சத்தம் கேட்டது. இது யார், அர்த்த ராத்திரியிலே அநேக ஸ்திரீகளின் பெயரை அழைப்பது என்று பார்த்தேன். ஆலவாயப்பன், சொக்கன்,

சிவபெருமானிருக்கிறாரே, அவர் தமது தர்ம பத்தினியுடன் பேசிக்கொண்டிருக்கக் கண்டேன். அவருக்கும் அம்மைக்கும் ஆயிரக்கணக்கிலே நாமதேயம் உண்டல்லவா! ஆலயத்துக்கு ஆலயம், வேறுவேறு பெயரல்லவா! ஆகவேதான் அவர் காமாட்சி! மீனாட்சி! நீலாயதாட்சி! அம்பிகே! திரிபுரசுந்தரி! என்று அநேகவிதமான பெயர் கூறி அழைத்தார். அம்மையாரோ, வாயை அசைக்கவில்லை என்று கூறினான் வீரன். "போதுமப்பா உன் புதுப்புரளி நிறுத்து. எனக்கு வேறு வேலை இருக்கிறது. உன் கதையைக் கேட்க நேரமில்லை" என்று நான் சொன்னேன். வீரனா விடுபவன்! "என் கதையைக் கேட்க மனமிருக்குமா உனக்கு! நான் என்ன "சர்" பட்டம் பெற்றவனா, மிட்டாமிராசு உடையவனா, பட்டம் தரித்த புலவனா, பாவாணனா புராணிகனா, என்னிடம் உனக்கு அலட்சியந்தான் இருக்கும்" என்று கோபித்துக்கொண்டான். கோபப்படாதே வீரா! நீ சொல்ல விரும்புவதோ ஏதோ ஒரு புதுப் புராணம்! நாட்டிலே, நானாவிதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பலருடைய அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. சர்க்காரின்போக்கும் அதனைச்சாருவோரின்போக்கும். காங்கிரசின் நிலையும், லீகின் நிலையும், திராவிடர் கிளர்ச்சியும் மாணவர் எழுச்சியும் கலை வளர்ச்சியும் ரசிகர்களின் உள்ள நெகிழ்ச்சியுமெனப் பல்வேறு விஷயங்களிருக்க, நீ எதையோ இழுக்கிறாயே" என்று நான் சமாதானங் கூறிவிட்டுச் சாந்தமோ திருப்தியோ அடையாத வீரனுக்கு உண்மை நிகழ்ச்சியை உரைத்தால் உளம் மகிழுமெனக் கருதி, "கேள் வீரா, உண்மையாக நடைபெறும் சம்பவங்களைக் கவனிக்க மாட்டேனென்கிறாயே. இத்தாலியிலே போர் நடக்கிறதல்லவா, அங்கே **காசினோ** என்ற களத்திலே நடந்த ஒரு அற்புதமான வீர சம்பவத்தைக் கேள், தமிழரின் புகழ் சுடர்விட்டு விளங்குவதைப் பார், பீரங்கிகள் முழக்கமிடும் களம், துப்பாக்கிக் குண்டுகள் நெஞ்சைப் பிளக்கும் இடம்.

மூர்க்கத்தனமாக ஜெர்மானியர் தாக்கும் அந்தப் போர்க் களத்திலே, எதிரிகள் சுரங்க வெடிகளை ஆங்காங்கு அமைத்து வைத்திருந்தனர். நேசநாட்டுப் படையினரின் ஒரு பிரிவினர் இந்தச்சுரங்க வெடிகளை அப்புறப் படுத்தும் அபாயகரமானவேலையிலேஈடு பட்டனர், அச் சமயத்திலே, ஒருநாயக், சுரங்கவெடி ஒன்றின் மீது இடறவே, தீப்பிடித்தது,தீர்ந்தது மறுவிநாடி குண்டு வெடிக்கும், அந்த இராணுவ உத்தியோகஸ்தரின் உடல் சுக்குநூறாகிவிடும் அவரோ அதைத் தெரிந்து கொள்ள வில்லை. மரணம் தன்னை தொட்டு இழுப்பதைத் தெரிந்துகொள்ள வில்லை. என்ன நடந்தது தெரியுமா! வீரா! பண்டைப்பெருமையுள்ள தமிழ் மகனொருவன், அங்கு இருந்தான்! கண்டான் காட்சியை! மிரண்டானில்லை. நமக்கென்னவென்று சும்மா இருக்கவில்லை, நாயக், விலகு, ஓடு, பிழை, சுரங்கவெடி! என்று கூவிடவுமில்லை. ஒரு விநாடியும் தாமதியாது பாய்ந்தான், குண்டின்மீது! அதனைக் கட்டிப் பிடித்தான். குண்டு வெடித்தது. அவன் உடல் சின்னாபின்னமாயிற்று. உயிரிழக்க இருந்த உத்தியோகஸ்தன் தப்பினான். வீரன் மாண்டான், வெற்பென்று ஓங்கிற்று அவன் புகழ் தன்னுயிரை விட்டேனும் மற்றொருவன் உயிரைக் காப்பாற்றும் தமிழ்ப் பண்பு, ஆபத்து நேரத்திலே அஞ்சா நெஞ்சம் கொள்ளும் ஆண்மை, தமிழருக்கு உண்டு, என்பது காசினோ களத்திலே சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற இச் சம்பவத்தால் உலகுக்கு விளககப்பட்டது. வீரத் தியாகம் புரிந்த அவன், எங்கள் ஜில்லாவாசி! அதை எண்ணும்போதே, புன்னகையும் கண்ணீரும் கலந்து வருகிறது. செங்கற்பட்டுக் கடுத்த வாலாஜாபாத் என்ற நகருக்குப் பக்கத்திலே உள்ள குக்கிராமவாசி, கடல் கடந்து சென்று, காசினோகளத்திலே தமிழ் மரபினை உலகுக்கு உணர்த்துவித்தான். அவன் பெயர் **சுபேதார் சு ப் பி ர ம ணி ய ம்.** எதிரியின் படைவரிசைக்குப் பின்புறம், விமான மூல

மாகச் சிறுபடையை இறக்கி, எதிரியைத் தாக்கும் புதியதோர் போர் முறையைப், பர்மா போரிலே செய்து காட்டிய ஜெனரல் விங்கேட் என்பவர், விமான விபத்தினால் இறந்து போனார். அவருடைய ஆற்றலையும், ஆண்மையையும், பரிதாபகரமான முடிவையும் உலகம் உணர்த்திடுவது போலவே, சுபேதார் சுப்பிரமணியத்தின் வீரத் தியாகத்தைப் பற்றி வியந்துரைக்கிறது. வீரர் தோட்டத்தின் விளக்கு சுடர்விட் டெரிகிறது. இத்தகைய சுடரொளி கண்டு சுதந்திர தேவி, தனக்குரிய கோயில் இதுவே என்று பூரிப்பாளே யொழிய, சொல்லம்பரின் வெல்லப் பேச்சுக்கு மகிழ்ந்துவிடமாட்டாள். சுபேதார் சுப்பிரமணியம் போன்ற தியாகிகளைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதும், படிப்பதும், கேட்பதும், வீரத்தை, பண்பை, தமிழரின் பெருமையை ஊட்டுமே! அதைவிடுத்து, வீணரைப் பற்றிப் பேசுவானேன். பார்வதியும் பரமசிவனும் பாதிராத்திரி வேளையிலே, என்ன பேசிக்கொண்டால் நமக்கு என்னப்பா!" என்று நான் கூறினேன். வீரன் சில விநாடி ஆழ்ந்த யோசனையிலே இருந்துவிட்டு, "பரதா! நீ கூறிய சம்பவம் உண்மையிலேயே, தமிழர்கள் யாவரும் பெருமையுடன் உலகை நோக்கி நின்று, "உணரப்பா தமிழ் வீரத்தை!" என்றுரைக்கக்கூடிய வீரச் செயலே. அதற்கோர் ஆட்சேபனையுமில்லை. அவைபோன்ற வீர சம்பவங்களைக் கேட்டு நான் பெருமை கொள்ளாமலுமிருப்பதில்லை. கீர்த்திக் கணவாயிலே புகுந்த சுபேதார் சுப்பிரமணியத்தின் புகழ் தமிழகம் எங்கும் தெரியச் செய்வேன் இது உறுதி" என்று கூறினான். நானும் மகிழ்ந்தேன். மேலும் சில கூற எண்ணினேன். வீரனே, "என் கதையைக் கேள். பார்வதியிடம் பரமசிவம், இவ்வாறு பேசிடக் கேட்ட நான் ....." என்று பழைய பல்லவியைத் தொடங்கினான். "என்ன வீரா! பார்வதியும் பரமசிவனும் பேசுவதும், நீ பக்கத்திலே இருந்து கேட்பதும், இதுதானா விஷயம்? யார் இதை

நம்புவார்கள்" என்று நான் குறுக்கிட்டேன். ஓடிவரும் வெள்ளத்தைத் தடுக்க ஒரு ஜாண் கல்லை வைத்தால், வெள்ளம் நின்றுவிடுமா, வீரனு என் குறுக்குப் பாலத்துக்கு அடங்குபவன். குரலைச் சரிப்படுத்திக்கொண்டு கூறத் தொடங்கினுன். கேட்பது தவிர வேறு எனக்கு வழியில்லை! எதற்கும் இன்னெருமுறை முயற்சிசெய்து பார்ப்போம் வீரனின் வாயை மூட! என்று எண்ணி, "வீரா! விஷயம் தெரியுமோ! ஜப்பானியர்கள் இம்பால் நகரருகே வந்துவிட்டனர். கோஹிமா என்ற ஊருக்கும் ஆபத்து. யுத்தம் நம்மை நெருங்கிவிட்டது" என்று ஆரம்பித்தேன். வீரனின் கவனத்தை பரமசிவன் பார்வதியின் பள்ளியறையிலிருந்து, போர்க் களத்துக்கு இழுத்துச் செல்வோமென்று. அவனே, "அதே விஷயமாகத்தான் அவர்களும் பேசிக்கொண்டனர்" என்று என்னிடம் கூறினுன்.

"விசித்திரமாகத்தான் இருக்கிறது. பரமசிவனும் பார்வதியும் இதைப் பற்றியும் பேசினுர்களா? நான் அவர்கள் தங்கள் திருப் பார்வையை நாமிருக்கும் திக்குக்கே திருப்பக் காணுமே என்று வியாகுலப்பட்டேன்" என்று நான் பேசினேன், கேலியிலே வீரனுக்கு விருப்பமாயிற்றே என்பதற்காக. "பரதா! கேள் விஷயத்தை, கோபமாக இருந்த பார்வதியின் முகவாய்க் கட்டையை பிடித்தார் பரமசிவன். பிறகு ஏதோ செய்தார். கல கல வென அம்மையார் நகைத்திடவே, "அப்பா! சிரிப்பு வர இவ்வளவு நேரமாயிற்று! கோபம் ஒழிந்ததா?" என்று கொஞ்சுமொழி பேசினுர் புலித் தோலாடையார். பூவையரோ, மீண்டும் முகத்தைப் பழையபடி வைத்துக்கொண்டு, "பெண்கள் கோபித்துக்கொண்டால் ஏதாவது பேசி, எதையாவது செய்து, பெண்களுக்குச் சிரிப்பு மூட்டிவிடுவதும், காரியத்தைச் சாதித்துக்கொள்வதும் ஆண்களின் வழக்கந்தானே. அதற்கு நீர்தானே குரு!" என்று பரமசிவத்தைக் குத்தலாகக் கூறிவிட்டு, "என்ன கோபம்!

ஏன் மனஸ்தாபம் என்று கேட்கிறீரே, ஏன் இராது கோபம்? ஒரு மனைவியின் காதிலே தனது கணவனைப் பற்றிப் பலபேர் தூஷித்தால் மனைவியின் மனம் புண் படாதா? உமக்கென்ன, உலகத்தார் என்ன வேண்டுமானாலும் உரைக்கட்டும் கவலையில்லை என்று இருக்கிறீர். என்னால் முடியவில்லையே" என்று கூறிவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொள்ளவே, கபாலி கண்களை அகலத் திறந்து, "பார்வதி! யார் என்னைப் பற்றி இழித்தும் பழித்தும பேசினார்கள்? சொல் சீக்கிரம், அவர்களைப் படுசூரணமாக்குகிறேன் என்று வெகுண்டுரைத்தார். "நீரே நேரடியாகப் பாரும் கண்ணால் உமது காதினால் கேளும் உம்மை யாரார் என்னென்ன கூறி நிந்திக்கிறார்கள் என்பதை" என்று கூறி காமாட்சி, பரமசிவத்தை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றிடவே, நானும் மெள்ள ஓசை படாமல், அவர்கள் கண்களுக்குத் தெரியாமல் மேல் மாடிக்குச் சென்றேன். பொலிவுடன் விளங்கிய பூரணச் சந்திரன், மாசு மருவற்ற வானத்திலே நட்சத்திரங்கள் பல சூழ இருககக் கண்ட பரமசிவன், "பிரியே! அதோ பார்! அழகிகள் பலர் புடைசூழ அரசிளங்குமரி உலவுவதுபோலச் சந்திரன் காட்சி அளிப்பதை. இந்த நேரத்திலே நிலவொளியிலே, நீயும் நானும், யாரோ எதற்கோ நிந்திப்பதைப் பற்றிப் பேசுவதைவிட ....." என்று கூறி முடிப்பதற்குள் பார்வதியார், அதோ பாரும், என்று ஒரு காட்சியைக் காட்டினார், பூலோகத்திலே! நானும் பார்த்தேன், பரமசிவனும் பார்த்தார்! பூலோகத்திலே எங்கோ ஓர் இடம் அது. மக்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டும், ஒருவரை ஒருவர் இழுத்துக்கொண்டும், நீர்புரளும் கண்களும், பதறும் உடலும், திகில் தோய்ந்த மனமும் கொண்டவர்களாய் காடு மலை கடக்கக் கண்டேன். "காமாட்சி! இது என்ன காட்சி," என்று கேட்டார் பரமசிவன். "காட்சியைக் கண்டீரா? சரி, அவர்கள் பேசுவதைக் கேளும்" என்று

75772

அம்மையார் உரைத்தார். கோரமான அக்காட்சியைக் கண்ட எனக்கு அவர்களின் வார்த்தையும் கேட்டது. ''அட ஆண்டவனே! உனக்குக் கண்ணில்லையா? உன் நெஞ்சம் கல்லா? இப்படி எங்களைத் தவிக்கவிடும் உனக்குத் தயாபரன்என்றுபெயரா? உனக்குக்கோயில் கட்டிய கரங்களைக் கொண்டு இன்று என்ன செயவது என்று தெரியாமல் பிசைந்துகொள்கிறேமே, உனக்குக் கருணை யில்லையா? உன் கோயிலை வலம்வந்த கால்கள் இன்று, காடுமேடு சுற்றி, உயிர் பிழைக்க ஒரு இடம் கிடைக்காதா என்று ஓடத்தானே பயன் படுகிறது. எங்கள் ஓலம் உன் செவிக்கு எட்டவில்லையா? உனக்குத் திருவிழாக்கள் நடத்தி, கோயில் வெடிச் சத்தத்தைக் கேட்டு ஆனந்தித்த காதுகளிலே பீரங்கி வேட்டுச் சத்தம் விழுந்து துளைக்கிறதே, உமது மனம் இளகாதா?'' என்று அந்த மக்கள் கதறினர். யார் அவர்கள்? ஏன் அப்படி அழுகிறார்கள்? என்று கேட்கத் துடித்தேன், ஆனால் என்னை நானே அடக்கிக் கொண்டேன். நான் பேசினால் நான் இருப்பது தெரிந்துவிடுமே என்ற பயத்தால். நான் கேட்டறிய எண்ணியதை அறிந்தவர்போல பார்வதியார் மேலும் பேச ஆரம்பித்தார். ''அந்த இடம் இம்பால் நகரம்! கிராமமக்கள் ஜப்பானியரின் கரத்திலே சிக்கிச் சீரழியக் கூடாது என்பதற்காக ஊரைவிட்டு அகதிகளாகி இம்பாலை நோக்கி இடர் மிகுந்து செல்கின்றனர். கண்ணில்லையா என்று உன்னைக் கேட்கின்றனர் அதன் சுருக்கம் குருடா நீ என்பது! மனம் இரும்பா என்று கேட்கின்றனர். நாதா! இதைப்போல மட்டுமல்ல, இன்னும் கடுமையாக ஏசிப் பேசினார்கள், முன்பு வங்காளத்திலே பட்டினியால் மாண்ட பரிதாபத்துக் குரிய மக்கள், அதைப்போலவே பழித்துப் பேசினார் கள். பஞ்சம் பிணி மிகுந்த பல்வேறு இடங்களிலே, குருடன், ஈரமற்ற நெஞ்சினன், கொடுமை புரிபவன், ஏழைகளை ரட்சிக்காதவன் என்றெல்லாம், கணவனைப்

பற்றிப் பிறர் பேசிடக்கேட்டால் மனைவியின் மனம், என்ன பாடுபடும், அதை உத்தேசித்தாவது. நீர், இந்த மக்களுக்கு ஏற்பட்ட அவதியைப் போக்க வேண்டாமா? முடியவில்லையானல், அதையாவது அவர்களிடம் சொல்லிவிடவேண்டாமா? கண்ணெடுத்துப் பாராமலும், காதுகொடுத்துக் கேளாமலும், கைலாயவாசமும் எனது நேசமும், நாரதகானமும் நந்தியின் மிருதங்கமும், கங்கையின் சல்லாபமும் மற்றச்சுக போகமுமே போதும் என்றிருக்கலாமா" என்று கேட்டார். அம்மையின் பேச்சு ஐயனுக்குக் கோபமூட்டும் என்று நினைத்தேன். சக்தியின் பேச்சு சிவனுக்குக் கோபமூட்டவில்லை. விஷயத்தைச் சாவதானமாக உவவிக்கொண்டே விளக்கலானர். "பார்வதி! பூலோகத்திற்கு நான் தரவேண்டியது அனைத்தையும் தந்தாகிவிட்டது. செய்யவேண்டியது அனைத்தையும் செய்தாகிவிட்டது. இனி என்னல் ஆவது ஒன்றுமில்லை" என்று கூறினர். பார்வதியார் வேகமாக அவர்பின் சென்று, தோளைப் பிடித்துக் குலுக்கி "பேஷ்! செய்ய வேண்டியதெல்லாம் செய்துவிட்டீரா? நன்ருக இருக்கிறது உமது நியாயம்? கேட்பாரில்லாததால்' எதைவேண்டுமானல் செய்யலாம, எப்படி வேண்டுமானலும் பேசலாம் என்ற துணிபு பிறந்துவிட்டது உமக்கு" என்று கேட்டாள். என்மனதிலே அதேபோது அதே எண்ணந்தான் குதித்தது சிவபெருமான் "சிவகாமி! சீற்றத்தைவிடு! நான உலகைப்படைத்தேன்! உயிரை படைத்தேன்! உயிர்வாழ வகையும் படைத்தேன்! கவர்ச்சிமிக்க காடுகளைப் படைத்தேன், கனிமரச்சோலைகளைப்படைத்தேன், காறுகளை உண்டாக்கினேன், காற்றையும் நெருப்பையும் கடமையைச் செய்க என்று ஏவினேன். வற்ருத ஆறுகளையும் வளமுள்ள நிலத்தையும் வழங்கினேன். மக்களின் சுகபோகத்துக்கான சகல பதார்த்தங்களையும் அளித்தேன். கடலைப் படைத்தேன் கடலைக் கடக்கக் கலமும் தந்தேன். கடலிலே முத்துக்

களைப் படைத்தேன், அதைக்கண்டவன் எடுத்தேகா வண்ணம்,சுறுவையும் சுழல் அலையையும் அவைகட்குக் காவலாக்கினேன். தங்கத்தைப் படைத்தேன், அதைத் தாறுமாறுக உபயோகிக்காதிருக்க மறைத்தும் வைத்தேன். இவைகளை அறிய மக்களுக்கு அறிவும் அளித்தேன். வேறு என்ன தரமுடியும்? என்ன இருக்கிறது? இவ்வளவு தந்த எனக்கு அவர்கள் தந்தது என்ன?" என்று கேட்கலானார் பரமசிவன்!

"நாதா! இதென்ன கேள்வி" என்று நாம் யாரும் கேட்க எண்ணுவது போன்றே பார்வதியார் கேட்டார்கள் "பரமன் என்ன தந்தார்கள்?" என்று மீண்டும் கேட்டார், கோபத்துடன். பிறகு இந்த உரையாடல் நடந்தது.

"ஏன், அழகான ஆலயங்கள் தரவில்லையா?"

"எனக்கா? கோயிலிலே குடிபுகுந்து, கபட நடகமாடிக் காசுபறிக்கும் கள்ளர்களுக்காக? யாருக்குக் காமாட்சி, ஆலயம்? எனக்கா? எனக்குக் குடியிருக்க இடமா கேட்டேன்? நான்கேட்டது அதுவல்லவே. மக்களின் மனமன்றில் எனக்குக் கோயில் வேறு வேண்டுமா?

"அபிஷேகமும், ஆராதனையும் செய்கின்றனரே உமக்கு"

"எனக்கா? ஏமாளிகள் காசிலே, பாடுபடாதவன் வாழ நடத்தும் கோமாளிக் கூத்தல்லவா அது?"

"தேரும் திருவிழாவும் ஊருருக்கும் நடத்துகிறார்கள் உன்னைப் பெருமைப் படுத்த"

"என்னைப் பெருமைப்படுத்தவா, குழலூதுவோனையும், குறுநகை புரிவோனையும், இசைவாணனையும், இன்பவல்லிகளையும் பெருமைப்படுத்தவா?"

"ஏராளமான பணத்தை உனக்கு ஆபரண அலங்காராதிகளுக்குச் செலவிடுகின்றனர்"

"அந்தச் செலவு எனக்காகவா செய்யப்படுகிறது? நான் மண்ணோடு மண்ணைகப் படைத்த பொன்னைக் கண்டா பூரிப்படைவேன். தேவி! பாம்பை அணிபவன் என்று கூறும் அதே பாமரர் பவுன்களைச் செலவிடுவது எனக்காகவென்று, எண்ணுகிருய் பக்திமான் என்று தன்னைக் காட்டிக்கொள்வதன் மூலம் பாமரரை அடிமை கொள்ளலாம் என்று நினைக்கும் காசு படைத்தவனின் கபட நாடகமல்லவா அது"

"பாமாலை சூட்டினரே"

"தங்கள் புலமையைக் காட்ட"

"பூமாலை சூட்டுகின்றனரே"

"பூவையருக்குப் பிரியத்துடன் பூஜாரி வழங்க, எனக்கில்லை"

"எதற்கும் நீரே துணை என்று கூறிப் போற்றுகின்றனரே"

"தன்னம்பிக்கையைத் தற்குறிகள் இழந்துவிட்டால் தலையாட்டிப் பொம்மைகளாகிவிடுவர். பிறகு நமது தர்பார் நடத்தச் சௌகரியமாக இருக்குமென்று தன்னலக்காரர்கள் புகுத்திய தத்துவமல்லவா அது. அது எப்படி என்னைப் போற்றுவதாகும்"

"உன் அடிதொழுதார்க்கு உண்டு சுகம் என்று கூறிப் பூஜிக்கின்றனரே"

"சுயநலக்காரன், ஓய்வு நேரத்தில் சொல்வது அது. கள்ளமறியாச் சிந்தைகாரன் பிறனுடைய சுயநலத்தால் ஏமாறும்போது பேசும் வாசகம். அது என்னைத் திருப்தி செய்யுமா?"

"நீ கோயில் கொண்டிருக்கும்ஸ்தலங்களுக்கெல்லாம் திரள் திரளாகச் செல்கின்றனரே"

"மதியீனர்களின் மனமருள், அது. அதைத் துணை கொண்டு மந்தகாச வாழ்வு நடத்துகின்றனர் புரோகித வகுப்பார்"

"அர்ச்சகர்களையும், ஆலயப் பணியாட்களையும் அமர்த்தியுள்ளனரே"

"அவர்கள் வாழ! என் தேவைக்காக அல்ல!"

"தேவ பூஜைக்கு என, கீதமொழிக் குயில்களையும் ஆடலழகிகளையும், ஆலயங்களிலே நியமித்துள்ளனரே"

"ஆள் சேர்க்க, எனக்குத் தொண்டுபுரிய அல்ல"

"மன்னாதி மன்னர்களையும் மண்டியிட வைக்கும் மகத்துவம் உள்ள மகேஸ்வரன் என்று கூறினரே"

முடியுடை வேந்தரை மதியுடைக் கயவர் மடக்கியது, அந்த மயக்க மொழி பேசித்தான்"

உரையாடல் முடிந்தது. பார்வதியாருக்குக் கேள்வி வறண்டுவிட்டது. பரமசிவத்துக்கோ பேச்சு நிற்கவில்லை. "பார்வதி! என்னைக் கல்லாக்கிச் செம்பாக்கினர் கயவர்கள், இவ்வளவு நலன்களைத் தந்த என்னைக் கல்லாக்கினர், செம்பாக்கினர். தகுமா அது? என்னைப்பற்றி, அருவருக்கத்தக்க ஆபாசம் நிறைந்த கதைகளைக் காமக் கூத்துகளை எழுதி வைத்தனர். அறிவுள்ளவரின் சிந்தனை என்னென்ன எண்ணுகிறது தெரியுமா? அன்பே! நான் பக்தனிடம் சென்று அவன் மனையாட்டியை என் பின்னோடு அனுப்பச் சொன்னேனும். எழுதலாமா, இதுபோலக் கதை. எழுதித் தொலைத்தார்களே, அறிவு வளர வளர, இத்தகைய ஆபாசக் கதைகள் வேண்டாமென்று ஒதுக்கி விட வேண்டாமா? நான் மற்றொரு பக்தனிடம் சென்று பிள்ளைக் கறி கேட்டேனும், வேறோர் பக்தனின் கண்

களைப் பெயர்த்தேனும், வில்லடி பட்டேனும், கல்லடி பட்டேனும், பிரம்பாலடி பட்டேனும், பன்றிகளை மந்திரிகளாக்கினேனும், தாசி வீட்டுக்குத் தூது சென்றவனும் நான், தேவி! கேள் இந்த அக்ர மத்தை, நான் சுந்தரன் என்ற பக்தனுக்காகத் தாசி வீட்டுக்கு தூது சென்றேனும், எழுதலாமா இது போன்ற கதைகளை? என்ன செய்வது, இப்படி என்னை நிந்திக்கும் கயவர்களை? என் பெயரைக் கூறி மக்களை ஏய்க்கும் புலவர்களை" என்று பரமசிவன் கேட்டார்.

"என்ன செய்வதா? ஏன் இழுத்து வந்து, ஆளுக்கு ஆறு மாதம் சுயமரியாதைப் பள்ளியிலே படிக்கச் சொல்வது தானே" என்று சொல்லி விடத்தான் வேண்டும், என்று தோன்றிற்று. இதற்குள் பார்வதியார், "பிரபோ! தங்கள் பேச்சைக் கேட்ட பிறகு எனக்குப் பித்தம் தெளிந்தது. நீர் என்ன செய்வீர்? மக்கள் தங்களைத் தாங்களே பாழாக்கிக் கொள்கின்றனர், நம்மையும் இழிவாக்கி விட்டனர், மதி வளருவது தவிர அவர்கள் மீள வேறு மார்க்கம் இல்லை" என்று கூறி விட்டு, நேரமாகிறது, தூக்கமும் வருகிறது." என்றார், அதே சமயத்திலே, "நேரமாகிறது எழுந்திரு" என்று கூறி, என் முதுகைத் தம்பி தட்டக் கண்டு, விழித் தேன், கைலாயத்தில் நடைபெற்ற உரையாடலைப் பற்றிய கனவும் கலைந்தது என்றான் வீரன்.

"சரியான கனவுதான் கண்டாய்! இதைப் போய்ப் பெரிய பிரமாதமாகக் கூற வந்து விட்டாயே" என்று நான் கேலி செய்தேன்.

"பரதா! கூறினது மட்டு மல்ல, இது இந்தக் கிழமை பத்திரிகையிலே வெளி வந்தாக வேண்டும்" என்று வற்புறுத்தினான் வீரன்.

'உனக்கு வேறு வேலை கிடையாது போ! கன விலே கைலாயம் சென்றானும், பார்வதி பரமசிவன்

பேசினதைக் கேட்டானும் இதை யெல்லாம் பத்திரிகை யிலே போடுவதா? நல்ல வேலை' என்று நான் மறுத் தேன். விட்டானே ஒரு வெடி குண்டு, வீரன்!

"அதுசரி, பரதா! நான் கனவு கண்டால், அது கவைக்கு உதவாது என்று கருதுவாய். இதுவே ஒரு ஐயர் கனவாக இருந்தால் அது அருள்மொழியாகி விடும், பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக இடம் பெறும்" என்றான்.

"அப்படி ஒரு பத்திரிகையும், யாராரோ ஏதேதோ கனவுகள் கண்டால் வெளியிடாது" நான் பத்திரிகை நடத்தும் முறைபற்றி விளக்கினேன்.

"உனக்கு மறதி அதிகம்!" என்றான் வீரன்.

'எனக்கா?' என்று கேட்டேன். ஆமாம் என்று கூறிவிட்டு, பலபேருடைய கனவுகள் புராணங்கள் என்ற பெயரிலே இன்றும் நாட்டிலே உலவி மக்களால் நம்பப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. பாதா! நான் அதைக்கூட ஆதாரமாகக் காட்டவில்லை. உன்னுடைய ஒன்றேகாலணா பத்திரிகையைத் தள்ளு, பிரம்மஸ்ரீகள் நடத்துகிற, பெரிய மூலதனமுள்ள, வளமான வரு வாயுள்ள பத்திரிகையிலே, இதுபோன்ற கனவுகள் வெளியிடப்பட்டு, வாசகர்களின் மனதிலே நுழைக்கப் படுவதை நீ அறிவாயா? இரண்டே உதாரணம் கூறுகி றேன் கேள் காந்தியார் பிர்லா கனவிலே தோன்றி பணம் கேட்டாராம், அது பத்திரிகையிலே வந்ததப்பா! சாதாரணமானவரல்ல அதற்கு ஆசிரியர், மகாத்மாவின் மகன் இருக்கிறாரே தேவதாசர், நம்ம ஆச்சாரியாரின் மரு மகன், அவரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையிலே "கனவு" வெளி வந்தது. கனவாக மட்டும் இல்லை அது. காசும் கிடைத்தது. அந்தக் கனவு கண்டதும், அந்தக் கோடீஸ்வரர், நிஜமாகவே பணமும் தந்தாராம் காந்தியாருக்கு. சந்தேக மிருந்தால் இந்துஸ்தான் டைம்ஸ் என்ற டில்லி பத்திரிகையைப்பார், ஆங்கிலப்

பத்திரிகை, உன் தமிழல்ல!! காங்கிரசுக்கு முன்பு பிறந்ததே ஒரு கனபாடி ஏடு, சுதேசமித்திரன். அது சாமான்யமானதா, 4 பக்கம் பத்திரிகை என்றால், அதிலே விளம்பரம் எவ்வளவு தெரியுமா? அப்படிப்பட்டப் பத்திரிகை ஒருவரின் கனவை வெளியிட்டது, சாதாரண மானதல்ல! நான் கைலாயத்தை கண்டு, பரமனும் பார்வதியும் பேசியதைக் கேட்டேன் என்றால் நீ சிரிக்கிறாயே! சுதேசமித்திரன் ஆசிரியருக்கு, இதே போலச் செய்தி அனுப்பப் பட்டது, அவர் சிரிக்க வில்லை பரதா! உன்போல, இதை யெல்லாமா பத்திரிகையிலே வெளியிடுவது என்று பத்திரிகா தர்மமும் பேசவில்லை. அழகாக, அலங்காரமாகப் பிரசுரித்திருந்தார். என்ன கனவு தெரியுமோ? மகா கனம் சீனுவாச சாஸ்திரியாருக்குக் கனவிலே மஹா விஷ்ணு காட்சி யளித்தாராம், முதலிலே கொஞ்சம் ஒளி தெரிந்ததாம், பிறகு வரவர ஒளி பெரிதாகிக் கொண்டே இருந்ததாம், கடைசியில் சைவ மகாகனத்துக்கு மஹா விஷ்ணு தரிசனம் தந்தாராம். இதைப் பத்திரிகையிலே வெளியிட, மித்ரன் ஆசிரியர், உலகப் பொருளாதார மென்ன, யுத்தத்தின் போக்கென்ன, நாணயமாற்று விகித விளக்க மென்ன நாட்டுப் பொது நிதி விஷய மென்ன, சர்ச்சிலின் தவறு. ஸ்டாலினின் கவனக் குறைவு, சீனாவின் சிரத்தை. அமெரிக்கரின் அக்கரை, என்ற இன்னோரன்ன பிற மகத்தான விஷயங்களிலே மனதை இலயிக்கச் செய்யும் ஆசிரியர், மகாவிஷ்ணு மகாகனம் கனவிலே பிரத்யட்சமானார் என்ற செய்தியை வெளியிட்டதே. இன்னும் சில கூறட்டுமா" என்று மேலும் பேசத் தயாரானான் வீரன்.

"வேண்டாம்! வேண்டாம் வீரா! உன் கனவு பற்றியே இக்கிழமை வெளியிடப் போகிறேன்" என்று வீரனிடம் கூறினேன், வெளியிட்டு விட்டேன். என் வேலை முடிந்தது, இனி சிந்திப்பது உங்கள் வேலை!!

ஆறு காலுடைய எருமைக் கன்று, மூன்று கண்ணுடைய மாடு, ஆண் பெண் இல்லாது அலியாக இருக்கும் கோழி, இருபக்கம் தலையுள்ள பாம்பு, கிளைகளை உடைய பனைமரம் இன்னும் இதுபோன்ற பலவற்றை இயற்கையின் விசித்திரம் என்பர், இயற்கைக்கு இவை மாறுபட்டிருக்கிற காரணத்தால்.

சிவலிங்கம் சாட்சி சொல்வது, எலும்பு பெண்ணுருவாவது, பனை ஓலைத்துண்டு வெள்ளத்தை எதிர்த்துச் செல்வது, கருங்கல் பாறை மிதப்பது, நரி பரியாவது, அறுத்த கறி சமைத்த பிள்ளை உயிர் பெற்று எழுந்து வருவது, பன்றியும் அன்னமும் அடிமுடி தேடுவது, ஒருவர் முதுகில் பிரம்பால் அடித்ததும் அனைவர் முதுகிலும் அடி விழுவது, யானை கதறினதும் ஆண்டவன் வருவது, சிலந்தி பந்தல் போடுவது, சிவனைப் பூஜித்த யானை சிவபதம் அடைவது போன்றவைகள் எங்கும் எக்காலத்திலும் நிகழ்ந்திருக்க முடியாத கட்டுக் கதைகள்—அண்டப் புளுகுகளே யாகும்.

அந்தந்த மதவாதிகள், தங்கள் தங்கள் சமயங்களுக்கு ஆள் சேர்க்கவும், அவ்வாறு சேர்த்த பேர்களை ஏமாற்றிச் சுகஜீவிகளாகக் காலங் கழிக்கவும் செய்து வைத்த தந்திரோபாயங்களே யாகும்.

இவை யனைத்தும் காட்டு மிராண்டிக் காலத்துக் கருத்தோவியங்களாகும். இந்தக் குருட்டுப் போக்கு, இந்த நாட்டில் மட்டு மன்று, எந்த நாட்டிலும் ஓர் காலத்தில் மக்களிடம் இருநததான் வந்திருக்கிறது. இந்த இழிந்த நிலை—இருண்ட மதி—மற்ற நாடுகளில் எல்லாம் மாறி, அறிவுக்குகந்த புதிய போக்கு ஏற்பட்டுப் பல ஆண்டுகள் ஆகி விட்டன.

அங்கு படித்தவர்கள், பழைமைக்கு மெருகிட்டுப் பளபளப் பாக்கி, காலத்தால் கவர்ச்சி இழந்துபோன கருத்துகளுக் கெல்லாம்தத்துவார்த்தம் கூறி, என்றென்றும் 'மக்களின்' மதி அந்த காலத்திலேயே தவழந்து,

கொண்டிருக்கச் செய்யும் சீரற்ற செயலை மேற்கொள்ள வில்லை. மூட மதியினரான முடிதாங்கிகள் தரும் தண்டனைக்கும், குருமார்களின் கோபத்திற்கும் ஆளாகி ஆவி பிரிய நேரிட்டாலும், உயிருடனே கொடுமைக்குள்ளானாலும், மக்களுக்கு மதியூட்டும் மார்க்கத்தைக் காணப் பின்னடையவில்லை. மக்களின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கந் தேடினார். தேவாலயத்திலிருந்த தேவர்களையும், அவர்களைக் குறித்துக் கூறப்படும் கற்பனைகளையும், அறிவைக் கெடுக்கும் அபத்தக் களஞ்சியங்களெனத், தயவு தாட்சண்யம் பார்க்காமல் அம்பலப் படுத்தினார், சிந்தனை வளர்ந்தது. புது யுகமும் பிறந்தது. மக்களும் புது வாழ்வும் வளமும் பெற்றனர்.

வேறு துறையிலே வேலை பார்க்கும் படித்த மேதாவிகள் இருக்கட்டும், படித்து பட்டம் பெற்று, பல நாடு சுற்றித் திரிந்து அனுபவம் பெற்று, மக்கள் அறிவை, ஆட்டிப் படைக்கும் நிலையிலுள்ள, பத்திரிகை ஆசிரியர்கள்தான் எத்தகைய பணியை மேற்கொண்டுள்ளார்கள்?

கோகிலாட்டமி, மகாத்மியம்—சிவராத்திரி மகாத்மியம்—இது போன்றவற்றுக்குத் தானே பத்தி பத்தியாக, பெர்லின் பிரச்னை—அமெரிக்காவின் ஆதிக்கம்—சோவியத்தின் தொழில்வளம்—முதலியவற்றிற்கு ஒதுக்கும் இடத்தைக் காட்டிலும் மிகுதியாக ஒதுக்குகிறார்கள். இவ்வாறு செய்வதில்லை என்று இவர்கள் மறுத்துக் கூற இவர்களுக்கு நாக்குண்டா?

“8 வயதுக் கிராமப் பெண் சுரஜ் கடவுள்களுடன் சேர்ந்து இருந்ததாகக் கூறுகிறாள். கடந்த 10 நாட்களாக இது நகரில் பரபரப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது. யாவரும் அப்பெண்ணை வந்து பார்க்கின்றனர். சபர்மதி கரையிலுள்ள கிராமத்தில்தான் இச்சிறுமி வசித்து வருகிறாள்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான், இதர ஹிந்து கடவுள்களை நேரில் கண்டதாக இச்சிறுமி தாயாரிடம் கூறினாளாம். இதிலிருந்து கடவுள்களுடன் சேர்ந்து இருந்து விட்டு வந்ததாக இவள் கருதுகிறாள். ஒரோர் முறை நாட்டியமாடி புல்லாங்குழலும் ஊதுகிறாள்."

"தினமணி" 6—10—48 இதழில் இச் செய்தி வந்திருக்கிறது. இப்போது கூறுங்கள், நமது படித்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்க ளென்பதை!

டெலிபிரிண்ட், பல நிறங்களையும் ஏக காலத்தில் பல பக்கங்களில் அச்சடித்து, மணிக்கு ஆயிரக் கணக்கில் முடித்துத் தரும் இயந்திர சாதனம், பலநாடு சுற்றுப் பிரயாண அனுபவம், இவ்வளவும் எதற்குப் பயன் படுகிறது, பார்த்தீர்களா? இத்தகைய பிரசாரம், புரிந்து வரும் படித்தவர்களின் நிலையை எதற்கு ஒப்பிடுவது?

கட்டுரையின் முதலில் கூறப்பட் டிருப்பது போல் இது இயற்கை அற்புதமல்ல, பின்னல் குறிப்பிட்ட புராணகால அபத்தமாகும் இது.

சிறுமிக்குப் பெற்றோர்கள் போதித்த புராண அறிவு, முற்றிவிட்ட காரணத்தால், ஒருவேளை கோபிகைப் பெண்களின் ஒருத்தியாகத் தன்னையும் பாவிக்கும் அளவிற்கு, அச்சிறுமிக்குப் பித்தம் தலைக் கேறிப்போயிருக்கலாம்—சம்பவம் ஓரளவாவது உண்மையை வைத்து வெளியிடப்பட் டிருப்பின். ஆனல், படித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கே, இன்னும் தெளிவு ஏற்படாமல் இருக்கிறபொழுது, சிறுமியின் சிந்தனையில் கோளாறு இருப்பது ஆச்சரிய மன்று!

இத்தகைய 'அற்புதங்கள்' நடை பெறுகின்றன என்ற செய்திகள் பத்திரிகைக்காரர்களுக்குக் கிடைத்த

வுடனே, எவ்வளவு இன்றியமையாத செய்திகள் இருந்த போதிலும் அவற்றை நிறுத்தி விட்டு இவற்றிற்கே முதலிடம் கொடுத்து வெளியிடவேண்டுமென்ற நினைப்பு அவர்களுக்கு எப்படியோ உண்டாகி விடுகிறது. 400, 500 வயதுள்ள ஒருவர் உயிரோடு இருக்கிறார் என்ற செய்தி கிடைத்தால், அது பற்றிய முழுஉண்மைகளையும் அறிந்த பின்பே பத்திரிகைகளில் வெளியிட வேண்டு மென்ற நல்லெண்ணம் பெரும்பான்மைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு உண்டாவ தில்லை. இவ்வாறு வெளியிடப்படும் 'அற்புதச்' செய்திகள் வெளியிட்ட சில காலத்துக்குள் மறைந்து விடுகின்றன. கடவுளோடு பேசிய பெண் இப்ப என்ன செய்துகொண்டிருக்கிறாள்? 465 வயதுள்ள மனிதன் இப்போது எங்கு இருக்கிறான்? இவர்களைப் பற்றி அளவு கடந்து புகழ்ந்து மக்கள் மனதைக் கவரும் முறையில் பத்திரிகைகளில் எழுதினரே! இவர்களைப் பற்றி இப்போது ஒன்றும் தெரியவில்லையே! ஏன்? என்று கூடப் பத்திரிகை ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பாமரமக்களுக்கு ஏதாவது புதியதாகக் கவர்ச்சி அளிக்கக் கூடியதாக இருந்தால் அதுவே போதும் என்ற அளவில்தான் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் நடந்து கொள்கின்றனரே யன்றி, தங்களுக்குக் கிடைக்கும் செய்திகளைப் பரிசீலனை செய்து எழுதுபவர்களுக்கு மட்டு மல்ல—படிப்பவர்களுக்கும் அறிவு இருக்கிறது என்று எண்ணி, உண்மைக்கும் அனுபவத்துக்கும் பொருந்த செய்திகளை வெளியிட வேண்டு மென்று கருதுவதில்லை. இந்த இரங்கத் தக்க நிலை மாறும் வரையில் பல அற்புதங்கள் இந் நாட்டில் உண்டாக்கப் பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

* * *

"வெண்ணிறப் பட்டுடுத்திச்—
சந்தனம் மேனியெலாம் பூசிக்
கண்கவர் பூஷணங்கள்—
அணிந்து கட்டில் அறைநோக்கிப்
பெண்கள் பல பேர்கள்—
சூலவிப் பின்வர முன் நடந்தார்!"

யார்? மடாதிபதி! சைவ சமயத்தைத் தழைக்கச் செய்து அதன் மூலம் மக்களிடை சமரச சன்மார்க்கம் நிலவச் செய்வதற்கென அந்நாள் மன்னர்கள் அளித்த 'மான்யங்களை', ஆண்டு அநுபவிக்கும் மடாதிபதிகள்!

பெண்கள் பின் வர, முன் நடந்த மடாதிபதி, எங்கு சென்றார்? என் செய்தார்?

"பட்டு மெத்தைதனிலே—மணமே
பரவும் பூக்களின் மேல்
தட்டிலிற் பக்ஷணங்கள்—அருந்திச்
சைவத்தை ஆரம்பித்தார்."

இவ்வளவு சோபிதமாக சைவம் ஆரம்பிக்கப் பட்டவுடன் "கட்டிக் கரும்பினங்கள்—சகிதம் கண்கள் உறங்கி விட்டார்" மேலும் சில நடந்தன, மடாதிபதியின் கனவில்.

மடாதிபதியின் வாழ்க்கை இருக்கும் விதம் இது வெனக் காட்டவே, கவி இக் கற்பனைக் கவிதையை எழுதினார். ஆனால் அதில் கனவும் பிறவும் கற்பனையாக இருக்கலாம். ஆனால் மடாதிபதிகளின் வாழ்க்கை சித்தரிக்கப்பட்டிருக்கிறதைக் கற்பனை என்று எவரும் துணிந்து கூறார்!

தென்னாட்டில் "திவ்ய க்ஷேத்திரங்கள்" என்பவைகளைப் போன்ற "மகிமைகள்" கற்பிக்கப் பட்டுப் பலப் பல மடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. முன்னாள் மன்னர்கள் மடங்களுக்கெனக் கிராமங் கிராமமாக

மான்ய மளித்தனர். ஆயிரமாயிரம் வேலிகளும் அதைச் சூழ்ந்த அழகிய கிராமங்களும் இன்றும் பல பெரிய மடங்களுக்குச் சொத்தாக உள்ளன. மடத்தில் மடாதிபதி இருக்கிறார். நாட்டுக்கொரு அரசன் இருத்தல் போன்று. ஆனால் மடாதிபதிகளின் மாண்பு கவி கூறிய படி இருந்தால்தான் மடாதிபதிகளைக் குறித்து கதைகளில் கண்டித்து எழுதப்பட்டு நாடகங்களின் மூலம் காட்டப்பட்டு, படக் காட்சிகள் மூலமும் பரப்பப் பட்டது.

## மடாதிபதிகளைப் பற்றி மக்கள் கருத்து

தென்னாட்டிலுள்ளோரும், கடல் கடந்து வாழும் தமிழரும், **சுவாமிகாள், யோகாப்பியாசத்திற்கு எழுந்தருளலாமே!!** என்று ஒரு மடாதிபதி மற்றொரு மடாதிபதிக்குக் கூறியதாகச் சந்திரகாந்தா எனும் படக் காட்சியில் காட்டப்படும் காட்சியை மறந்திருக்க முடியாது. அப் படம் காட்டப்பட்ட காலையில் ஊரெங்கும், தெருவெங்கும், வீடெங்கும் இதே பேச்சுத்தான்! **சுவாமிகாள்!!** என்ற சத்தம், சிரிப்பு, கேலி, கண்டனம் இவ்வளவும் நடந்தது.

சைவம் தழைக்க, தமிழ் வளர தமிழ் வாழ, வழி கோலவும், வகை தேடவும், பணியாற்றவும் நிறுவப் பட்ட மடங்களின் அதிபர்களைப் பற்றி, மக்கள் எவ் வளவு—எங்ஙனம் கருத்துக் கொண்டுள்ளார்கள் என்பது அந்தப் படத்துக்குக் கிடைத்த "அமோகமான" வரவேற்பிலிருந்தே நன்கு விளங்கிற்று.

மக்கள் எங்ஙனம் மடாதிபதிகளைக் கண்டு வருகின்றனர் இன்றைய தினம்.

அரண்மனை போன்ற மடம், அதைச் சுற்றிலும் பூந்தோட்டம், சிற்றாறு போன்ற கால்வாய், அங்கு செவ்விளநீர் மரமும், செவ்வாழைக் கன்றும், அல்லியும் ரோஜாவும் அலங்கரிக்கும் தோட்டம், அங்கு ஆயாச

மின்றி உலவும் உருவங்கள், மேனி சிவப்பு, அதிலே ஒரு பளபளப்பு, உடை காவி, அதிலே ஒரு மினுமினுப்பு, மாலை உத்திராக்கம், அதற்கு பொன் மேல் மூடி, நெற்றியில் நீறு, அதிலே பரிமளத்துக்குப் பூச்சு, தங்கத் தாம்பாளத்தில் ராஜபோக உணவு, வெள்ளிக் கோப்பையில் வெந்நீர், பளிங்கு கிண்ணத்தில் பனிநீர், ஐவ்வாதும் புனுகும் சிமிழில், ஜாதிக்காய் ஜாதிபத்திரி மற்றொன்றில், குளோப்பும் லஸ்தரும் உள்ள கொலு மண்டபம், அதற்கு அடுத்து அந்தப்புர மெனத்தக்க அலங்கார படுக்கை அறை, அங்கு நிலைக் கண்ணாடி, நேரே கண்கவரும் கட்டில். அதன்மீது பட்டுமெத்தை அதன்மீது பரிமள முல்லை. திவ்வியமான திண்டு தலையணை, அதன்மீது சொகுசாகச் சாய்ந்து சுந்தரமிக்க தம்பிரான் சைவத்தின் பிரதிநிதியாக விளங்குகிறார். மக்கள் காண்பது இது! ஆனால் இதனையா விரும்புவர் மக்கள்? இக்காட்சிக்கா முன்னாள் மன்னர்கள் மக்களின் பொருளை மடத்துக்குத் தந்தனர். மக்களில் சிலரை மடாதிபதியாக்கினர்? இல்லை! இல்லை! மற்றையோர் வாழ்க்கையில் உழன்று வருவதால் சன்மார்க்கத் தொண்டாற்ற, தமிழ்த் தொண்டாற்ற வசதியும் நேரமும் கிடைக்காது வாடுகின்றனர். அக்குறை நீக்கி மக்கள் தொண்டுக்கெனவே சிலர் இருத்தல் நன்று என்ற நன்னோக்குடன் மடங்களை நிறுவினர், அதிபர்களை ஆளவிடுத்தனர்! அந்தோ விபரீதமே! மடாதிபதிகள் மடத்தை ஆள்வதைக் காண்கிறோம். மக்களிடை ஆள்வதில்லை. மக்களிடை வருவதுமில்லை. இந்நிலை சிற்றரசர்போல், சீமான்போல், முதலாளி போல் மடாதிபதிகள் வந்துவிட்டனர் என்றால், மக்கள் எங்ஙனம் ஆதரிப்பர், எங்ஙனம் பொறுப்பார்!

**கால நிலைமை எங்ஙன முள்ளது?**

நடக்கும் காலம் என்ன? "எலும்பைப் பெண்ணுருவாக்கும்" காலமா, ஏடு எதிர்நோக்கிச் செல்லும் காலமா, நரி பரியாகும் நேரமா? இல்லை! ஆராய்ச்சிக் காலம், அறிவே வழிகாட்டியாக அமைந்துள்ள காலம், கோலாட்சியை மாற்றி குடியாட்சி அமைக்கும் காலம், முதலாளித்வத்தை நீக்கி சமதர்மத்தை அமைக்கும் காலம், புத்தம்புது கருத்துக்கள் பூத்திடும் நேரம், புரட்சிக்காலம்!!

இந்தக் காலத்தில் மடாதிபதிகள், இந்நிலையில் இருப்பதெனில், மக்கள் மனதில் அவர்பால் மதிப்பும் அன்பும் ஒழுகுமென்று கூறமுடியும். அங்ஙனங் கூறல் உண்மையை மறைப்பதாகும். பட்டணப் பிரவேசத்திற்காகப் பல்லக்கில் பரிமளகந்த மணிந்து, இரவைப் பகலாக்கும் விதத்தில் எண்ணற்ற விளக்குகள் புடைசூழ மக்கள் முன்பு பவனி வரும் "தம்பிரான்கள்" எங்ஙனம் மக்களால் போற்றப்பட முடியும்.

தம்பிரானின் தங்க மேனியைக் கண்டு தமது உடலில் உள்ள ஒடிசலையும் மக்கள் காண்பரேல் சைவத்தின் மாண்பு தம்பிரானுக்குச் சென்றதேயன்றி நமக்குக் காணேமே என்று ஏங்காமலிரார். சைவத்தைப் பரப்ப வந்தவர் தங்கப் பல்லக்கில் முத்து வடமும், பவள மோதிரமும், தங்கத் தோடுகளும், வெண்பட்டாடையும் உடுத்திப் பவனிவர, உழைத்த உழுத, அறுத்த, பிளந்த கைளும், அறுத்த கால்களும், ஒட்டிய வயிறும் படைத்த மக்கள் கண்டு உளத்தில் என்ன எண்ணுவர். சைவத்தின் சிறப்பே சிறப்பு எனறு களிப்பரா!

"தோடுடைய செவியின்—விடை ஏறி" தம்பிரான்களை இங்ஙனம நடக்கும்படி "அருள் பலிக்க" நமக்குக் காடுபோல் வீடும், எலும்புக் கூடுபோல் குடும்பத்தினரும் இருக்கத்தான் அருளினர் போலும்! என்னே இவ

ரின் நீதி! என்று ஏன் எண்ணமாட்டார்கள். ஆயிரம் தொழிலாளரைப் பஞ்சாலையில் வேலைக்கு அமர்த்தி முதலாளி, ஆறு நாளைக்கொரு முறை வேலை நிறுத்தப் புயலில் சிக்கும் இந்தக்காலத்தில் மடாதிபதிகள் வாழ்க்கையை ஒரு, உல்லாச ஊஞ்சலாக்கிக்கொண்டு சைவத்தைச் சாய்வதற்கு சோபாவாகக் கொண்டு **"மந்திரமாவது நீறு—வானவர் மேலது நீறு"** என்ற பாடலுக்கு மக்கள் செவி சாய்க்க வேண்டுமென விரும்பினால் அது நடக்கிற காரியமா?

**மடங்களைப் பற்றி நமது கருத்து**

மடங்கள் சன்மார்க்க சாலைகளாக, தமிழன் மன்றமாக, தமிழர் நல் வாழ்க்கைக்குப் பயிற்சிக்கூடமாக இருத்தல் வேண்டும் என்பதும், மடத்துச் சொத்துப் பூராவும் இத்தகைய பணிக்கே பயன்பட வேண்டுமேயன்றி, கையில் அணிந்துள்ள வைர மோதிரத்தின் வெளிச்சம் பச்சை மோதிரத்தின் ஒளியை அடக்க முயன்று தோற்க, அஃதுகண்டு காதுகளிலே தொங்கும் தங்கக் குண்டலம் தக தகவெனச் சிரிக்க, தம்பிரான்கள் காட்சியளிப்பதற்குப் பயன்படக்கூடாது என்ற கருத்துடையோம் நாம். நமது கருத்து காலத்தின் கண்ணாடி என்பதை யாரும் மறுக்கார்.

தமிழ் மன்னர்கள் அன்று மடாதிபதிகள் மூலம் மக்களின் அறிவும் தன்மையும் வளர வேண்டும் என்றெண்ணியே பெரும் பெரும் சொத்தை ஒப்படைத்தனர். இதனைக் கொண்டு மடாதிபதிகள் மக்களிடை உலவித் தொண்டாற்றி வந்திருப்பின் தமிழ்நாடு எத்தனையோ விதத்தில் முன்னேறியிருந்திருக்கும்.

சில மடங்களில் வித்வான்கள் பாடங் கற்பதும், தத்துவார்த்தம் பயில்வதும், கவி கற்பதும் நாம் அறிவோம். பண்பாடியும் பதிகம் கோர்த்தும் தேவார திருவாசகம் ஓதியும் திருவிளையாடற் புராணத்தின் உட்கருத்துக்களை உணர்த்தும் "தீவண்ணனும் எமது

சிவனர்" என்று திருத்தாண்டகம் பாடியும் பிரணவத்தின் கருத்து கற்றும் வரும் பண்டிதர்களுக்கு மடங்கள் இடம் அளித்தன என்பதையும் நாம் அறிவோம். பரிசுகள் வழங்கும் மடங்களையும் நாம் அறிவோம். ஆனல், இவைகள் போதா; இவைகள்தான் முறை என்றும் நாம் எண்ணேம்.

மடங்களில் பயின்ருேர், மாசற்ற தமிழ் கற்றிருப்பர். ஆனல் அவர்களின் புலமை பழைமையை மீண்டும் மக்களிடையே பரப்பப் பயன்பட்டதே யன்றி காலத்துக்கேற்ற பணியாற்றத் தூண்டவில்லை. "தில்லை நடராஜனின் திருத்தாண்டவத்துக்கு" மற்ெருரு தத்துவார்த்தம் கூறவும், உமையொரு பாகனின் உருவ அமைப்புக்கு உவமை கூறவும் உதவிற்றே யன்றி, உலகுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள உருமாற்றம், உளமாற்றம், ஆகியவற்றை விளக்க உதவவில்லை.

"முன்னிருந்தோர் மதங்களைப் பற்றியே பாடிப் பாடி உயர்ந்த பக்தி நிலைக்கு வந்து விட்டார்கள். மற்றவைகளைப்பற்றி அவர்கள் பாடக்கூட நினைத்ததில்லை. முதல் நூல், வழி நூல், சார்பு நூல் இந்த மூன்றையுந் தவிர வேறு வகையில் ஏதாவது செய்தால் அந்தக் காலத்தில் ராஜாக்க ளிடமிருந்த கவிப்பெரு மக்கள் காதையோ, மூக்கையோ, அறுத்துவிட உத்தரவிட்டு விடுவார்கள். 50 வருடங்களுக்கு முன்னல் கடவுளுக்கும் மனிதனுக்கு மிடையே யுள்ள சம்பந்தத்தைப் பற்றிப் பாடாத வேறு நூல்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? கடவுளையே பாடவேண்டிய கஷ்டத்திலிருந்து விடுபட விரும்பிய சிலர் கடவுளை நாயகனுக வைத்துக் கவி யியற்ற ஆரம்பித்தார்கள். கடவுளைப் பற்றிப் பாடினல்தான் நல்லவன்! இல்லாவிட்டால் கவிஞன் அல்ல."

### மடாதிபதிகள் கடமை

அவர் கூறிய முறையிலேயே, நம் நாட்டுக் கவிகள், தேய்ந்த பாதையிலேயெ நமது உருளும் வண்டியைச் செலுத்தினர், காரணம், அது வசதியாக இருந்தது. அதுவும் கிடைத்தது. மடாதிபதிகளில் சிலர் இதனை ஆதரித்தனர். இதன் பயனாகத்தான் "தமிழ்ப் புத்தக சாலையில் ஒன்றை எடுத்தால்" அங்கிங்கெனாதபடி என்றுதான் ஆரம்பிக்கும். அந்தப் பழைமை நெளியும். புதுமை எனில் புருவத்தை நெளித்துக்கொண்டு புலவர்கள் போய் விடுவர். "முந்தி இருந்தது பழைய பதிப்பு இப்பொழுதிருப்பது புதிய பாக்கட் சைஸ் பதிப்பு. இவ்வளவுதான் வித்தியாசம்."

உலகத்தில் வேறு கருத்துகள் இல்லையா! உண்டு! எண்ணற்ற புதுப் புதுக் கருத்துகள் உண்டு. மறைந்து கிடக்கும் மாண்புகள் எவ்வளவோ உள. அவைகளை வெளிக்குக் கொண்டு வருதலும் புதுக் கருத்துரைகளைப் பரப்புதலுமே **மடாதிபதிகள்** செய்ய வேண்டிய கடமை.

புராண இதிகாசங்களின் மூலம் மக்களிடம் வளர்க்கப்பட்டுள்ள மூடநம்பிக்கை, குருட்டுக் கொள்கை, இருட்டு எண்ணம் கூன் மனப்பான்மை ஒட்டப்பட மடாதிபதிகள் புலமையும் புதுமையும் பூத்த பொன்மொழியாளரை ஆதரித்துச் சிறு சிறு புத்தகங்கள் வெளியிட்டுப் பரப்பவேண்டும், சீரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கவேண்டும். அறிவுக் கதிரும் ஆராய்ச்சிக் கதிரும் யாங்கணும் பரவச் செய்தல் வேண்டும். ஜாதிமத பேதமெனும் பித்துப்பிள்ளை விளையாட்டை அடக்க வேண்டும். அன்பும் அமைதியும் பரவச் செய்தல் வேண்டும், அண்ணாந்து விண்ணைப் பார்த்து அழும் மனப்பான்மை ஒழியவும், உழைப்பில், உலகில் நம்பிக்கை பிறக்கவும் செய்தல் வேண்டும். இவைகளே காலத்தின் தன்மைக் கேற்றன. இவைகளை விடுத்து,

மீண்டும் 'பித்தா பிறைசூடி' என்ற பாடலையே பரப்பிக் கொண்டு போவோமேயானால் பித்தம் தெளிய மருந்தே கிடைக்காமற் போய்விடும்.

இன்று மக்கள் ஆரியத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். சைவர்கள் தமிழை, தமிழ் வாழ்வைப் போற்றுபவர் என்று பெருமையுடன் கூறிக் கொள்வதைக் கேட்டுள்ளோம். அவர்கள் ஆரியத்தை அகற்ற என் செய்தனர்? என் செய்ய எண்ணுகின்றனர்? மீண்டும் அந்த "மண் சுமந்த படலத்துக்கு" மதிப்புரை எழுதிக் கொண்டிருக்கத்தான் போகிறார்களா? மடாதிபதிகள் இதனைத்தான் "புலவர் பணி" எனக் கொள்ளப் போகின்றனரா என்று கேட்கிறோம்.

**ஒன்று கூறுகிறோம்**

மடாதிபதிகளுக்கு ஒன்று கூற விரும்புகிறோம். மக்களின் கண்கள் திறந்திருக்கும் இந்த வேளையில் நீவிர் அவர் தம் மனம் உம்பால் அன்பினால் இழுக்கப்படும் விதத்தில் நடத்தலே முறையாகும். ஜமீன்தார் ஒழிப்புமசோதா, கடன் ஒழிப்பு மசோதா பால்ய விவாக ஒழிப்பு மசோதா, எனச் சட்டங்கள் வரும் காலத்தில் மட ஒழிப்பு மசோதா வரவே வராது என யாரால் உறுதி கூற முடியும்? மடாதிபதிகள் மக்களின் அதிபர்களாகி, பணியாற்றினால்தான் தப்பமுடியும். இன்றேல் கவி கற்பனையில் கூறியபடி, '**மடத்தின் ஆஸ்தியெல்லாம்-பொதுவில் மக்களுக்காக்கி விட்டேன்**" எனச் சட்டம் கூறும்!

"**எப்படி நான் பிரிவேன்—அடடா இன்பப் பொருளையெல்லாம்**" என்று தம்பிரான் துள்ளி விழுந்தழுதாலும் மக்கள் "ஒப்பி உழைத்ததில்லை-சிறிதும் உடல் அசைந்ததில்லை" என்று கூறுவர்!

பல மடாதிபதிகள் பலப்பட இலட்சங்கள் தந்து அத்தொகை வெறும் புராணீகர்களுக்குப் போய்ச்

சேராமல் புதுமைக்கு உழைப்போர்பால் சேர்ந்து புதுமை பரவி, புன்மை நீங்கி, நாடு ஓங்க, நலம் ஓங்க, தமிழ் தழைக்க உதவும்படி செய்தல் வேண்டும். தமிழ் கெட இந்தி நுழைந்தபோது தமிழ் நாட்டில் கொந்தளிப்பும் போரும் நேரிட்ட காலையில் தமிழ்த் தம்பிரான்கள் ஆரிய ஆட்சிக்கு எதிராக மூச்சு விட்டால் மூக்கறுபடும் எனப்பறந்து மூலையில் கிடந்தனர் தமிழர் இதனை மறந்தாரில்லை. கொதித்தனர். அது முற்று முன்னம் முனைந்து நின்று மடாதிபதிகள் முத்தமிழ் வளர்த்துத் தமிழ்நாட்டைத் தமிழருக்காக்கும் பணியில் ஈடுபட வேண்டும். இதைச் செய்யின் "எங்கள் மடாதிபதி" என்று மக்கள் அன்புடன் கூறி இன்புறுவர், இல்லையேல் "ஸ்சைவத்தை நித்த நித்தம் முயன்று புவியில் நீளப் பரப்பியது போதும், இனி மடம் மக்களுக்கு ஆகட்டும்" எனக் கூற, மக்கள் முன் வருவர். காலம் துணை செய்யும். சட்டம் "சரி" என்னும்!!

பண்டைக்கால மன்னர்களும், பொன் படைத்த பிற சிலரும், அன்றிருந்த மடாதிபதிகளிடமோ அல்லது தேவையை உத்தேசித்து அதற்கென உண்டாக்கப்பட்ட மடாதிபதிகளிடமோ தங்களுடைய சொத்துக்களில் ஒரு பகுதியை எடுத்து அவர்களிடம் ஒப்படைத்தனர் இவ்வாறு ஒப்படைத்ததற்குக் காரணம், சமய வளர்ச்சி, மொழி வளர்ச்சி நடைபெறுவதற்கு என்று சொல்லப்படுகிறது. ஆனல் இந்த மடாதிபதிகளால் சமயமும், மொழியும், வளர்ச்சியடைந்திருக்கிறதா என்ருல், இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. இந்த முடிவை நாம் கூறினல் நம்மை நாத்திகப் பட்டியில் சேர்த்து, "இவர்கள் இப்படிக் கூருமல், வேறு எப்படித்தான் கூறுவார்கள்" என்று மிக எளிதாக நம்மீது குற்றம் சாட்ட, ஆத்திகர்கள் என்று தம்மை விளம்பரப் படுத்திக்கொண்டுள்ள சிலர் தயாராய் இருப்பர் என்பதை நாம் அறிவோம். ஆனல் மடாதிபதிகள் மீது இந்தக் குற்றச் சாட்டைச் சுமத்து

பவர் நாமல்ல. நாம் எந்த காரியத்தைச் செய்தாலும், அது, நாத்திகமாகவும், மதத் துவேஷமாகவும், வகுப்பு வாதமாகவும், பிறர் மீது வேண்டுமென்றே சுமத்தப் படும் பழியாகவும்தானே கருத்தழிந்தோரால் கருதப் படுகின்றது.

எனவேதான், இந்தக் "குற்றம்" நம்மீது சுமத்தப் படுவதற்கு முன்னர், "இதிலும் இவர்கள்தான் தலையிடுகிறார்கள்" என்ற பழி நம்மீது சாட்டப்படுவதற்கு முன்னர், வேறொரு திசையில் இருந்து இந்தக் குற்றச் சாட்டுக் கிளம்பி இருக்கிறது. நாம் செய்யவேண்டிய பணி, நம்மை நாத்திகர் என்று சதா தூற்றிக்கொண்டிருக்கும் திசையில் இருந்து கிளம்பி வேலை செய்வது கண்டு களிப்படைகிறோம்—நம்முடைய பிரசாரம், நாம் எதிர்பாராத திசைகளிலும் புகுந்து, நம்முடைய பணியில் பங்கெடுக்கும் பண்புபெற்ற நிலைகண்டு பூரிப்படைகிறோம்—நாம், நாட்டு மக்களுக்கு நல்லதென்று செய்யும் ஒவ்வொரு காரியங்களும் நம்மை நிந்திப்பவர்களாலேயே வரவேற்கப் படுவது கண்டு மகிழ்கிறோம்.

வருஷந்தோறும் அநேக இந்துக்கள் இன்னும் மதம் மாறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளால் அதையெல்லாம் தடுத்து மதத்தைப் பலப் படுத்த முடியவில்லை"

இந்து மதத்தின் வளர்ச்சிக்காக அரசர்களாலும், பெருஞ் செல்வர்களாலும், மடங்களுக்குச் சொத்துக்கள் கொடுககப்பட்டன என்று கூறப்படுவதையும், மேலே உள்ள வாசகத்தையும் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டுகிறோம் இந்த வாசகத்தைக் கூறியவர் யார்? 'மதத்துவேஷிகள்'என்ற பழிச்சொல்லுக்குக் காரணமின்றி ஆளாகி இருக்கும் நாமா இதைக் கூறினோம்? இல்லை, இல்லை, நம்மை மதத்துவேஷிகள் எனறு மனமறிந்த பொய் கூறும் ஏடுகளில் ஒனறுதான் இந்த உண்மையை வெளி யிட்டிருக்கிறது. 25—1—49-ல் வெளி வந்த

'தினசரி' என்ற ஏட்டில்—அதிலும் பொது மக்களின் கருத்தை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்படும் தலையங்கத்தில்தான் இவ்வாசகம் இடம் பெற்றுள்ளது.

எனவே, 'தினசரி' யை மதத் துவேஷம் செய்யும் ஏடென்றோ, நாத்திகத்தைப் பரப்பும் பத்திரிகை யென்றோ யாராவது கூற முடியுமா? ஆனால், அந்த ஏடு கூறுகிறது, மடாதிபதிகளால் மதம் பாதுகாக்கப் படவில்லை—அழிக்கப்படுகிறது என்று. இதை நாம் கூறியிருந்தால், இதற்குள், 'நாம் மடாதிபதிகளின் விரோதிகள்' என்று விளம்பரப் படுத்தப்பட்டு, பலரின் கண்டனத்துக்கு ஏன்? மடாதிபதிகளின் போக்கை இப்போது கண்டிக்கும் 'தினசரி'யின் வசைமாரிக்குக்கூட ஆளாகி இருப்போம்.

மடாதிபதிகளின் போக்கைக் கண்டிக்க முன்வந்த 'தினசரி' இந்த அளவோடு நிற்கவில்லை.

"இந்த மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்து விடுவதால் மதத்திற்கு எந்த நஷ்டமும வந்துவிடப் போவதில்லை"

என்று மேலும் கூறி மடாதிபதிகளின் போக்கைக் கண்டித்திருக்கிறது. மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்துவிடுவதால், அதாவது இப்போது மடாதிபதிகள் மேற்பார்வையில் உள்ள கோயிற் சொத்துக்களைச் சர்க்கார் எடுத்துப் பரிபாலனஞ் செய்தால் **எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை** என்று 'தினசரி' கூறுவதிலிருந்து பெறப்படும் உண்மை என்ன? இனியும் இந்த மடாதிபதிகள் ஆதிக்கத்தில் இந்தப் பொதுச் சொத்துக்கள் இருந்தால் நஷ்டம்தான் ஏற்படும் என்பதும், அவற்றைச் சர்க்காரே எடுத்து நடத்தினல் இலாபம் ஏற்படும் என்பதும் தானே 'தினசரி'யின் வாசகத்தில் அடங்கி இருக்கும் உண்மை. இதற்குத் 'தினசரி' கூறும காரணம் எவராலும் மறுக்க முடியாததாகும்:—

"இப்பொழுதிருக்கும் மடாதிபதிகள், பண்டாரச் சந்நிதிகளின் நிர்வாகத்தில் ஊழல்களும் ஊதாரித் தனங்களும்தான் இருக்கின்றனவே ஒழிய மகத்துவம் இருப்பதாக எந்த யோக்கியரும் கூற முடியாது"

என்று எழுதி யிருக்கிறது. நாம் இக் கட்டுரையில் மடாதிபதிகளின் கோலாகல வாழ்க்கையைப் பற்றி ஆங்காங்கு விசாரித்துக் கூறிய கருத்துக்களை எல்லாம் திரட்டிக் கூறுவதுபோல, இரண்டே சொற்களில் அடக்கிவிட்டது. **ஊழல், ஊதாரித்தனம்** என்ற இரு சொற்களும் மடாதிபதிகளின் மகத்துவங்களை அரண செய்யும் நற்சாட்சிப் பத்திரங்கள்தானு என்பதனை அன் பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேம். மடாதிபதி கள் என்ருலே மனங்குழைந்து மண்டியிட்டு வணங்க வேண்டிய 'மகத்துவமான' நிலை மாறி, அவர்களிடம் **ஊழல்கள்** நிறைந்துவிட்டன என்றும், **ஊதாரித்தனங் கள்** மிகுந்து. மலிந்துவிட்டன என்றும் வெளிப்படை யாகவே கூறுமளவுக்கு அவர்களின் அந்தரங்க அலங் கார வாழ்வுகள் அம்பலமாகிவிட்டன என்பதையும் இனியும் மறைத்து வைக்கவோ மறுத்துக் கூறவோ முடியுமா என்று கேட்கிறேம்.

இந்த நிலையில் சில தோழர்கள் மடாதிபதிபள் பக் கம் நின்று அவர்களுக்காக வாதாடும் நிலைமை விசித்திர மாகவே இருக்கிறது, இப்போது மடாதிபதிகளின் நிர் வாகத்தில் உள்ள சொத்துக்களைச் சர்க்கார் நிர்வாகத் தில் கொண்டுவந்துவிடுவது என்ற மசோதாவை எதிர்ப் பவர்கள், சர்க்கார், அத்திப் பூப்பதுபோல் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முற்பட்டால், அதை எதிர்த்து நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர் களே என்பதை யார்தான் மறுக்க முடியும்? இவர்க ளுடைய எதிர்ப்பில் ஏதாவது உண்மையும் நியாயமும் இருக்குமானல், ஒரு பொது மன்றங் கூட்டித் தங்க ளுடைய எதிர்ப்புக்கு உள்ள காரணத்தைக் கூறி

வெற்றிபெற முடியுமா என்பதை வேண்டுமானல் பரீட்சித்துப் பார்க்கட்டும், இதற்கு நாம் மட்டுமல்ல, நாட்டு நலனில் நல்லெண்ணம் கொண்டுள்ள வேறு பலர்கூடத் தயாராக முன்வருவர், இன்று நாடு அந்த அளவுக்கு விழிப்படைந்துவிட்டது.

'தினசரி' கூறுவதுபோல், "மண்ணையும், பொன்னையும், பெண்ணையும் மனத்திலும் மதியாத துறவி என்பதற் கறிகுறியாகச் சாமியார் என்ற பட்டஞ் சூட்டிக்கொண் டிருக்கும் ஒருவர் மண்ணும் பொன்னும் மடாதிபதிகளின் ஆதிக்கத்தில்தான் இருக்கவேண்டும் என்பதற்காக உயிரை விடப் போவதாகச் சொல்லுகிறார்" என்றால், அவருடைய எண்ணத்தில் என்னென்ன சிந்தனைகள் தோன்றி அலைமோதி அலைக் கழித்திருக்கும்—எத்தனை பண்டார சந்நிதிகள் அவர் மனக்கண் முன் தோன்றி,

"எங்களை உய்விக்க வந்த இத்தமரே! உம்முடைய உண்ணா நோன்பினால் எங்கள் கண்ணான கனி ரச வாழ்க்கை காப்பாற்றப் படட்டும்!

அதற்கென எங்களிடம் உருக்கும் சொத்துக்கள் எங்களிடமே இருக்கும்படி சர்க்கார் மனம் மாறட்டும்!

சாகும்வரை—சர்க்கார் இந்த மசோதாவைக் கை விடும்வரை உம்முடைய உண்ணா நோன்பை விடப் போவதில்லை என்பதில் விடாப் பிடியாய் இரும்! உண்ணாமுலையம்மை பாகன் உம்மைக் கைவிட மாட்டார்! உம்முடைய உறக்க நேரத்தில், எம்முடைய புராணங்களில் கூறியுள்ள பிரகாரமாகத்தானே மாறு வேடத்தில் வந்து 'ஞானப்பால்' ஊட்டி உம்முடைய உயிரைக் காப்பாற்றுவார்!

இதனை யார் மறைந்து நின்று பார்த்து வெளியே கூறினாலும், அதனை மறைக்க நம்முடைய பக்தர்கள் தயாராக உள்ளனர்!

அஞ்சுவது யாது மில்லை, அஞ்ச வருவது மில்லை, அன்பரே! அரன் உம்மையும் காப்பாற்றுவார்! எம்மையும் வாழ வைப்பார்! அஞ்சேல்! அஞ்சேல்!!" என்று கூறுவது போன்ற காட்சிகள் அவர் மனக்கண் முன் தோன்றித் தோன்றி அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்த போதிலும், இன்று நாட்டிலுள்ள பெரும் பாலோர் வறுமையால் வாடி வதங்கிக் கிடப்பதையும், அதேபோது, சமயத்தின்பேரால் பண்டாரச் சந்நிதிகள், நிழலிலேயே இருந்துகொண்டு—நிமிராமல் — குனியாமல்—வெட்டாமல் — கொத்தாமல் — பாடு படாமல்— பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டு—பல்லக்குச் சவாரி செய்து பவனி வருவதையும், இனி நாடு பொறுத்துக்கொண் டிராது என்பது மட்டும் உறுதி.

0 0 0

அம்மையின் **மூக்குத்திருகு**, மூன்றரை இலட்சம் ரூபாய் பெருமானம் உள்ளது.

ஐயனின் **வைரமுடி**, முப்பது இலட்சமாமே!

ரங்கனின் முத்து அங்கி, சாமான்யமான விலையா! திருடனிடம் கொடுத்தால்கூட, ஐம்பது இலட்சம் தருவானே!

பாண்டுரங்கனின் மார்பிலே உள்ள மாலையில் புதைத்திருக்கும் பச்சை—உள்ளங்கை அகலமிருக்கும் உலகிலேயே அதுபோன்ற பச்சை கிடையாது— விலை, இன்னமும் யாரும் மதிப்புப் போட்டதே இல்லை!

திருமலை திருப்பதியிலே உள்ள திவ்யாபரணங்கள் மட்டும், எத்தனையோ கோடி ரூபாய் விலை உள்ளனவாம்.

தில்லையில் மட்டுமென்ன குறைவா! திருவண்ணாமலையிலே, அண்ணாமலையாரிடம் உள்ளது கொஞ்சமா!

0 0 0

பக்த கோடிகள் பரவசத்துடனும், பொருளாதார நிபுணர்கள் பரிதாபங் கலந்த ஆச்சரியத்துடனும் பேசுவர். இவ்விதம், நமது நாட்டுக் கோயில்களிலே உள்ள நகைகளின் பெரு மதிப்பைப் பற்றி.

வெள்ளைக்காரக் கவர்னர்களின் முன்பு பட்டு அங்கியை விரித்து அதன்மீது, இந்த ஆபரணங்களைப் பரப்பி வைத்துக் காட்டுவர், கோயில் நிர்வாகிகள்—பூரிப்புடன்—பெருமையுடன்.

இந்தக் "குபேர சம்பத்தை"க் கண்டான பிறகு, கவர்னர்கள், 'கோவணாண்டிகளாக' உள்ள குப்பனும் சுப்பனும் அரைப் பட்டினியாக இருப்பதைக் கூறி, அதற்குக் காரணம், கிராமத்துக்கு ஆறு கிடையாது, ஏரி உண்டு, அதற்குச் சரியான கரைகிடையாது, என்பன போன்ற தகவல்களைத் தந்து, "தர்மப்பிரபு"ஏழைகள் மீது கிருபை வைத்து, 'காருண்ய மிகுந்த சர்க்கார்' இந்த ஏழைகளின் கஷ்டத்தைப் போக்குவதற்கான, "திரவிய சகாயம்" செய்யவேண்டு மென்று 'பிரார்த்தித்து' மனு சமர்ப்பிக்கும், ஊர்பிரமுகர்களைக் கண்டு விட்டு, மோட்டார் ஏறுவார்கள்.

நவரத்னங்களையும் கண்டார்கள் நடைப் பிணமாகும் ஏழைகளையும் கண்டார்கள்!! இது, நெடுநாளையதல்ல.

பல தலைமுறைகளா, பலப்பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள, விலையுயர்ந்த நவரத்னங்கள்—கல்லிழைத்த நகைகள் — தங்க ஆபரணங்கள் — தங்கம் வெள்ளி ஆகியவைகளாலான சாமான்கள்—தங்கத்தில் சிங்கம், வெள்ளியில் ரிஷபம்— பச்சைக்கல் பதித்த மயில்—கோமேதகக் கண்களுடன் கருடன்—குங்குமக் கெம்பு புதைத்த அன்னம்—வெள்ளித் தேர் அதற்குத் தங்கக் குடை—இப்படிப் பட்டவைகள். கோயில்களிலே தூங்கிக் கொண் டுள்ளன.

இவ்வளவும், இங்கு, தாது வருஷப் பஞ்சம்—வங்காளப் பஞ்சம்—பீகார் பூகம்பம்—கங்கைப் பெருக்கம் காவிரி உடைப்பு — காலராக் கொடுமை—உணவுத் திண்டாட்டம்—போன்ற பற்பல, பதைபதைக்கும் சம்பவங்களின் போதும், பரமனின் பெயரால், சிறையில் வைக்கப்பட் டிருந்தன. பக்தர்கள், இந்தப் பணத்துக்கு வட்டி பெறுகிற இடம் **பரலோகம்** என்று நம்பி, இந்த **பகவான் பாங்கியில்,** பெரும் பொருளை டிபாசிட்டாகக் கட்டி வந்தனர், தலைமுறை தலைமுறையாக.

இவ்வளவு பெரும் பொருள் முடங்கிக் கிடப்பதால், எவ்வளவு பெரிய பொருள் நஷ்டம், தொழில் வளக் குறைவு, ஏற்படுகிறது என்பது பற்றிய எண்ணமே ஏற்பட வில்லை. மேலும் மேலும், தத்தமது சக்தியானுசாரம், கைங்கரியம் செய்த வண்ணம் இருந்தனர் அவ் வப்போது அம்மனின் தாலியும் ஐயனின் பூணூலும், குதிரையின் வாலும், யானையின் தந்தமும், மயிலின் தோகையும், மரகத வளையலும், காணமற் போய் விடும்—போனால் என்ன—பக்தர்கள் பதைப்பர்—புலன் விசாரிப்பர்—முடிவு தெரியுமுன்னம், முந்திக்கொண்டு வருவார் ஒரு புதிய பக்தர், காணமற் போனதைப் புதிதாகச் செய்து தர! அவர், கள்ளக் கையொப்பத்தின் மூலம் கனதனவானானவராக இருக்கக் கூடும்! இருந்தால் என்ன! காணிக்கையாக அவர் தரும் பொருளால், அந்தக் கதையை கூறவா முடியும்!!

இப்படிப் பெரும் பொருள் பல தலைமுறைகளாக—சரியான கணக்கும் குறிப்புமற்று—இருந்து வருகிறது. இந்த நீண்ட காலத்தில்—தஞ்சாவூர் அரண்மனை கலனாகி இருக்கிறது, செஞ்சிகோட்டை பாழாகி இருக்கிறது, ஊமையன் கோட்டை மண் மேடாகி இருக்கிறது — எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன— இந்த மாறுதல்களும் குழப்பங்கள், கொந்தளிப்புகள், அரசு மாற்றங்கள் சிறு சிறு

படையெடுப்புகள், ஆகியவைகள் நேரிட்டன—இந்த நிலையிலே, பல தலைமுறைகளுக்கு முன்னம் கோயில்களிலே காணிக்கை செலுத்தப்பட்ட விலையுர்ந்த நகைகளிலே எவ்வளவு காணமற் போய்விட்டனவோ, எவ்வளவு நவரத்னங்கள் இடம் மாறி விட்டனவோ, யார் கண்டார்கள்!! இவ்வளவு பெரும் செல்வம், குறிப்பும் குறிக்கோளுமற்று, கோயில்களிலே, இருந்து வருகிறது.

பொது மக்களின் கவனத்திற்கு, இந்த நிலைமை முதன் முதல் கொண்டு வந்தவர்கள்—கொண்டு வந்த தன் மூலம் பொது மக்களின் கோபத்துக்கே கூட ஆளானவர்கள்—சுயமரியாதைக்காரர்கள் தான்.

நாட்டிலே உள்ள ஏழ்மையையும் திருக்கோயில்களிலே உள்ள செல்வத்தையும், ஒரு சேர எடுத்துக் கூறி, ஏழையை ஈடேற்ற வழி தெரியக் காணோமே என்று சர்க்கார் ஏக்கம் கொண்டதாகக் காணப்படுவது, வெண்ணெயிருக்க நெய்யில்லையே என்று அழும் போக்காகத் தெரிகிறது, என்று எடுத்துரைத்தவர்கள்—பலமான எதிர்ப்புக்கிடையே எடுத்துச் சொல்லி வந்தவர்கள்—சுயமரியாதைக்காரர்கள் தான். இதை நாடு அறியும்—நாடாளும் சர்க்காரும் அறியும்.

இந்தப் "புண்ணியபூமியில்" மட்டுமல்ல, பூலோகத்தில் எந்த நாட்டிலேயும், செல்வம் சேர்ந்ததும, பக்திமான்கள் துவகத்திலே இப்படித்தான், பூஜாலயங்களிலே, பெரும் பொருளைக் குவித்திருக்கின்றனர்.

மண்டிக் கடையில் கணக்கெழுதும் மகாலிங்கம், நாலு காசு சம்பாதித்து, தனிக்கடை வைத்து, ஒரு குறிப்பிடத்தக்க புள்ளியான உடனே அதற்கு முன்பு கழுத்திலே இருந்த சாதாரண உத்திராட்சத்துக்குப் பதில், தங்கக் கவசமிட்ட உத்திராட்சம் அணியவும், மரத்தாலான விபூதி மட்லுக்குப் பதில் வெள்ளி

யாலான விபூதி மடல் வைத்துக் கொள்ளவும், பழனிக்குச் சென்று மூன்று பண்டாரத்துக்குச் சோறிடுவதற்குப் பதில், பழனி கோயில் படிக்கட்டுக்குத் தங்கத் தகடு அடிக்கவும், ஆக இவ்விதமாகவேதான், தனது பக்தியைப் பிரகாசிக்கச் செய்கிருன்.

இந்தத் தனி மனிதனின் சுபாவந்தான். நாட்டுக்கும் சுபாவமாகிறது.

இம்முறையிலே ஆதிநாட்களிலே, 'கண்ணப்ப நாயனுர்' கதையில் கூறப்படுவது போல, காட்டு மலரையும் வேகவைத்த இறைச்சியையும் படைத்த பக்தன் பிறகு, பொன்னையும் மணியையும் பூஜைச் சமான்களாககிறுன்.

பல நாடுகளிலே, காணிக்கைகளைக் குவிக்கும் சுபாவம், பரவி, கோயில்கள் அரசர்களின் வீடுகளை விட அதிகமான செல்வத்தின் இருப்பிடங்களாயின.

அறிவுத் தெளிவும் அதன் பயனுக ஆண்டவனைப் பற்றிய தெளிவும் ஏற்பட்ட பிறகே உலகிலே, பலநாடுகளில், இப்படிப் பொருளை முடக்கி வைப்பது, ஏழையை உயர்த்தி வாழ்வை வளமாக்குவதற்குப் பயன்படக்கூடிய பொருளை வீணுக, கிரீடமாகவும், பதக்கமாகவும், கவசமாகவும், வட்டிலாகவும். பாதக் குறடாகவும், பல்லக்காகவும், நாக ரூபத்திலும் தேரு குவிலும் முடமாக்கி வைப்பது பக்திக்கோ, பரமனின பெருமையைப் பாரறியச் செய்வதற்கோ, பாமரரின் வாழ்வை வளமாக்குவதற்கோ, / பயன்படுவதல்ல, எனவே, இந்த வீண் வேலையை நிறுத்திவிட வேண்டும், இந்தப் பொருள்களை பள்ளிக்கூடங்களாக, வைத்திய சாலைகளாக, ஏழை விடுதிகளாக இல்லாமை நோய்க்கு மருந்திடும் இதமபுரிச்சாலைகளாக மாற்றி அமைக்க வேண்டும், என்ற மாண்பு ஏற்பட்டது.

பற்பல நாடுகளிலும் வேக வேகமாக இந்தப் பண்பு ஏற்பட்டது.

கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்பவனுக்குத் தரப்பட்ட மதிப்பு மங்கி, பள்ளிக்கூடம் அமைத்துக் கல்வித் தொண்டு செய்பவனுக்கு மதிப்பு உயரத் தொடங்கிற்று.

பஜனைக் கூடங்கள் கட்டும் பயனற்ற காரியத்தைப் பழமையை விடவே முடியாத சிலர் கட்டி அழுதனர்—புதிய பண்பினர், பல்கலைக் கழகங்கள் அமைக்கலாயினர்.

உலகிலே இவ்வளவு மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும் கூட, நமது நாட்டிலே மட்டும், தங்க ரிஷபத்தின் மீது சிவனார், உலாவ வந்துகொண்டு தான் இருந்தார்—இருந்தாரா?—இருக்கிறார்!!

கண்டனத்துக்கும் ஏளனத்துக்கும் ஆளான சுயமரியாதைக்காரன் மட்டும் மனதிலே கற்பனை கண்ட வண்ணம் இருந்தான்—இந்தப் பெரும் பொருள், விடுதலை பெற்று நாட்டிலே ஆலைகளாகவும் கல்வி நிலையங்களாகவும், வைத்திய விடுதிகளாகவும். வகையற்றோரின் பராமரிப்புச் சாலைகளாகவும், மாறும் ஒரு காட்சியைக் கண்டு வந்தான். இன்றும், இவை, கற்பனைக் காட்சிகள் தான்! இன்னும் சில காலத்துக்கு, கற்பனைக் காட்சிகளாகவே இருக்கும்-ஆனால் நீண்ட காலத்துக்கு அல்ல—விழிப்பு நாள் விரைந்து வருகிறது—அறிகுறிகள் ஆயிரம் தெரிகின்றன.

சின்னாட்களுக்கு முன்பு திருவண்ணாமலையிலே ஏதோ ஓர் அலுவலின்போது பேசிய அரசாங்க அதிகாரி ஒருவர், கோயிலுக்குச் செலவிடும் பணத்திலே ஒரு பகுதியையாவது கல்விக்காக என்று தரலாகாதா?—என்று கேட்டார். அவ்வளவுதான் அவர் கேட்க முடியும்—அதற்கே அவர் மீது சிலருக்கு ஐயம் பிறந்து விட்டிருக்கும். ஆசாமிக்கு ஈரோட்டு ஜுரமோ? என்று கேட்பர்.

ஓரளவுக்குத்தான், என்ற போதிலும், ஒரு உயர் தர அதிகாரி, கோயில் காரியத்துக்கு அதிகமான பணத்தை இந்நாட்டு மக்கள் செலவிடுகிறார்கள், ஆனால் அந்த ஆர்வம், கல்விக்காகச் செலவிடுவது என்பதிலே வருவதில்லை, என்பதை உணருகிறார்—உணர்ந்ததை உள்ள உறுதியுடன் ஊராருக்கு உரைக்கவும் முன் வருகிறார், என்பதை, எடுத்துக்காட்டும் சம்பவமல்லவா அது. கோழி கூவுகிறது, என்றல்லவா பொருள்! சுயமரியாதைக்காரர் இந்தக் குறிப்புகளைக் கண்டு களிப்படைகிறார்கள்.

* * *

நாம் என்ன செய்வது! நம்மால் என்ன ஆகும்!—என்ற பெருமூச்சுப் பேச்சு நமது பாரம்பரிய வித்தை!!

என்ன நேரிட்டாலும், இயற்கைக் கோளாறு முதற்கொண்டு, வேந்தனின் கொடுங்கோன்மை வரையிலே, நாம் இதே மனப்பான்மையைத்தான் காட்டி வந்திருக்கிறோம்.

ஆறு, வெள்ளமானாலும், நாடு, காடானாலும், மன்னன், மிருகமானாலும், நாம், இவைகளைக் கட்டுக்குக் கொண்டு வரவோ, திருத்தவோ, முயன்றதில்லை—அந்த எண்ணத்துக்கே இடமளிப்பதில்லை எல்லாம் சரியாக நடைபெறும்படி கவனித்துக் கொள்ள ஒருவர் இருக்கிறார்—அவர் இருக்கும்போதே, சில விபரீதங்கள் நேரிட்டால், நாம் எப்படித் தடுக்க முடியும்! நம்மால் ஆகிற காரியமா!!—என்று எண்ணியே, நமது முன்னோர்கள், பல பிரச்சினைகளைக் கவனிக்காமலிருந்து விட்டனர்.

ஆழாழி கரையின்றி நிற்கவில்லையா!—நம்மாலா இந்த அற்புதம் நடைபெறுகிறது—கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் ஆண்டவன் உணவளிக்காமலா போகிறார்—காட்டில் வளரும் பலகோடி

உயிர்க்கு ஊட்டி உணவளிப்பதாரோ—என்றும் பேசி மேதாவிகள் என்று மட்டுமல்ல, ஞானவான்கள் என்றும் பெயர் எடுத்துக் கொள்வதிலேயே, பலருடைய நாட்டம் இருந்து வந்தது. சிற்சில சமயங்களிலே, ஆண் பனையைப் பெண்பனையாக்கி விடுவது, எலும்பை எழிலுடை மங்கையாக்குவது என்பன போன்ற அற்புதங்கள் நடைபெற்றன என்று கூறுவதும்கூட, தேவலீலைகளாகக் கருதிக் கூறப்பட்டவையே யொழிய, ஆராய்ச்சியினுல் ஏற்பட்ட விளைவுகள் என்ற முறையிலே அல்ல,

குஷ்டம் அவனுக்கு—அவனைக் கண்டதும், என்ன தீவினை செய்தானோ முன்பு, இப்போது இப்படி அனுபவிக்கிறான், என்று எண்ணத்தான் இன்றும் நம்மில் பலருக்கு முடிகிறதே தவிர, குஷ்ட நோய் ஏற்படும் காரணம் என்ன, இதை நீக்கும் முறைகள் யாவை, என்பன போன்றவைகளிலே, மனம் செல்வதே இல்லை. நமக்கு மட்டுமா! வைத்தியருக்கே கூடத்தான்!

என்னமோ அப்பா, என்னிடம் உள்ள அபூர்வ மருந்தைத் தருகிறேன்—உன் ‘விதி’ எப்படியோ அதன்படி நடக்கட்டும், என்று, கூறித் தானே அவரும் மருந்தளிக்கிறார்.

இவ்வளவு, சோர்வு—சந்தேகம்— சலிப்பு—இரும்பதற்குக் காரணம், ஒரு சம்பவத்தையோ, நிலைமையையோ காணும்போது, ஏன் இவ்விதமிருக்கிறது, இதை என்ன செய்தால் மாற்றலாம் என்ற அறிவுச் சுறுசுறுப்பு ஏற்படாததுதான். ஆயிரமாயிரம் விஷயங்களை, இந்த மனப்பான்மை காரணமாக, நாம் கவனிக்காமலிருந்துவிட்டோம்-காலமாற்றத்தை, உலகின் மற்றப் பகுதிகளிலே உள்ள நிலைமைகளைக் கவனிக்கும் பண்பை இழந்துவிட்டோம், காக்கை ஏன் கருப்பாகவே இருக்கிறது-கருப்புக் கோழி ஏன் வெள்ளை முட்டை வைக்கிறது—கடற் தண்ணீர் ஏன் உருப்பாகவே இருக்கிறது, என்று

வேடிக்கை பேசிவிட்டு, எதற்கும் விளக்கம்பெற முயற்சிக்காமலேயே இருந்துவிட்டோம்.

மற்றவர்கள் இதுபோல் இல்லை-நல்ல வேளையாக இல்லை....அவர்களும் நம்மைப் போன்றே இருந்து விட்டால், உலகின் நிலை எப்படி இருந்திருக்கும்!!

நோய்க்குக் காரணம், தடுப்பு முறைகள், போக்கும் வகைகள், பரவவிடாதிருக்கும் வழிகள், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சியிலே கவனம் செலுத்தினர்—செலுத்துகின்றனர்.

மழை பொழியவில்லை என்றால், கொடும்பாவிகட்டி இழுப்போமா, கோபால பஜனை செய்வோமா, என்று தான் புத்தி போகிறது. இது வெறும் ஏமாளிப் புத்தி. இதிலேயே, எத்தரின் புத்தியும் வேலை செய்ய ஆரம்பித்தால், மழை பெய்வதற்கு வருண ஜெபம் செய்வது என்று ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட விதமாகத் தான் நம்மவர்களின் சிந்தனை சென்றுகொண் டிருக்கிறதே யொழிய, மேனாட்டு விஞ்ஞானிகள் போலவா, மழை இயற்கை நிகழ்ச்சிதான் என்றாலும், அதையே ஏதேனும் செயற்கை முறையால் நாம் உண்டாக்க முடியாதா, என்று செல்கிறது! அவர்களின் சிந்தனை அந்தத் துறையிலேயும் சென்று. இப்போது மழையை உண்டாக்கும் முறையையும் விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்—இனி இத் துறையில் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்திய வண்ணம் உள்ளனர்.

இங்கு?

“வான மழை போலே
மேனி வண்ணம் கொண்டான்”

என்று பாடிக்கொண்டே காலந் தள்ளுகிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பு வடக்கே ஒரு ஊரில் மழை இல்லாமல் போகவே, அவ்வூர் புத்திசாலிகள், சூரியன்மீது கல்லைவிட் டெறிந்தார்கள், மழை வேண்டும் என்று.

பயிர் வளரவில்லை எதிர்பார்த்தபடி, என்றால் விதை யால் வந்த தவறு, உழவு முறையால் வந்த தவறு, ஏதே னும் பூச்சி புழு அரிக்கிறதா, அல்லது மண்ணின் சத்தே கெட்டுவிட்டதா என்பன போன்றவைகளிலே நம்மவர் களின் எண்ணம் போவதில்லை—பச்சை யம்மனுக்குப் பொங்கலிடுவது — அரசமரத்துக்கு மஞ்சள் பூசுவது, என்று இப்படி ஏதாவதொரு அர்த்தமற்ற விஷயத்தின் மீதுதான் எண்ணம் போகிறது.

தமிழ்நாட்டுப் பிற்கால மன்னர்கள் பலர், மழை காலாகாலத்திலே பொழியாமற் போனால் என்ன செய்வ தென்று பயந்து, மழையைப் பொழியச் செய்ய வருண ஜெபம் செய்வதற்காகப் பார்ப்பனர்களை, ஆஸ்தானத் தின் செலவிலே நியமித்தனர். வருண ஜெபம் செய்வ தற்காகவே, அவர்களுக்கு மானியங்கள்—இனாம்கள்— தரப்பட்டன. தஞ்சை மாவட்டத்திலே, அப்படி வருண ஜெபம் செய்வதற்காக அளிக்கப்பட்ட இனாம்கள், இன்றும் இந்தப் பரம்பரையினரிடம் உள்ளன.

இயற்கை முறையிலே, ஏதேனும் கோளாறு காணப்பட்டால், அதாவது மழையே பெய்யாமலிருப் பது அல்லது மழை அளவுக்கு மீறிப் பெய்வது முதலிய ஏதேனும் நேரிட்டால், கடவுளின் கோபமே அதற்குக் காரணம் என்றுதான் பற்பல நாடுகளிலேயும் ஆதிநாட் களிலே எண்ணம் இருந்தது. பயங்கரமான இடியே, பகவானின் கோபச் சிரிப்பு என்றும், விழியைப் பழு தாக்கும் விதமான மின்னலை, அவருடைய கை வேலின் வீச்சென்றும்தான் அக்கால மக்கள் நம்பினர். எனவே ஏதேனும் பூஜை செய்து கடவுளின் கோபத்தைப் போக்கினால்; அவர் மனம் மகிழ்ந்து, இயற்கையை

முறைப்படி நடந்துகொள்ளச் செய்வார் என்று நம்பினர்—அதற்கேற்றபடியே நடந்துகொண்டனர். ஆனால் அறிவுத் தெளிவு அங்கெல்லாம் ஏற்பட்டுக், கற்பனைகள், கட்டுக்கதைகள் ஆகியவற்றை மறந்து, காரண விளக்கத்தில் கவலை செலுத்தி, ஆராய்ச்சி மனப்போக்கினராயினர்.

இங்கு மட்டுந்தான் இன்றும் அந்தப் பழைய நம்பிக்கை பழுதுபடாது இருக்கிறது. காரணம், அந்தப் பழைய நம்பிக்கையை அப்படியே வைத்துப் பாதுகாப்பதால் இலாபமடையும் சூதுமதியினர் இங்கு இருப்பதுதான்.

"பஞ்ச பூதங்களாம் அப்பு, பிருதுவி, தேயு, வாயு, ஆகாயம் என்பனவற்றைப் பற்றி—" என்று ஆரம்பித்து பஜனை பாடுவதே போதும் என்று நாம் இருந்து விட்டோம். மற்றவர்களோ, அவைகளை ஆராயத் தொடங்கி, பல அரிய காரியங்களைச் சாதித்தனர்—இன்றும் சாதித்த வண்ணம் உள்ளனர்.

இவ்வளவு பெரிய இயற்கைக் கோளாறையும் கண்டு அவர்கள் மிரண்டு, மனதை மறக்கடித்துக் கொண்டதில்லை. எவ்வளவு சிறிய சம்பவத்தையும், ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ளத் தவறியதில்லை.

கோளங்களையும் ஆராய்கிறார்கள், கொசுவைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

வானத்திலே வட்டமிட்டுப் பார்க்கிறார்கள், கடலுக்குள்ளே மூழ்கிப் பார்க்கிறார்கள் - எங்கெங்கு என்னென்ன காட்சிகள் உள்ளன, கருத்துக்கள் கிடைக்கின்றன என்று கண்டறிய.

அதன் பயனாக அவர்களால், நேற்று இல்லாததை இன்று உண்டாக்கிக்காட்ட முடிகிறது—நாளையவாழ்வு நேற்றைய வாழ்வைவிட வசதிகள் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவேறுகிறது.

நாமோ, "இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவே திடமில்லை" என்று சோகக் கீதம் பாடி சோம்பிக் கிடக்கிறோம்.

கோளங்கள் முதற்கொண்டு கொசு வரையிலே, அவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று கூறினது சொல்லடக்கு அல்ல, உண்மை.

சென்ற கிழமை ஒரு ஆஸ்திரேலிய விஞ்ஞானி, ஏற்கெனவே ஆராய்ச்சிக்கு அகப்பட்ட நட்சத்திரங்கள் தவிர, வேறோர் புதுநட்சத்திரம் இருப்பதாகவும், அந்த நட்சத்திரத்திலிருந்து ஒலிசக்தி கிளம்பிய வண்ணம் இருப்பதாகவும் ஆராய்ச்சியால் கண்டறிந்து கூறினார்.

எங்கே இருக்கிறது அந்த நட்சத்திரம், எவ்வண்ணம் இருக்கிறது என்பன போன்றவைகள் இன்னுங் கண்டுபிடிக்கப்படவில்லை, ஆனால், ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அந்த நட்சத்திரம் இருந்தாக வேண்டும் என்று நிர்ணயித்துவிட்டனர்; மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடந்தவண்ணம் இருக்கிறது-சில காலத்தில், புது உண்மைகள் பல வெளிவரக்கூடும் - புது நலன்களும் கிடைக்கக்கூடும்.

சென்ற கிழமை, மற்றோர் பிரபல விஞ்ஞானி **பிக்கார்டு** என்பவர், கடலுக்கு அடியிலே உள்ள நிலைமைகளைக் காணும் கருத்துடன், அதற்கான கருவியை அமைத்துக்கொண்டு கடலுக்குள்ளே சென்றார். அவ

ருக்கு வயது அறுபத்துமூன்று இந்த வயதிலேயும் அவருடைய ஆராய்ச்சி ஆர்வம் அப்படி இருக்கிறது. இனிக் கடலுக்குள் இரண்டரை மைல் ஆழம், சென்று பார்க்கப் போகிறாராம் என்ன உள்ளன என்பவத எல்லாம்.

செவ்வாய், சந்திரன், இவைகளை எல்லாம் கண்டறியும் ஆராய்ச்சி நடந்தபடி உள்ளன.

கிரஹங்களிலே காணப்படும் நிலைமைகளை எல்லாம் ஆராய்கிறார்கள்.

இந்த மனப்பான்மையின் காரணமாக, எவ்வளவோ, பயனுள்ள முறைகளையும், வசதி தரும் வழிகளையும் கண்டுபிடிக்க முடிகிறது.

கோளம், மட்டுந்தானு, ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்கு வந்தது. முன்னாலே கூறியிருக்கிறபடி, கொசுவுந்தான்!

சில பூபாகங்களில், வளம் உண்டு, மழை இருப்பதால்—ஆயினும் அவை, மனிதர் வாழ்வதற்கு ஏற்றபடி இல்லாமல், போய்விட்டன.

நாம் கூறுவோம், கல்லிலே நார் உரிப்பாயோ! மணலைக் கயிறாக்குவாயோ!—என்று.

அவர்கள் அவ்விதம் கூறுவதில்லை. மக்களின் வாழ்க்கைக்கு, வசதியற்ற முறையிலே, உள்ள அந்தச் சதுப்பு நிலத்தையும் அவர்கள், ஆராயாமலில்லை.

சில சதுப்பு நிலப் பகுதிகளிலே, மனிதனையும், பச்சைப் பயிரையும் வாழ விடாமல் செய்வது, துஷ்ட மிருகங்கள்கூட அல்ல, மிக மிகச் சாதாரணமான ஜீவன்—கொசுக்கள்!

இவைகளின் தொல்லையை நீக்க முடியாது, தத்தளித்தே, அந்த நிலப் பகுதிகளை, விட்டு விட நேரிட்டது.

அமெரிக்க கண்டத்திலே **கியூபா** எனும் பிரதேசத்திலே, இப்படிப்பட்ட சதுப்பு நிலம் இருக்கிறது—கொசுத் தொல்லை சகிக்க முடியாததாகிவிட்டது, நோய் பரவலாயிற்று! கொசுக்களை அழித்தாலன்றி, வாழ்வு சுகப்படாது என்று தெரிந்தது, அதற்கு என்ன வழி என்றும் ஆராயத் தொடங்கினர்.

**மார்டின்—சி—கான்** என்ற ஆராய்ச்சியாளர், இந்தத் துறையிலே வேலை செய்து, வெற்றியும் பெற்றுவிட்டார். கொசுக்களைப் பிடித்து அழிக்கும், ஒரு அற்புதமான ‘வலை’யை அவர் கண்டுபிடித்து, அமெரிக்க சர்க்காருக்குத் தந்திருக்கிறார். எவ்வளவு நுண்ணறிவு இந்த ‘வலை’ அமைக்க, உபயோகப்பட்டிருக்கிறது, என்பதைக் கவனியுங்கள்.

ஆறடி உயரம்—மூன்றடி அகலம் உள்ள, ஒரு பெட்டி; அதனுள் மின்சாரத்தால் இயங்கும் திரைகள், இந்தப் பெட்டி, பாடுகிறது—கொசுப் பாட்டு—அதிலும் காதல் பாட்டு!!

பெண் கொசுவின் சத்தத்தை மின்சாரத் துணையால் பதிவு செய்து கிராமபோன் பிளேட்டுகளைத் தயாரித்திருக்கிறார். இந்தப் பிளேட்டுகளினால், பெட்டிக்குள்ளே பெண் கொசுவின் பாட்டுக் கேட்கிறது. இந்த ‘இசை’ கிளம்பியதும், காதற் பாட்டல்லவா, கொசுக்கள், இலயித்து விடுகின்றனவாம்—கீதம் கேட்கும் இடத்திற்கு வருகின்றன, கும்பல் கும்பலாக—பெட்டிக்

குள்ளே போகின்றன—அங்கே அமைக்கப் பட்டுள்ள திரைகள் உள்ளனவே, அவைகளிலே சிக்கிச் சாகின்றன!

எவ்வளவு சிந்தனையைச் செலவிட்டிருக்கவேண்டும். இப்படி ஒரு கருவி அமைக்க.

கொசு விஷயந்தான் என்றாலும், ஆராச்சியாளர்களின் 'மூளை' இது பற்றியும் சிந்திக்காமலில்லை. இந்தக் கருவி கண்டறிவதற்கான செலவை, அமெரிக்க சர்க்கார் ஏற்றுக்கொண்டதாம். இந்த 'பாடும் பெட்டி' யின் விலை, சுமார் இருநூறு டாலர் ஆகிறதாம்.

கோளங்கள் முதற்கொண்டு கொசு வரையிலே, விஷயங்களை அறியவும், விளக்கம் பெறவும், அவர்களின் அறிவு வேலை செய்கிறது; நாமோ, இன்னும், 'கல்லானை கரும்பு தின்ற' கதையைப் படித்து மகிழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

*   *   *

பூவையரைப் பூரிப்புடன் புகழ்வதிலே புராணம், முதலிடம் பெற்று விளங்குகிறது! சாது சன்யாசிகள் பட்டியிலே வந்தவர்கள் வேண்டுமானால், தேசத்தின் நிலைமையைப்பற்றியும், அதன் ஆபாசத்தைப் பற்றியும்,

**"காகமோடு கழுகலகை நாய் நரிகள்**
**சுற்று சோரிடு துருத்தி**
**கால் இரண்டு, நவவாசல் பெற்றுவளர்**
**காமவேள் நடன சாலை**
**மோக ஆசைமுறி யிட்ட பெட்டி**
**மும்மல மிருந்து ஒழுகு கேணி'**

என்று பாடியிருப்பார். ஆனால் இந்த நிலை யில்லாத, ஆபாசமிகுந்த தேகத்தைப் பற்றி, அதிலும் தையலாரின் தேகத்தைப் பற்றிப் பாடத் தொடங்கினாலோ, பக்திப் பாசுரக்காரரும், பாராயண நூல் கோர்த்தவரும், பரமன் அருள் பெற்றவரும், அங்கம் ஒவ்வொன்றும் அழகுற அகக்கண் முன் நிறுத்தி, அளவும் தன்மையும் கண்டு, கனி மொழியினால் கூறுவதிலே, நிகர் இல்லா திருப்பதைக் காணலாம். மும்மலக் கேணியை வேறோர் பக்தர் வர்ணித்திடும் வகையைக் காண வேண்டுகிறோம்.

**"மலரணி கொண்டைச் சொருக்கிலே!**
**கொலுமொழி யின்பச் செருக்கிலே**
**நிலவொளி அங்கக் குலுக்கிலே**
**நிறை பரிமள கொங்கைக் குடத்திலே"**

என்று "குளோசப்" காட்சிகளை முதல் தரமான சினிமா டைரக்டரும் பொறாமைப் படும் அளவுக்குக் காட்டிவிட்டு, "நிமிஷம் இணங்கிய" செய்தியைக் கூறி, அதன் பலனை அந் நங்கை, "சொப்பனத்திலே" வருவதையும் கூறிக் கடைசியில், முருகோனே! மால் மருகோனே! இதனின்றும் என்னைக் காப்பாற்று என்று முடிப்பர். வெல்லும் சொல், கொல்லுங் கண், வேட்கை நகை, குறுகிய நெற்றி, இருண்ட குழல், திரண்ட தனம், மருட்டும் விழி, மதுர இதழ், இவைகளை அவர்கள் துதித்திருப்பதைவிட, அளவிலே ஆறுமுகனையோ அவரின் ஐயனையோ துதித்திருக்கும்! அளவு, குறைவாகத்தான் இருக்கும்! பாயாசமுடன் விருந்துண்டான பிறகு, தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, "என்னமோ, பசி அடங்கக் கொஞ்சம் சாப்பாடு அவ்வளவு தானே வேண்டும். அந்தச் சாப்பாடு எதுவாய்

இருந்தால் என்ன, கூழாளுலும் கும்பி நிரம்பிஞல் போதும் என்று கூறும் குரும்பரின் செயலை நினைவிற் குக் கொண்டுவரும் புராணிகர்களின் சொல்! ஆண்ட வனின் செயலை வர்ணிக்கும் இடத்திலும் பெரும்பகுதி, ஆடவர் சம்பந்தப்பட்ட சமயங்களிலே, குத்து, வெட்டு, அடி, பிடி, நசுக்கு, வெல், சொல் என்ற செயல்கள் செய்தாரென்றும், மாதர் சம்பந்தப்பட்ட இடங்களைக் குறிக்கும்போது குலவு, தழுவு, கூடு, பாடு, இளகு, பழகு, விரும்பு, நெருங்கு, ஆரத் தழுவுதல், இடைசோர ஆடுதல், நிலவில் குலவுதல் புனல் பாடுதல், கானம் பாடு தல் என்பன போன்ற செயல்களைச் செய்தனர். அதா வது, இயற்கையாக வர்ணனைகளைத் தந்தால் சுவை இருக்குமோ என்று அறிந்து சித்திரிக்கப்பட் டிருக்கும். இதனுல்தான் **"புராணங்களை போதை தரும் லேகியம்"** என்று கூறினேம். போதை உடல் வளத்தைக் கெடுத்து உள வலுவைப் போக்குவது போன்ற புராணமும் மக்களின் மதியை மாய்த்து விடுகிறது. ஆகவேதான், மக்களின் மதி துலங்கவேண்டும் என் பதிலே அக்கறை கொண்டவர்கள், இந்தப் புராணப் போதையை உட்கொள்ளாதீர்கள் என்று கூறுகின் றனர். பேதையின் சுவையிலே இலயிப்போரும், அந் தப் பொருளை விற்போரும் இருப்பது போலவே, புராண மயக்கத்தா லாழ்ந்தவரும், புராணத்தை வாணி பம் செய்பவரும் உளர். அவர்கள் ஆயாச மடைவதற் குக் காரணம் இருக்கிறதல்லவா. அவர்களின் ஆயா சத்தை எண்ணி நமது நோக்கத்தை எண்ணி நமது நோக்கத்தை விட்டுவிட முடியுமா, விட்டு விடுவது முறையாகுமா? நாமோ சரிந்துகொண் டிருக்கும் சமு தாயத்தைச் சீராகத் திருத்தி அமைக்க விரும்புகிறோம். தாழ்நிலை அடைந்த இனத்தவர் மீண்டும் தலை தூக்கி வாழ வழிகாண விழைகிறோம். இங்ஙனம் முயற்சி செய்யாத காரணத்தால், முன்னாளில் முடி தரித்து வாழ்ந்த இனம் இன்று ஏழையில் உலாவும் காட்டு

மிராண்டிகளாகி விட்டதைக் காணும்போது, நமது கடமையைச் செய்தாக வேண்டும் என்ற எண்ணம் மட்டுமல்ல, அதனைத் துரிதமாகச் செய்தாக வேண்டும், துளியும் தயக்கமின்றி செய்தாக வேண்டும் என்ற உறுதி பலப்படுகிறது. தொதவரின் நிலை என்ன ஆயிற்று? சிகப்பு இந்தியர் நிலை என்ன ஆயிற்று? ஏன் அவர்கள் அக்கதிக்கு ஆளாயினர்? என்பதன் "சூக்ஷமத்தை" ஆராய்ந்தால், மூடிவைத்து கேடு தானாகப் போய்விடும் என்று இருந்தது ஆகியவைகளே, அந்த இன்னல்களை அளித்துவிட்டன என்பதை உணரலாம்.

* * *

புராணத்திலே உள்ள கருத்துக்களிலே பல நாளா வட்டத்திலே மறைந்து விடுகின்றன என்பதும், பொது அறிவு பரவப் பரவ, பல கருத்துககள் என்று நகையாடப் பட்டுத் தள்ளப்பட்டு விடுகின்றன என்பதும் உண்மை. ஆனால் சில கருத்துக்கள் உரம் குறையாமல் உள்ளன. சிலவற்றுக்கு உரம் தருகிறார்கள். ஏன்? எத்தகைய கருத்துக்களுக்கு? எந்தெந்த கருத்துக்கள், ஒரு சிறு கூட்டத்தின் சுகபோக வாழ்வுக்கு வழி செய்கின்றனவோ, ஒரு கும்பல் பாடுபடாது வாழ மார்க்கமாகிறதோ, அந்தக் கருத்துக்கள் காலவேகம், பொது அறிவு பரவுதல் என்பவைகளில் தாக்கப்பட்டாலும், எந்தச் சிறுகூட்டம், அத்தகைய கருத்துக்கள் நிலவி இருப்பதால் தங்களுக்கு இலாபம் இருக்கிறதோ அவைகளை கெடவிடாதபடி பார்த்துக் கொள்வதிலும், உரம் போடுவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது இங்கு அந்தச் சிறு கூட்டமே, "பிரச்சார யந்திரம்" சிக்கிக்கொண்டிருப்பதால். தங்கள் சுக வாழ்வுக்கு உகந்த கருத்துக்கள் அழிந்துபடாமல் பார்த்துக் கொள்ள அவர்கள் யந்திரத்தைப் பயன் படுத்துகிறார்கள்.

* * *

கம்பவுண்டர் கேசவன், டாக்டர் தாமோதரத்துக்குத் தொல்லை தராமல் இதயமாகப் பேசி ஒழுங்காகவே நடந்து வந்தான். "கேசவா! கேசவா!" என்று டாக்டர் ஒரு நாளைக்கு நூறு முறையாவது கூப்பிடுவார். அவனும் அன்பும் பணிவும் தோன்றவே நடப்பான். கேசவன் டாக்டர் தாமோதரனுக்குக் கம்பவுண்டர்தான். ஆனல் தந்தைக்கு மகனுயிற்றே! அவன் தந்தையோ மணிமந்திர வைத்தியர்! அதாவது நோய்தீர மருந்தும் தருவார். மந்திரமும் செய்வார். டாக்டர் நாடி பார்த்து, நாக்கை நீட்டச் செய்து பரிசோதித்து மருந்து எழுதிக் கொடுத்தான். பிறகு நோயாளி உள் அறைக்கு வந்து சீட்டைக் காட்டியதும் கம்பவுண்டர் கேசவன் அவனைப் புன்னகையுடன் வரவேற்று உட்காரச் சொல்லிவிட்டு, மருந்து கலக்கிக் கொண்டே பேசுவான்.

"இந்த வயித்துவலி எவ்வளவு காலமாக இருக்குது சார்."

"அதை ஏன் கேக்கிறிங்க. என்னமோ என் போறாத வேளை, போன கார்த்திகையிலிருந்து இந்தக் கர்மம் என் உயிரை வாட்டுது."

"ஐயோ! பாவம்! ஆமாம், ஏன் இவ்வளவு நாளாய் மருந்து சாப்பிடவில்லை?"

"சாப்பிடவில்லையா? இதுவரையிலே என் வயித்துக்குள்ளே ஒரு கிணறு மருந்து போயிருக்கும். டாக்டர் சேகர், டாக்டர் லோகநாதன், கெவர்மெண்டு ஆஸ்பத்திரி எல்லாம் முடிஞ்சி, இப்போ இங்கே வந்தேன்."

"ஓஹோ! பல இடத்திலே மருந்து சாப்பிட்டாச்சா. (ஒரு விநாடி மௌனம்) டாக்டர் என்ன செய்கிறார் என்று கொஞ்சம் எட்டிப் பாருங்கோ.

(பார்த்துவிட்டு வந்து)

"பேப்பர் படிக்கிறார்" .

"சார் ஒரு விஷயம் உங்க மனசோடு போட்டு வையுங்கோ. இப்படிப்பட்ட வயித்து வலிக்கு மருந்து சாப்பிட்டா மட்டும் போதாது; உடம்பர் ,லொத்தது மருந்தாலே போகும். சிலது மந்திரிச்சாதாம் போகும். மகாதேவ முதலியாருக்கு இரட்டை கட்டின பிறகுதான் வலி நின்றது."

"அப்படியா! எங்கே மந்திரிக்கிறார்கள்."

"நீங்க தப்பாக நினைக்கக்கூடாது. என் தகப்பனார் கூட மந்திரிப்பார்"

"பெயர்!"

"மணிமந்திர ஔஷதாலயம் மன்னார் செட்டியார்"

இந்தப் பேச்சுக்குப் பிறகு நோயாளி மணி மந்திர அவுஷதாலயம் போகிறான்! கேசவன் கம்பவுண்டராக இருந்து டாக்டருக்கு என்ன பயன்?

இங்கு இத்தகைய கேசவன்மார் கூட்டம் இருக்கிறது. அவர்கள் புத்துலகச்சாமி யாலயத்திலே கூடப் பணி புரிவர், ஆனால் பழைமையின் ஏஜெண்டாகவே மறை முகத்தில் வேலை செய்வார். இந்தக் கூட்டமே புராணக் கருத்துக்களிலே தமது சுயநலக் காரியத்துக்கு ஏற்றவைகள் பழுதுபடாதபடி பார்த்துக் கொள்வது. அதன் பயனாகவே அந்தக் கருத்துக்கள் நாட்டு மக்களிடை இன்னும் நடமாட முடிகின்றன. இல்லையானால், புராணகால எண்ணங்களிலே எவ்வளவோ மாறியிருக்க, எத்தனையையோ விட்டுக்கொடுக்க இதோ கூட்டம் தயாராக இருக்க, ஒரு சில கருத்துக்களை மட்டும் விடாப் பிடியாகப் பற்றிக்கொண் டிருப்பானேன்? விட்டுவிட மறுப்பானேன? உலகம் தட்டையாக இருந்தது என்ற எண்ணத்தைக் கொண்டுதான் இரணியாட்சதன் பூலோகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய் கடலுக்குள் ஒளித்துவைத்தான் என்று புராணம்

எழுதப்பட்டது, இன்று எந்தச் சாஸ்திரியாவது, புரா ணிகராவது பூமி உருண்டை வடிவம் என்று பள்ளிக் கூடங்களிலே போதிக்கப் படுவதைக் கண்டிக்கிறார் களோ? தங்கள் வீட்டுச் சிறுவர்களையாவது, "வேண்டா மடா அந்த விநாசக் கருத்து! வேதபுராண இதிகாசாதி கள், அங்ஙனம் கூற வில்லை அவைகளிலே கூறப்பட்டக் கருத்துக்கு மாறாகச் சொல்லப்படும் பாடம். கேவல நாஸ்திகம்," என்று கூறித் தடுக்கிறார்களோ? "பூமி உருண்டை" என்று போதிப்பவர்களை நாஸ்தீகர்கள் என்று நிந்திக்கிறார்களோ? இல்லை! விட்டுக் கொடுத்து விட்டார்கள். பூமி, தட்டையாகவோ, உருண்டையா கவோ இருக்கட்டும் நமக்கென்ன என்று இருந்துவிட் டார்கள். அல்லது பூமி உருண்டைதான் என்று, ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார். ஆகவே அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும் என்று கூறிச் சமாதானம் பெற்றுவிடுகிறார்கள். ஏன்? இதிலே இலாப நஷ்டக் கணக்கு பார்க்க வேண்டிய அவசியம் இல்லை பூமி தட்டையாக இருக்கிறது என்று நம்பினால்தான் தட்சணை, உருண்டை என்று ஊரார் ஏற்றுக்கொண் டால் கிடைக்காது என்ற நிலைமை இல்லை. சுயநலம். இந்தக் கருத்து மாற்றத்தினால் கெட வில்லை. ஆகவே, தாராளமாகப் புதுக் கருத்தை ஏற்றுக்கொண்டு, பழைய கருத்துக்குச் சீட்டு கொடுத்து விடுகின்றனர். ஆனால் வேறு சில கருத்துக்களை மாற்றிக் கொள்ளச் சம்மத மில்லை சுயநலமும் அந்தப் பழைய கருத்தும் ஒன்றாக ஒட்டிக் கொண்டிருப்பதால்.

பூமி உருண்டை என்ற கருத்தை ஏற்றுக் கொண் டால்தான் பூசுரக் கூட்டம் நஷ்டம் காண்பதில்லை. ஆனால், தேவலோகம், என்று ஒரு தனி இடம் கிடை யாது. இறந்தவர்கள் அங்கு செல்வதும் புரட்டு, அப் படி அவர்களை அங்கே குடி ஏறச் செய்வதாகவே, இங்கு பூதேவருக்குத் தட்சணை தரப்பட்டு சில சடங்கு கள் செய்யப்படுகின்றன இது பொருள் பறிக்கும் தந்தி

ரம்,என்ற புதிய கருத்தை ஏற்றுக் கொண்டால் பழைய கருத்தை நம்பி மக்கள் தரும் பணம் கிடைப்பது நின்றுவிடும் ஆகவே நஷ்டம். எனவே, தமக்கு நஷ்டம் தரக்கூடிய புதுக் கருத்துக்களை அப்பூசுரக் கூட்டம்,எங்ஙனம் வரவேற்கும்? எதிர்க்கத்தானே செய்யும். ஆயிரம் தத்துவத்தை விட அரை ரூபாய் தட்சணைமேல் என்று எண்ணும் கூட்ட மல்லவா அது எங்ஙனம அந்தக் கூட்டம் சுயநலத்தை இழக்கத் துணியும்? அதற்குப் பிரத்தியேகமான நற்குணம் வேண்டுமே, எங்ஙனம் அதனைச் சுய நலத்தையும் சுகபோகத்தையும் பாரம்பரியமாக ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரும் கூட்டம் பெறமுடியும்? இதனை உணராத சிலர், வேறு எத்தனையோ கருத்துக்கள், நாளா வட்டத்திலே நசித்துப் போனது போலவே, பொது அறிவு பரவின,தால் அவை புதையுண்டது போல, மிச்ச மிருக்கும் நச்சு நினைப்பும் பிச்சுப் பிள்ளை விளையாட்டும் .தாமாகவே ஒழிந்து போகும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையிலே வடலூராரும், "**கண்மூடி வழக்க மெல்லாம் மண் மூடி போக**" என்று கூறினார். கூறினதைக் கீதமாக்கிக் கொண்டனரே ஒழியக் கண்மூடி வழக்கத்தை யார் வெட்டிப் புதைக்க முன் வந்தனர். அருட்பாவைப் பூசத்துக் கேற்ற பாசுர மாக்கினரே யொழிய பூசுரப் புரட்டு ஒழிப்புக்கான மார்க்கமாகக் கொண்டவர்கள் யார்? எனவே தான், ஒரு கூட்டத்துக்கு அது பார்ப்பனக்கூட்டமாக இருப்பதால்என்று மட்டு மல்ல, எந்தக் கூட்டமாக இருப்பினும் சரியே, ஒரு கூட்டத்தின் சுய நலத்தை வளர்க்கும் எண்ணங்களைச். சுலபத்திலே மடிய விட மாட்டார்கள். இங்கு மட்டு மல்ல, எங்கும்! அந்த எண்ணங்களைத் துணிவுடன் தாக்கித் தகர்த்தா லொழிய அவை மாளா.அவை மாள ஒட்டாது தடுக்க, சகல சாதனங்களையும் உபயோகிக்க, சுயநலக் கூட்டம் ஒரு துளியும் தயங்காது. அந்தச் சாதனங்களிலே மிக முக்கியமானது, புராணப்,

பிரசாரம்! இதனை, நமது நண்பர்கள், இலக்கியச் சுவைக்காக என்றோ, கல்வெட்டு வரலாறு என்றோ எண்ணிக் கொண்டு, செய்பவர்களாகக் கூட இருப்பர். கதை கிடக்கட்டும். இதிலே காணக் கிடைக்கும் வரலாற்றுத் துணுக்குகளின் மூலம் தமிழகத்தைக் காண்கிறோமே என்று பூரிக்கக் கூடும்.

பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட்டு எறிய''

என்று செய்யுளைப் பாடி, "என்னே! இந்நாட்டு வளம்! உழவர் உழுகின்றனர்! உழவுதானே உயிர்கட்கு ஆதாரம்! ஆதலானன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் "உழுதுண்டு வாழுவாரே வாழ்வார்" என்றார். அத்தகைய உழவு! ஆங்கு மரங்களிலே மந்திக் கூட்டம்! அவை பலாவினைப் பறித்தன. பார்த்த உழவர், மந்தியைவிரட்டுகின்றனர்.யாங்ஙனம்? கல்கொண்டு இலை! கல் ஏது? கட்டாந்தரையோ அது! அல்ல! வயல்! எனவே உழவர், அங்கு கிடந்தது கொண்டு, மந்தியினை விரட்டலாயினர். என்ன கிடைத்தது? அங்கேதான் மெய்யன்பர்கள், நம் தமிழ் நாட்டின், தவம் நிறைந்த தமிழகத்தில், செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே என்று இந்நாள் புலவர் இறும்பூதெய்திப் பாடியபடி பண்பு நிறைந்த தமிழகத்திலே, எத்தகைய வளம் இருந்தது என்பதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். வயலிலே சங்குகள் கிடைத்தன! வளமான நாடு இதற்கு உண்டோ ஈடு? சங்குகள்! சங்குகள்! உழவர் கண்டது சங்குகளை! வாரினர்! வீசினர்!" என்று செய்யுளைப் பிழிந்து பிழிந்து செந்தமிழ்ச் சுவையை சொட்டச் செய்து, புராணமே யாயினும், புதுமைக்கு ஒவ்வாது எனினும், புதைந்துள்ள பொன்னைக் காணீர். கலைக் கருவூலத்தைப் பாரீர்," என்று கூறப் புராணங்களைப் பயன்படுத்திக் கொள்பவர்களாகச் சிலர் இருக்

கக் கூடும். எக்கருத்துக்காக, எம்முறையிலே இவர்கள் அந்தப் புராணத்தைப்பற்றிப் பேசினும் சரியே, பொது வாக அம் முறை, புராணப் பிரசாரம் நடைபெறுவ தாகவே முடியும், விளையும், இவர்கள் நெஞ்சை அள் ளும் கலை பரவுவதாகவோ, வரலாறு பரபுவதாகவோ இராது. விளைவு கற்பூரக் கடையின் கணக்கும், கன பாடியின் தொந்தியும் பெருத்து விடுவதாகத்தான் இருக்கும்.புராணப் பிரசாரத்தின் பலனைப் பூசுரக் கூட் டம் இனிமையாக அனுபவிக்கும், இதனை, அக்கூட்டத் துக்குக் கூலியுமின்றி செய்த "சூரலோர்," புலவர், படிப்பாளி. சூனுமானுவின் வைரி, அவர் நாவிலே சரஸ் வதியே தாண்டவமாடுகிறாள். சகலகலா வல்லவர் என்ற ஓசைப் பட்டங்களைப் பெற்றதன்றி வேறு உருவான பலனையும் பெறுவதில்லை. இதனை அவர்கள் உணருவ தில்லை. உணர்ந்தோர் உரைத்தாலோ. சீறுமளவும் இருப் பதில்லை!சிவநேயர்களின் சீற்றம் சிரிப்புக்கிடமானதே!! இங்கே சீறுகின்றனர் இச் செல்வர்கள். ஆனால் செல் புகுந்த ஏடுகளைச் செந்தமிழ் கலந்து நாட்டினருக்குத் தரும் இவர் தம் "சேவையால்" பட்டமரம் துளிர்த்த தைப் போல, பாழ்பட இருந்த தமது சுகபோக வாழ்வு மீண்டும் வளமாகிறது என்பதை உணர்ந்து, அந்தச் சிறு கூட்டம், சிரிக்கிறது!! பாவையர் 'படப்பிடிப்பும்' கலைச் சுவையும். வரலாற்றுத் துறையும், உள்ளன என்று புராணங்களைப் போற்றிப் புகழ்பவர்கள். ஆரி யத்தின் ஏஜண்டுகள்-கமிஷனும் கிடையாது!! காமக் கூத்து நடைபெறும் இடத்திலே கற்பூரக் கடை வைப் பது கடவுள் நெறியைக் கயவரும் உணரச் செய்யும் புண்ய காரியமாகும் என்று கருதிச்செய்பவர் உண்டோ? செய்தால் பயன் என்ன காணமுடியும்! அதுபோல, காமக்கிருமிகள் நெளியும் பல பாடல்களுக்கு இடை யிடையே கடவுள் சொரூபத்தைக் காட்டுகிறோம் பாரீர். என்று புராணம் படிப்பதும், பயனற்ற முறையாகும், புராணப் பிரச்சாரத்தின் விளைவாக. சன்மார்க்கம் பரவு

முடியாதபடி போகிறது என்பதும்மட்டுமல்ல, கலைக்காக, வரலாற்றுக்காக. என்று எதைக்கூறி அந்தக் காரியத்தைச் செய்தாலும் சரியே, அச் செயல் பூசுர அரசு அமைக்க புலவர் முரசு கொட்டுகிறார் என்றே பொருள். இந்த காரியத்துக்கா தமிழ் அறிவு பயன்படுத்தப்பட வேண்டும்! பெற்ற மகனைப் பெருநிதி படைத்தோனாகக் காணமுடியாவிட்டாலும், பிறன் மனை நுழையாதபடி யாவது தடுக்கக்கூடாதா—தடுத்தல் வேண்டாமா? கற்ற தமிழின் துணை கொண்டு, சமுதாயத்திலே கப்பிக் கொண்டுள்ள காரிருளை நீக்கும் கடமையைச் செய்யத்தான் தவறிவிட்டார்களே, அத்தமிழை ஆரிய உமிழ் நீரிலே ஆழ்த்தும், அக்ரமத்தையாவது செய்யாதிருக்கக் கூடாதா?

* * *

ஒரு முகம், எட்டுக் கரங்கள்! பொன்னிறமான உடல்! பொற் பட்டு அணிந்து, பொன்னாபரணம் பூண்டு, கரங்களில், தூபம், கமலம், கமண்டலம், மணி, ஜெபமாலை ஆகியவைகளை ஏந்திய வண்ணம், ஒற்றைச் சக்கரமுள்ள தேரில், வெண் தாமரையைப் பீடமாக அமைத்து அதன்மீது அமர்ந்து, மேருமலையின் இடப் புறமிருந்து கிளம்பி, அதனை வலம் செய்து, இந்திரப் பட்டினம், யமபட்டினம், வருணன், சோமன் ஆகியோ ரின் பட்டினங்களைத் தாண்டி, மீண்டும் இந்திரப் பட்டி னம் திரும்புவான்! தேருக்கு சக்கரம் ஒன்று—குதிரை கள் ஏழு!!

தேரிலே எவ்விதமான கோலத்துடன், **சூரிய தேவன்,** கிளம்பும்போது, புலத்தியன், புலகன், வசிட் டன், அங்கிரா, கௌசிகன், பரத்துவாசன், பிருகு, கிருது, கௌதமன், காசிபன், சமதக்னி, அத்திரி, என் போர், மாதத்துக்கு ஒருவராக வந்திருந்து தோத்திரம் செய்வர்.

கங்கன், தக்கன், நாகன், கம்பளாச்சுவன், நீரன், ஐராவதன், ஏலாபத்திரன், கார்க்கோடகன், சங்கபாலன், தனஞ்சயன், பரமன், வாசுகி, எனும் நாகங்கள், ஒவ்வொன்று ஒவ்வொரு மாதம், முறை வைத்துக் கொண்டு, எழு குதிரைகள் பூட்டப்பட்ட அந்த ஒற்றைச் சக்கரத் தேரை இழுப்பார்கள்!!

இவ்வளவு மட்டுமா! தேரின் முன், ஆடல் பாடலும் உண்டு. மாதத்துக்கொருவராக முறை வைத்துக் கொண்டு ஊருணயு, தும்புரு, நாரதர், ஆஹா, ஊஹூ, விசுவாவசு, திருதிராட்டிரன், சூரியன், வாச்சன், உக்கிரசேனன், வரருசி, சித்திரன், காந்தரு, என்பவர்கள் பாடுவர், கிருகத்தலை, சிகத்தலை, மேனகை, சகசந்நிசை, பிரமலோசத்தி, அநுமலோசை, கிருதாசி, விசுவாசி, உருப்பசி, பூர்வசித்தி, திலோத்தமை, அரம்பை, எனும், அழகிகள் ஆடுவர்! நாள் தோறும், தேரேறி, மேருவை வலம் செய்யும், ஓயாத வேலை இருக்கிறதே என்பதற்காகச் சூரியதேவன் குடும்ப காரியத்தைக் கவனிக்காமலிருந்துவிட்டார், என்று எண்ணிவிடாதீர்கள். அவருக்குத் தேவிமார் இருவர்!—ஒருவரிலிருந்து மற்றொருவர் தோன்றினர். சஞ்ஞா தேவியாரைச் சூரியதேவன் தாரமாகக் கொண்டு, எவ்வளவோ வேலைகளுக்கிடையில், வைவச்சுதமநு, யமன், யமுனை, ஆகிய குழந்தைகளுக்குத் தகப்பனானார். மூன்று குழந்தைகளை ஈன்றெடுக்குமட்டும். சஞ்சாதேவிக்குக் காதல் தென்றலாகி, சூரியனுடைய கனலைத் தாங்கும் நிலையைத் தந்தது போலும்! பிறகோ, தேவியார், சூரியனின் வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தவித்து, தன் 'சாயலை' ஒரு பெண்ணாக்கிவைத்து விட்டுத் தாய்வீடு சென்றுவிட்

டார்! சூரியதேவன், அந்தச் சாயாதேவியுடன் சரசசல்லாபமாகவே இருந்து வந்தார்—வேறு மங்கை என்று அறியாமலேயே.

சிலகாலம் சென்றபிறகே, தன் சரச சல்லாபத்துக்கு இடமளித்து வரும் இன்பவல்லி, சஞ்சாதேவி அல்ல, சாயாதேவி, என்பது சூரியதேவனுக்குத்தெரிந்ததாம். தெரிந்ததும், தேவியைத் தேடிக்கொண்டு சென்றார்—அம்மையார், யாதுகாரணம் பற்றியோ பெண் குதிரை உருவெடுத்து, எதோ ஓர் மலைச்சாரலில், தவமிருந்து கொண்டிருந்தாராம். கண்டதும் சூரியதேவன், "தேவி இது என்ன கோலம்! என்னை விட்டுப் பிரிந்த காரணம் என்ன?" என்று கேட்டாரா? இல்லை! அவரும் உடனே, ஆண்குதிரை உருவெடுத்து, குதிரை யம்மையைத் துரத்தினர்! அது வெறும் வேட்டையாகவில்லை-காதல் விளையாட்டாகி, சூரியக் குதிரையின் நாசியிலிருந்து வீரியம் ஒழுக, அசுவினி தேவர்கள் பிறந்தனர்!

* * *

இது, நம் நாட்டுச் சூரியன்! ரிஷி சிரேஷ்டர்களும் தவமுனிவரும், வேத வித்தகரும, கண்டறிந்த உண்மை!

ஆஹா! ஊஹூ! பாட, அரம்பை ஊர்வசி ஆட, ஒற்றைச் சக்கரத் தேரேறி, சுற்றி வருபவர், சூரிய தேவன்!

இந்த 'உண்மையைக் கூறினவர்கள், சாமான்யர்க' ளென்று அல்ல, சகலகலா வல்லவர்கள் என்று மட்டுமல்ல, மும்மலமடக்கி மூலத்தைக் கண்டறிந்து, கடவுளுடன் தோழமைபூண்ட தூயவர்கள், என்று கூறப்படுகிறது, ஊனக் கண்களுக்குப் புலனாகாத உண்மை

ஞர் அவர்கள் தமது ஞானக்கண்களால் கண்டறிந்த னர், என்று கூறப்பட்டு, நம்பப்பட்டு வருகிறது. சூரிய தேவனுக்கு வழிபாடும், அதற்கான முறையும் வகுக்கப் பட்டிருக்கிறது.

அவர்கள் கண்ட சூரியனுக்கு ஒரு முகம், எட்டுக் கரம்! ஞானக்கண்ணினர் கண்ட காட்சி, கோலாகல மானது! ஏழுகுதிரைகளும் இழுக்க, பாம்புகளும் கூடச் சேர்ந்து இழுக்க, ஆடல் பாடலுடன், அந்தத் தேர் மேருவை வலம்புரிவதைக் கண்டனர் — கண்டோம் என்று கூறினர்—சரி, என்று ஒப்புக்கொண்டவர்கள் உத்தமர்களெனப் பட்டனர், சந்தேகித்தோர், நாத்தீகர் என்று மதிக்கப் பட்டனர்.

* *

இனி, ஞானக்கண்ணினர் கண்ட சூரியன், இன் றைய விஞ்ஞானக் கண்ணினருக்கு எப்படிக் காட்சி அளிக்கிறான், என்பதை கவனிப்போம். கவனிக்கவேண் டியதற்குக் காரணம் பல, அதிலே மிக முக்கியமானது இப்போது நாம் வாழும் நாட்களில், ஞானக் கண்ணின ரின் உதவியை அல்ல,விஞ்ஞானக் கண்ணினரின்உதவி யையே, பெரிதும் பெறுகிறோம். இரு 'கண்ணினருக் கும்' உள்ள மாறுதல், ஒருபுறமிருக்க, வேறோர் உண் மையை உணரவேண்டுகிறோம். ஞானக்கண்ணினர், கண்டதாகக் கூறும் சூரிய தேவனின் கோலத்தை, இங்கே உள்ள பாமரர் மட்டும் தான் ஏற்றுக்கொண் டுள்ளனர்—உலகிலே வேறுஎங்கும், சூரியனுக்கு உள்ள கரம் எட்டு, முகம் ஒன்று, தேவி இரண்டு, என்று கூறு வார் இல்லை, இங்கேயும், ஞானக்கண்ணினர் காட்டிய சூரியனை, நம் வீட்டுப் பள்ளிச்சிறுரும், காண்பதில்லை,

அவர்களும் அகில உலகிலேயும் உள்ள சாதாரண அறிவுள்ளவர்கள் அனைவருமே, வேறோர் சூரியனைத்தான் காணுகிறார்கள்.

*   *   *

ஞானக்கண்ணினர் கண்ட சூரியன் தேர் ஏறிச் சுற்றும் ஒரு தேவன்! விஞ்ஞானக் கண்களுக்கு, தேவனும், தேரும் சக்கரமும் தெரியவில்லை—அவர்கள் காண்பது சூரியன் எனும் ஒரு கோளத்தை—அதிலும் மேருவைச் சுற்றிவரும் காட்சியை அல்ல, பலகோளங்கள் தன்னைச் சுற்றிவரும் நிலையில் உள்ள சூரியனைக் காண்கிறார்கள். ஞானக்கண்ணினர், கண்டதாக மட்டுமே கூறினர், கருத்துக் குழம்பி இருந்த காலத்தில். இந்த விஞ்ஞானக் கண்ணினர், தாம் கூறுவதைக் கண்டவர்கள், மட்டும்மல்ல, காட்டுபவர்கள், புண்யவான்களுக்கு மட்டும் தெரியக்கூடிய மந்திர உச்சாடனத்தால் அல்ல, அதற்கேற்ற விஞ்ஞானக் கருவியின் துணைகொண்டு, பார்க்கலாம்! நீ கூறும் விதமாகவா சூரியன் இருக்கிறது" என்று இங்குள்ள, சாதாரண மடிசஞ்சிகூட, அறைகூவிக் கேட்டால், 'வா அப்பா!' என்று அழைத்துச் சென்று, நுண்ணறிவினர் தயாரித்த தொலைநோக்கிக் கருவியின் மூலம், கோளங்களைக் காணவைக்க முடியும்! "எட்டுக் கரத்திலே, நாலுமட்டும் தெரிந்தால் கூடப் போதும்! ஏழு குதிரைகளில் மூன்று தெரிந்தால் போதும்" என்று எவ்வளவு கெஞ்சினாலும், கூத்தாடினாலும், கேலிக்குரலில் கூறினாலும், அறைகூவி அழைத்தாலும், இங்கே உள்ள சங்கராச்சாரியாரோ, தம்பிரானோ, வேதாந்தியோ, மதவாதியோ, சூரிய தேவனைக் காட்டமுடியாது! ஏனெனில், ஆஹா! ஊஹூ! பாடிட, அரம்பை ஊர்வசி ஆடிட, அரசு செலுத்தும் சூரிய

தேவன், என்பது மூட நம்பிக்கை—மூலாம் பூசப்பட்ட மூடநம்பிக்கை, உலகம் ஏற்குமா, இந்த மூட நம்பிக் கையைப் புகுத்திய சூக்ஷமதியினர், சொர்ணே உள்ள வர்களானுல், விஞ்ஞானச் சூரியனே விரட்ட வேண் டாமா, ஏட்டிலிருந்து, அறிஞர் எண்ணத்திலிருந்து! தத் தமது வீட்டுச் சிறுவர்களின் மனதிலிருந்தே கூட ஓட்ட முடியாதே, விஞ்ஞானச் சூரியனே!

* * *

ஆகாய வெளியில் காணப்படும் அண்டங்களுக்குள், சூரியனும் ஒரு கோளம். இதை அக்னிமேகங்கள் சூழ்ந் திருக்கின்றன. இதனே நடுவாகக்கொண்டு எட்டுக் கிர கங்கள் சுற்றி வருகின்றன. அவைகள் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி. யுரானஸ், நெப்ச்யூன, என்பவை.

இதன் சுற்றளவு சுமார் 26 இலட்சம் மைலுக்கு அதிகம்.

குறுக்களவு 8 இலட்சத்து 70 ஆயிரம் மைலுக்கு அதிகம்.

இதன் பரப்பு, பூமியைக் காட்டிலும் 12½ இலட்சம் மடங்கு பெரிது.

இதன் கனம் பூமியைக் காட்டிலும் 13 இலட்சம் மடங்கு அதிகம். இது பூமிக்குச் சுமார் 9 கோடியே 28 இலட்சத்து, 30 ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக் கிறது.

இதில் பல புள்ளிகள் உள்ளன. அவை 1000 மைல் ஆழமுள்ளதாய் உள்ளன.

* * *

இவ்வளவும் நாரதர் அருளால் கிடைத்த ஞான மல்ல—பகல் என்றும் இரவென்றும் பாராமல், முடிவு களைத் துவக்கங்களாக்கித் தொடர்ந்து நடத்திவந்த ஆராய்ச்சியின் விளைவு.

சந்திரனை நாம் நமது புராணத்தின்படி தாரா வுடன் கள்ளக் காதல் நடத்தியவனாகச் சித்தரித்து, அத்துடன் திருப்தி அடைந்தோம், ஆனால் அறிஞர்கள் சந்திர மண்டலத்தைப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள்! பல புது உண்மைகளை—ஆச் சரியம் தரும் உண்மைகள் மட்டுமல்ல, பலன் தரும் உண்மைகளைக் கண்டறிந்தனர். நாம் சூரியதேவன், சந் திரதேவன், பூமாதேவி, சமுத்திரராஜன், என்று கதை கள் படித்து, அவைகளை நம்பி, அதற்கேற்ப நமது வழிபாட்டு முறைகளை வகுத்துக்கொண்டிருந்த நாட்க ளிலே, மற்ற நாட்டு 'மேதைகள்' தமக்குத் தெரிந்த அளவு உண்மை போதாது என்று, மேலும் மேலும் உண்மையைக் காண உழைத்தனர். ஞானக் கண்ணி னர், விண் மீன்களைக் காட்டி, அதோ அருந்ததி! மின் னும் அவளுடைய மேலான கதையைக் கேளீர், என்று கதை கூறினர்—நட்சத்திரங்கள் பலவற்றுக்கும் நவ ரசம் பொருந்திய கதைகளைக் கூறினர்—அந்த நாட்க ளில்—ஆனால் அறிஞர்கள் இந்தக் கதைகளைத் தாண் டிச்சென்று புது உண்மைகளைக் கண்டறிந்தனர்—விண்ணிலே, தெரிவது எல்லாம் நட்சத்திரங்கள் அல்ல அவைகளிலே. நட்சத்திரங்களும் உண்டு, கிரஹங்க ளும் உண்டு. நட்சத்திரம் மின்னும், கிரஹங்கள் ஒளி யுடன் விளங்கும் இரண்டும் வெவ்வேறு வகையின. நட்சத்திரங்கள் சொந்தத்திலே ஒளிவிடுவன. கிர ஹங்கள் சூரிய ஒளியைப் பெற்று பிரகாசிப்பன. கிர ஹங்கள் உள்ள இடத்திலிருந்து பலப்பல ஆயிரம்

மைல்களுக்கு மேலே, நட்சத்திரங்கள் உள்ளன என்று கண்டறிந்து கணக்கிட்டுக் கூறினர்.

சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் என்பவைகளுக்கு நாம், ராகு கேது கதையைக் கூறி, பாமபுருக் கொண்ட தீயவர் சூரியனைச் சில சமயமும், சந்திரனைச் சில சமயமும், பிடித்து விழுங்க முயற்சிக்கும் சம்பவந் தான், கிரஹணம் என்றும் கிரஹண தோஷம் போக, இன்னவிதமான பூஜைகள் செய்யவேண்டுமென்றும் கதை பேசிக்கொண்டு, வாழ்க்கையை அதற்கேற்றபடி அமைத்துக்கொண்டு, கிரஹண காலத்தில், தர்ப்பையைக் கிள்ளி பாண்டங்களில் போட்டுத் தோஷத்தைப் போக்குவதும், 'குளத்தங்கரையில் உட்கார்ந்து, முணுமுணுகக்கும் ஐயருக்குத் தட்சணை தந்தும் காலந் தள்ளிவந்த நாட்களில், விஞ்ஞானிகள் தொலைநோக்கி, நுண்நோக்கி, பெரிதாக்கி, எனும் கருவிகளைக் கண்டு பிடித்து, அவைகளின் உதவியைக் கொண்டு, வான நூலையும் கணிதநூலையும் தொடர்பாக்கி, கிரஹணம் ஏற்படும் காரணத்தை விளக்கிக் காட்டி அதன் தொடர்பாகப் பல புது உண்மைகளைக் கூறினர். நம் வீட்டுச் சிறுவனும், இப்போது, பாம்பு விழுங்கும் கதையை அல்ல. படிப்பது—விஞ்ஞானி கூறிடும் உண்மையைத்தான் படிக்கிறான். ரமணரின் திருவடி தொழுதாலும், அரவிந்தர் அடிபணிந்தாலும், ஆடியில் காவிடி எடுத்தாலும், மௌன விரதமிருந்தாலும், எவ்வளவு வைதீகராயிருந்தாலும், உலகக் கல்வித் திட்டத்தில்கூட அல்ல, நம்நாட்டுக் கல்வித் திட்டத்திலேகூட கிரஹணத்துக்கு ராகு கேது கதையை விளக்கமாக்கி, உலக முழுவதும் வேறு விதமாகக் கருதினாலும், நாம் அதனை ஏற்போம், நமது ஞானிகள் கண்டறிந்து கூறிய உண்மையையே நாம் நம்புவோம். கிரஹணம் ஏற்படுவது தேவலோகத் தகராறின் விளைவாக ஏற்பட்ட ராகு கேது சம்பவத்தால்தான் என்று மாற்றி எழுத முடியாது! மாநிலம் நகைக்கும்!

புது உண்மைகளை மறுத்துப் பேச முடியாத நிலை அந்தப் புது உண்மைகளின் விளைவுகளால் கிடைக்கும் பலன்களை விட்டுவிட மனமில்லாத நிலையும், அதேபோது, பழைய பாசத்தை நீக்கிவிடத் தைரியமற்ற நிலையும் ஒன்று சேர்த்து நமது நாட்டு மக்களில், விஷயம் தெரிந்தவர்களைக்கூட விசித்திர மனிதர்களாக்குகிறது! கிரஹணத்துக்கு, விடுமுறையும் விடுகிறது நமது சர்க்கார்—பழைய ஜாதகத்தின்படி—வான மண்டல ஆராய்ச்சி நிலையத்துக்குப் பணமும் செலவிடுகிறது, புது உண்மையை உதறித் தள்ள முடியாததால்.

கிரஹ தோஷம் போக, எள்ளு எத்தனை படி தேவை, கொள்ளு எவ்வளவு வேண்டும், பாக்கு எத்தனை, வெற்றிலை எத்தனை, பணம் எவ்வளவு, என்ற கணக்கெடுத்துக்கொண்டு, வாழ்க்கையை நம்மவர்கள் அமைத்துக்கொண்டிருந்த நாட்களில், அங்கு அறிஞர்கள் நட்சத்திரங்களின் எண்ணிக்கையைக் கணித்துக்கொண்டிருந்தனர். கண்ணாலே காணக் கூடியது சுமார் ஆறாயிரம். தொலை நோக்கி மூலம் கண்டறியக் கூடியவை சுமார் ஐந்து இலட்சம் நட்சத்திரங்கள்! இவைகளை கணக்கெடுத்து மட்டுமல்ல, படமெடுத்தும் காட்டியிருக்கிறார்கள், இப்போது கைவசம் உள்ள தொலை நோக்கிக் கருவியை விட, மேலான முறையிலே தயாரித்தால், மேலும் பல இலட்சம் நட்சத்திரங்களைக் காணக்கூடும் என்றும் எண்ணுகிறார்கள்—அதற்கான ஆராய்ச்சியும் நடத்துகிறார்கள்.

பூமியின் வடிவம் தட்டை, அதைத் தாங்கும் ஆதிசேஷனுக்குத் தலை ஆயிரம், பூமி ஒரு தேவி, பொறுமைக் குணமே அவள் பூஷணம், என்று கதை பேசவுடன், நமது அறிவுத் தாகம் அடங்கிவிட்டது, அங்கு அறிஞர்கள், இதுபோலக் கதைகள் பேசிக் களிப்படைந்துவிட வில்லை—ஆராய்ச்சி நடத்தினர்—விஞ்ஞானியின் கண்களிலே, நமது நாட்டு ஞானக் கண்ணுக்குத் தெரிந்த ஆயிரம் தலை நாகமும் தெரிய

வில்லை. அதனல் தாங்கப் படும் தேவியும் ஒரு வில்லை, மாருக, சதா தன்னைத்தானே சுற்றிக்கொண்டும், சூரியனைச் சுற்றிக்கொண்டும் வருகிற பூமிதான் தெரிந்தது! உலகம் இதைத்தான் உண்மை என்று ஏற்றுக்கொண்டதே தவிர—நாம் உட்பட—பூமிக்கு இலட்சணம் கற்பித்த தமது முன்னோர்களின் ஜடை முடியையும், காவி கமண்டலத்தையும், யாக யோகத்தையும் விளக்கி விளக்கிக் கூறினாலும், "பூர்வீக உண்மையை" ஞானக் கண்ணினர் கூறின உண்மையை ஏற்றுக்கொள்ளவில்லை! நம்மிலே, அகோர வைதிகருக்கும் அந்தத் து ணிவு பிறக்காது!

சூரியனுக்கும் நமக்கும் உள்ள தொலைவைத் தீர்மானித்திருக்கிருர்கள். பூமி, மணி ஒன்றுக்கு எழுபத்திரண்டாயிரம் மைல் வேகத்தில் சுற்றி வருகிறது என்று கணக்கிட்டுக் கூறுகிருர்கள், எடை, இயல்பு, வேகம், செல்லும் பாதை, எல்லாவற்றையும் கணக்கிட்டுக் கூறியுள்ளனர். ஞானக் கண்ணினர் கண்டறிந்ததாகக் கூறப்படும் உண்மைகள், வெறும் கற்பனை, அல்லது யூகம், அல்லது தத்துவார்த்தம், என்ருகிவிட்டன. உலக அறிவு மன்றத்தில் விஞ்ஞானக் கண்ணினர் கண்டறிந்து கூறிடும் உண்மைகளே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் புது உண்மைகளை அறிந்திருப்பது தான், கல்வி கற்றதற்கு அடையாளமென்றும், இந்த உண்மைகளை ஊருக்கு உரைப்பதுதான் உண்மை உபதேசம் என்றும், இந்த உண்மைகளுக்கும் அப்பால் இருக்கும் உண்மைகளை நாடிச் செல்வதுதான் அறிஞர் கடன் என்றும், அங்கெல்லாம் கருதப்படுகிறது. இங்கு, பழைய ஐதீகத்தை நம்புவதும், அதற்கேற்றபடி காரியங்கள் செய்வதும் விவேகியின் செயலாக மட்டுமல்ல, பக்தனின் இலட்சணமாகக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

0 0 0